# ஞானச்சுடர்






வைகாசி

209 ஆவது மலர்

2015

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்**
**மாண்டற் கரிதாம் பயன்.**

**பொருள் :** பிறர் பொருளை விரும்புதலால் உண்டாகும் செல்வத்தை விரும்புதலாகாது; அவ்வாறு விரும்பிப் பெறப்படும் செல்வத்தால் உண்டாகும் பயன் சிறப்பில்லாததாகும். (177)

**அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.**

**பொருள் :** ஒருவனது செல்வம் சுருங்காமல் இருப்பதற்குக் காரணம் யாது எனின், அது பிறன் விரும்பி வைத்திருக்கின்ற கைப்பொருளைத் தான் கவர ஆசைப்படாமையேயாகும்.

(178)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




ஊரும் பேரு மில்லா னுள்ளான்
நீரும் நிலனு மாகி நின்றான்
ஆரு மறியா வாற்ற லுடையான்
சீருஞ் சிறப்பு முடைய சிவனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 29

ஊசி முனையி லிருந்தோம்பு வோர்கள்
பேசி யறியார் பிறரை யுலகில்
நாசி வழியில் நடக்கும் பிராணனைத்
தேசி போலச் செலுத்த வல்லாரே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 30

என்னைக் கணமும் பிரியா விறைவன்
அன்னை போல வன்பு சான்றவன்
பொன்னைப் பொருளைப் போகத்தைத் தள்ளி
உன்னு வோர்க ளுறுவர் பரகதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2  சுடர் - 209

2015 பொருளடக்கம் வைகாசி


| | | |
|---|---|---|
| சமய உணர்வும்... | கு. சிவபாலராஜா | 01 -03 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| யாவும் சிவன் செயல் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 07 -09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 -14 |
| அன்பே சிவம் | சு. சிவராசா | 15 -17 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 18 -20 |
| நட்பின் பண்பும் பயனும் | நா. நல்லதம்பி | 21 -22 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 23 -24 |
| சைவத்திற்கு வழிகாட்டிய... | கே.எஸ். சிவஞானராஜா | 25 -27 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 28 -29 |
| பொலநறுவை மண்ணிலே... | க. தினேஸ்குமார் | 30 -31 |
| வைகாசிப் பெருவிழா | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 -34 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 35 -39 |
| உலக சமயங்களில் அன்பு | க. கணேசதேவா | 40 -43 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 44 -48 |
| தொட்ட குறைகளையும்... | பு. கதிரித்தம்பி | 49 -50 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 51 -53 |
| குருத்துவ மரபில்... | ச. லலீசன் | 54 -56 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 57 -60 |
| ஞானச்சுடர்மூலம்... | பா. சுதாகரன் | 61 -62 |
| உதவி செய்ய நினைக்கையிலே... | யூ.பி. ஆனந்தம் | 63 -64 |
| கோணேசிராஜபுரத்தில்... | சி. அபிராமி | 65 -68 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியானின் திருவருளாலேயே சந்நிதியான் ஆச்சிரமத்தில் பல செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் ஞானச்சுடர் மலர்வெளியீடும் ஒன்றாகும் என்று சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமையிலும் கிரமம் தவறாது ஞானச்சுடர் மலரானது வெளியிடப்பட்டு வருகின்றது. இனிவருங் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது தொடர்ந்து பிரகாசிக்க சந்நிதியானின் திருவருள் உண்டு என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

208ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி தவமலர் சுரேந்திரநாதன் (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரானது ஒவ்வொரு மாதமும் பல்வேறுபட்ட அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது. அவ்வாறான அம்சங் களைச் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறுகின்றனர்.

மேலும் அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலரை கடைகளிலோ, வேறு இடங்களிலோ பெற்றுக்கொள்ள முடியாது. சந்நிதியான் ஆச்சிரமத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ளும் சிறப்பையும் தன்மையையும் கொண்டுள்ளது.

ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றுள்ள விடயங்கள் மனித வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறுவனவாய் அமைந்துள்ளது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

இறுதியாக அவர் கூறுகையில் ஞானச்சுடர் மலரானது இனிவருங் காலங்களிலும் பல்வேறு வகையான அம்சங்களைக்கொண்டு திகழவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

பொய், கொலை, களவு, நம்பிக்கைத் துரோகம், கடமை தவறுதல் போன்ற தர்மத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களே தற்காலச் சூழலில் மலிந்து காணப்படுவதால் மனிதாபிமானம் என்றால் என்ன என்று கேட்கும் அளவிற்கு எமது சமுதாயம் கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. மனித தர்மம், மனிதாபிமானம் என்பவை அழிந்து போய்விட்டதா? என்று பல பெரியோர்கள் கவலைப்படுவதையும் நாம் காணமுடிகின்றது.

மனிதனுக்குள்ள பகுத்தறிவு அல்லது சிந்தனாசக்தி மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு மட்டுமன்றி அவனைத் தெய்வத்தன்மை உள்ளவனாகவும் உயர்த்தவல்லது. பகுத்தறிவுள்ள மனிதனது செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டி மனிதனது உயர்வான தன்மையினையும், அவனுக்கு வழங்கப்பட்ட பகுத்தறிவினால் தீர ஆராய்ந்து தான் செய்யும் செயல் சரிதானா என்பதை தீர்மானித்து அதன்படி ஒழுக வேண்டும். ஆனால் இன்று மனிதனுக்குள்ள ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு பல சந்தர்ப்பங்களில் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. வயது வேறுபாடின்றி பல மட்டங்களில் இவ்விதமான பகுத்தறிவுக்குப் புறம்பான செயற்பாடுகளை நாம் எமது சமுதாயத்தில் எதிர்கொள்ள நேரிடுவது ஒரு துர்ப்பாக்கியமான நிலையையே ஏற்படுத்துகின்றது.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்களை நாம் உற்றுநோக்குமிடத்து இவ்வகைச் செயற்பாடுகளுக்கு நமது சமூகமும் ஒரு காரணமான அமைகின்றது. சமூகத்திலுள்ள உயர்மட்டத்திலுள்ளவர்களும் ஏனோதானோ என்று இருப்பதனாலும் இவ்வகையான தர்மத்துக்குப் புறம்பான காரியங்கள் வளர்ந்து கொண்டே போகின்றன.

இவ்வகைச் செயற்பாடுகளை நாம் வளர விடுவோமானால் நமது சமூகம் குறிப்பாக இளம் சமூகத்தின் நிலை கேள்விக்குறியாகவே மாறிவிடும். இந்நிலையை மாற்றும் பொருட்டு நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூணுவோமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு

# செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

(தொடர்...

## விநாயகப் பெருமான் துணை

## காப்பு

திருச்சிற்றம்பலம்

ஓங்கார மாய்நின்ற பிரணவ சொருபனே
உலகுயிர்க ளிடர் களையவே
ஒரு பிடியுங் களிறுமாய்
உமையவளுஞ் சிவனுமே
ஒருமையுற அவதரித்தோய்

நீங்காத தந்தையது / முதுசொமாய் முக்கணும்
முறை வளரும் பிறையுமாகி
நின்றிந்த வுலகெலாம்
நிலவுமைந் தொழில் புரியும்
நிருத்தகண பதியைத் துதித்தேன்

பாங்காக வேதொண்டை மானாற்றங் கரையிலே
பரமன்மக னாய்விளங்கும்
பன்னிருகை யாறுமுகப் பாலனை நினைந்துநான்
பகர்பிள்ளைத் தமிழ் பாடவே

பூங்கா வனத்திடை பூத்துங் குலுங்கிடும்
புதுமலர் புனை மாலை போல்
புதுமையுடை எழுத்தசைசீர், தளையடி, தொடையுடன்
புனை செய்யுள் மாலை வரவே.

-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**P.T.** பாலச்சந்திரன்
(அவுஸ்திரேலியா)

**Dr T.** ஸ்ரீஸ்கந்தராசா
(லண்டன்)

பொ. கஜேந்திரகுமார்
(யாழ்ப்பாணம்)

ச. கந்தசாமி
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

மா. நாகலிங்கம்
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)

க. அரியரத்தினம்
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

கா. அருந்தவராசா
(பிரதானவீதி, தொண்டைமானாறு)

சி. தங்கவேல்
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

க. கிருபாகரன்
(சந்தைவீதி, உடுப்பிட்டி)

நா. சுந்தரம்
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)

ந. நற்குணராசா
(காளியானை, புத்தூர்)

**P.** சாந்தரூபன் **G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)

திருமதி இ. லோகநாதன்
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)

**Dr V.** பாலகிருஷ்ணன்
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)

இ. கணேசலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

ச. தெட்சணாமூர்த்தி
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. இராசரத்தினம்
(இளை. பிரதேச அத்தியட்சகர், நல்லூர்)
சி.மு. தம்பிராசா
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
த. விக்னேஸ்வரன்
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
அ. தனேஸ்வரன்
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
உரிமையாளர்
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
K. அருள்வேல்
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
ஆ. குலேந்திரநாயகம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
செ. கஜேந்திரன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
ஐ.கோ. சந்திரசேகரம்
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி T. பெரியதம்பி
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
செல்வி ரதிவதனி
(மாயக்கை, தம்பசெட்டி)
Dr P. சிவபாலன்
(உரும்பராய்)
மாணிக்கம் குட்டித்தம்பி
(வல்லியாவத்தை, கரணவாய்)
திருமதி சீ. ஆதவன்
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
சாவித்திரி அருணாசலம்
(தும்பளை, பருத்தித்துறை)
க. பொன்னுச்சாமி
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
V. சந்திரராஜா
(நிற்சாமம், சங்கானை)
நி. ஜெயந்தன்
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகுரு விமலேந்திரன்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புருடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டி வீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
செல்வி P. சயிலஜா
(மயிலங்காடு, ஏழாலை)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
சுப்பிரமணியம் கந்தையா
(சிவன்வீதி, ஆவரங்கால்)
திருமதி வேணுகா சிவகுமார் ஆசிரியை
(சுண்ணாகம்)
ச. தங்கராசா J.P
(இளை. அதிபர், சிறுப்பிட்டி)
வ. புவிநாதன்
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
ம.செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
க. செல்வராசா
(கட்டைவேலி, கரவெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
ஆ. வேலாயுதம்
(உலக்கைஓடை, கம்பர்மலை)
செ. ஸ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம், அல்வாய்)
பாஸ்கரன் சசிகரன்
(குட்டியப்புலம், வசாவிளான்)
கி. சரஸ்வதி
(போதராமடம், துன்னாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. சிவஞானம்
(கமலவதி, கரவெட்டி)
அ. சின்னத்தம்பி
(மாய்க்கிராயன், துன்னாலை)
கதிரவேலு சதாசிவம்
(அந்திரான், கரவெட்டி)
ச. ஜெகசோதிராசா
(ஆனைக்கோட்டை மேற்கு)
த. உருத்திரா
(ஆதவன் மில், புலோலி)
த. முருகானந்தா
(பிரம்படிலேன், கொக்குவில்)
A.T. கதிரவேல்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
த. யாழினி
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
S. சர்வேஸ்வரன்
(பாடசாலைவீதி, வட்டுக்கோட்டை)
ஆறுமுகம் மயில்வாகனம்
(இணுவில் கிழக்கு)
டனிஸ்ரன் சுகந்தினி
(கந்தரோடை, சுண்ணாகம்)
சின்னத்தம்பி அன்னம்மா
(இளை. ஆசிரியர், நீர்வேலி)
வே. பாண்டியர்
(கைதடி தெற்கு)
இ. இராஜேஸ்வரன்
(இருபாலைவீதி, கோப்பாய்)
சோ. இராசலிங்கம்
(ஆவரங்கால் கிழக்கு)
சி.க. இராசரெத்தினம்
(பத்தமேனி, அச்சுவேலி)
K. குலரெட்ணம்
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
சி. பாலபாரதி
(கற்கோவளம், பருத்தித்துறை)
சு. பானுஜா
(துன்னாலை, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய உணர்வும் மனித வாழ்வும்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

மனிதன் முதன் முதலில் இறைவனைப் பற்றி உணரத் தலைப்பட்டபோது அவனது மனத்தில் தன்னிலும் பார்க்க அல்லது தனது சக்திக்கும் அப்பாற்பட்டதொரு சக்தி இருப்பதை உணர்ந்தான். தனியொரு மனிதனது சிந்தனை, மனித குழாம் அல்லது மனித சமூகத்தினரின் ஏகோபித்த ஒரு பொதுக் கருத்தாக மாறியது. அதற்கும் அப்பால், குறிப்பிட்ட பகுதியில் வாழ்கின்ற மக்கள் தம் எண்ணக்கருத்துக்களை ஒன்றுகூட்டி, சமய உணர்வுகளை உணரத் தலைப்பட்டனர். அப்போதுதான் தனது அல்லது தமது சக்திகளுக்கும் அப்பால் தெய்வம் என்று ஒரு சக்தி இருப்பது தெரியவந்தது. உணர்வு, அனுபவம் ஆகிய இவை இரண்டிற்கும் இடையில் உள்ள ஒற்றுமையை அல்லது தொடர்பினை நாம் சரிவரத் தெரிந்துகொள்ள நம்மால் முடியாதுள்ளது. தன் சூழல் சார்ந்த அனுபவத்தினூடு மனிதன் இயற்கைக்கும் அப்பாலான ஓர் சக்தி இருப்பதைக் காண முடிந்தது. இதைச் சக்தி அல்லது ஆற்றல் என்று கூறலாம். இவற்றை நோக்கி மனிதன் தனது சிந்தனை, உணர்வு, செயல் என்பவற்றை ஒன்று கூட்டிச் சிந்தனை செய்தபோதுதான் "புனிதம்" என்னும் உண்மைப் பொருள் அறியப்பட்டது. அப்பொழுது அவன் தனது வாழ்விலுள்ள பிரச்சினையான பகுதிகளாகிய பிறப்பு - இறப்பு, நன்மை - தீமை, கோபம் - சந்தோசம், வாழ்வு - தாழ்வு, சிரிப்பு - அழுகை ஆகிய உணர்வு ரீதியானவற்றிலிருந்து தான் விடுதலை பெறவேண்டுமென்று தீர்மானித்தான். அதற்கு வழியாகவே "புனிதம்" என்ற விடயத்தைப் பயன்படுத்தத் தொடங்கினான். இந்த இடத்தில்த்தான் மனிதன் சமய உணர்வினால் உந்தப்பட்டான். புனிதத்தின் தொடர்ச்சியான செயற்பாடே "வழிபாடு" என்பது தோன்றக் காரணமாகியது. ஆகவே வழிபாடு என்பது புனிதத்தை தன் வயப்படுத்த மனிதனால் தெரிந்தெடுக்கப் பட்டதொரு முயற்சியாகும். அல்லது இதை மனப்பாங்கு (Attitude) என்றும் கூறலாம்.

மனிதன் தான் தனித்து வாழ நேர்ந்த போது தன்னுடன் யாரோ துணை இருப்பதாகவும், தான் தனித்து விடப்படவில்லை என்னும் உணர்வோடும் வாழத் தலைப்பட்டான். அவ்வாறு துணை நிற்பவர் இறைவனைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது எனத் துணிந்தான். எனவே தனிமைச் சிறையில் வாடுபவனோ, தமது துணைவர்களையும் உறவினர்களையும், சகபாடிகளையும் இழந்து வாழ்பவனும், தாம் தனித்து விடப்படவில்லை என்றும், தமக்கு தெய்வம் துணை நிற்கிறது என்னும் உணர்வுடன்தான் வாழ்வதை நாம் உணரலாம். வியப்பு, பயம், பயபக்தி ஆகிய உணர்வுகள்தான் ஈற்றில் தெய்வீக உணர்வுகளாக மாறின. அவற்றின் தொடர் முயற்சிகள்தான் "வழிபாடு" என்பது. மரபு ரீதியாகப் பார்க்குமிடத்து இவையே வழிபாட்டின் மரபுகள் எனப்படுகின்றன. மரணத்தின் பின்னர் மனிதனுக்கு என்ன நடக்குமோ என்கின்ற பயம் சமய உணர்வுகளின் தோற்றத்திற்குக் காரணமாகியது. இற்றைக்கு ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற மனித இனங்களின் மத்தியில், இறந்தவர்களின் சமாதியில் "மஞ்சள் காவி" தூவப்பட்ட வரலாற்றுச் சம்பவமானது, சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் தொடக்க நிலையின் பின்னணி நீட்சியைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இவற்றினை ஆய்வு செய்தவர்களுள் ஒருவராகக் குறிக்கப்படுபவர் E.O. ஜேம்ஸ் என்னும் அறிஞராவார். மனிதனின் அகவுணர்வுத் தூண்டல்பற்றி இவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். அதன்படியே, இயற்கை நிகழ்வுகளுக்கும் (மழை, வெள்ளப் பெருக்கு, பூகம்பம், கடல் அலைகள், சூறாவளி முதலியன) ஈடுகொடுக்க அஞ்சிய பழங்கால மனிதன் தன்னிலும் ஆற்றல் மிக்க ஒருவரின் துணைநாடி வாழ வேண்டியது அவசியம் என உணர்ந்தான்.

பக்தி என்பது ஒரு சமய உணர்வு நிலை. இது உருவாவதற்கு நம்பிக்கை, விருப்பம், காதல், ஒருமுகமான பற்றுறுதி போன்றன தேவையாகின்றது. நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாடல்கள் முதலியவற்றில் இவற்றைக் காணலாம். மனிதனின் ஆழ்மனத்தில் சமயவுணர்வுகள் உள்ளன. இவற்றை வெளிக்கொண்டுவரும் முயற்சிகள் பல நடைபெறுகின்றன. உண்மை பற்றிய தேடல் முயற்சிகளின்போதும், நமக்குத் துன்பம் துயரம் ஏற்பட்டு வெறுப்பு விரக்தியடையும்போதும், இந்த ஆழ்மனப் பதிவுகளாகவுள்ள சமயவுணர்வானது வெளிப்படுகிறது. சில சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போது இது தீவிரமாகவே வெளிப்படும் தன்மை பெற்றன.

சமயவுணர்வுகளிலிருந்து மனிதன் சில சமயங்களில் போலியாக மனம் மாறுகின்றான். இன்றைய காலத்தில் இதைக் காணலாம். அதாவது ஒரு மதத்திலிருந்து இன்னோர் மதத்திற்கு மதம்மாறிச் செல்லுதலாகும். இது வெறும் மாற்றமேயல்லாது, மனிதரது சமயவுணர்வுகளின் மாற்றம் அல்ல. வெறும் கவர்ச்சியாலும், பணத்தாலும், சலுகைகளாலும் இப்படி மதம் மாறுகின்றனர். இவை வெறும் மன எழுச்சிகளே அல்லாமல் உண்மையான சமயவுணர்வு அல்ல. எழுச்சிக் கூட்டங்கள், சமயப் பிரச்சாரக் கூட்டங்கள் முதலியன மனிதனின் மனத்தை உடனடித் தூண்டலுறச் செய்கின்றனவே தவிர, அவை உண்மையான சமயவுணர்வின் மாற்றமல்ல என்பதை மக்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். மனிதனுக்கு மனிதன் சமயவுணர்வுகளைத் திணிக்க முடியாது. அல்லது ஒரு வைத்தியர் தன்னுடைய நோயாளிக்கும் திணிக்க முடியாது. சமயவுணர்வானது, உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது. உண்மையான சமயவுணர்வானது மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறியும் ஆற்றல் பெற்றது.

சமயவுணர்வுக்குத் தடையாகவுள்ள ஏனைய உணர்வுகள் எம் மத்தியில் உள்ளன. இவற்றுள் உலகியல் இனபத்தை மனிதன் அனுபவிக்கத் தலைப்படுவதை சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த இடத்திலேயே துறவுநிலை முதன்மை பெறுகின்றது. சமயத் துறவிகள் "துறவுநிலை" பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டமை இதற்குச் சான்று. உலக வாழ்க்கையில் ஈடுபடும் நோக்கில் துறவு மேற்கொள்ளாமல் உள்ளோரைக் குறைவானவர்களாகக் கணித்தல் இலக்கிய சமயமரபு. சமயவுணர்வுகளின் மிக அதிகமான செயல்பாடுகளால் உந்தப்பட்டு மனிதர் கோவில்களில் பல காரியங்களை நேர்த்திக் கடன்களாகச் செய்து வருகின்றனர். உதாரணமாக, காவடியாட்டம், செடில் காவடி (செடில் குத்துதல்), தூக்குக் காவடி எடுத்தல், தீ மிதித்தல், பாதயாத்திரைகள் மேற்கொள்ளுதல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் சமயவுணர்வுகளின் தீவிரத் தன்மையால் இறைவனைப் பழித்துரைப்போரைக் கடுமையாகத் தண்டித்துமுள்ளனர். சைவ சமயத்தில் அரிவாட்ட நாயனார் என்பவர் சிவனைப் பழித்துரைப்போரை நேரில் காணில் தனது கையில் வைத்திருக்கும் அரிவாளினால் (அரியும் வாள்) அவர்களின் மூக்கினை அரிந்தெடுத்து இரத்தக்களரி கண்ட வரலாறுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இஸ்லாம் மதத்தில் அம் மதத்தையோ அம் மத நூல்களையோ யாரும் பழித்துரைத்தால் அல்லது அந்நூல்களை அழித்தால் அவர்களுக்கு பாரிய தண்டனை (கொலை செய்தல் முதலியன)களைக் கொடுத்து வருவது நாம் அறிந்ததே. இவை அதி தீவிர நிலையாகும். இறைவனுக்கு தம்மை "அர்ப்பணித்தல்" என்பது சமயவுணர்வுகளின் தீவிர நிலையாகும். இறைவனிடம் "சரணாகதி" அடைவதும் உணர்வின் தீவிர நிலையாகும். இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்து சமயத் தொண்டர்களாகச் சேவை செய்வது சமூக அதிகார வர்க்கத்தினருக்கு எதிராகச் செய்யப்படும் ஒரு நல்ல சேவையாகும். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதல் முதலிய நிகழ்வுகளை இங்கு குறிப்பிடமுடியும்.

# போகமறுத்து ஞானமூட்டும் சந்நிதிக் கந்தவேளே

கொற்ற வெண்குன்றினூடாய் குவலயமுழுதும் காக்கும்
வெற்றிவேல் வேதமூட்டும் தொண்டையூர் ஆல்மேலண்ணல் தானே!
பற்றென்றுமிலாதவாறு மோகனமுற்ற சிந்தையூடே நின்று
திக்கெனத் தெளிகவென்று செப்புவார் சக்திவேலேயாகும்.

பிரமனை பிரணவத்தாலடக்கிய பரமேஸ்வர கந்தவேளே!
பார்மீதாதித் தத்துவமெலாங் கடக்கவோதும் குழந்தை வேலா!
வரமெலாந்தரும் வண்ணமயில் வாகனக் காவடிக்கந்தனே தண்டாயுதனே
பரமனாகிய கணேசனின் பாவுயர்ப் பதமலர்த் தண்டாயுதனே!

அண்டத்தில் புகலுமாற்றிடைத்தானே தோற்றிட்டழகே சந்நிதிக்கந்தா!
பண்டுற்ற நீரில் பரந்துவீசிய வலையில் செண்டுற்று வந்தவேளே
கண்டுற்ற கதிர்காமர்கடல்வழி தொண்டாற்றும் கருணைவழி யானாய் வேலா!
நீடுற்ற போதிலும் கையேந்தும் அடியார்க்கென்றும் ஞானகுருவான சந்நிதிவேளே!

ஒளியருள்வேலனை யோகியர் பிரமசாரியர் அனாதியகத்தியர்
தேவர்முனிவர் பட்டர்கள் முதலாகச் செப்பலுறும் வேல்சந்நிதியே
பரவுபுகழ் பிரமயோகி அமுதானந்தாஜி தமையாக்கியதும் சந்நிதியே
தாவின் மணல்குன்று கடலாறு தடமிவையும் எதிர்கொள்வதும் செல்வச்சந்நிதியே
பிரமமாய் ஒளியாய் நின்றும் நில்லாது பெரிதாய் அருள
தானாகித் தத்துவமெலாம் கடந்த தத்துவமாகி
வரமருளெலாந்தரும் யோகமான சந்நிதிக் கந்தனாகி
பரம்பொருளாகி குமரனாகி பதமலர் தொழவைக்கும் சந்நிதிவேலா!

அப்பனே அனையதாகலின் பேரின்பவீட்டினைப் பெறஅருள்தாவென்றும்
வினையெலாந்தரும் விடயத்தை நீக்குமேவிய பொறியெலாம் மாழ
எமையுறாவகை மீட்டிப் பெரும் பிரமமஞ்செழுத்து மோதி யென்றும்
அருள்கடல் சந்நிதியை அடிவருடித் தொழுதுமூழ்க வரந்தருவாய் கந்தவேளே!

*-க. தெய்வேந்திரம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

### நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி



**பதவுரை:-**

கவை தலை மேவிய கண்ணே போற்றி- கவைத்தலை என்னும் தலத்தில் விரும்பி எழுந்தருளிய கண்போற் சிறந்தவனே நினக்கு வணக்கம்; குவைப்பதி மலிந்த கோவே போற்றி- குவைப்பதி என்னும் தலத்தில் மகிழ்ச்சி மிகுந்து எழுந்தருளியிருந்த தலைவனே நினக்கு வணக்கம்; மலைநாடு உடைய மன்னே போற்றி- மலைநாட்டினுடைய மன்னனே நினக்கு வணக்கம்; கலை ஆர் அரிகேசரியாய் போற்றி- கலைஞர்கள் நிறைந்த அரிகேசரி என்னும் தலத்தை யுடையவனே நினக்கு வணக்கம்; திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி- திருக்கழுக்குன்றில் எழுந்தருளியிருக்கும் செல்வனே நினக்கு வணக்கம்; பொருப்பு அமர் பூணத்து அரனே போற்றி- மலைகள் பொருந்திய திருப்பூவணத்தில் எழுந்தருளிய சிவபெருமானே நினக்கு வணக்கம்; அருவமும் உருவமும் ஆனாய் போற்றி- அருவமும் உருவமும் ஆனவனே நினக்கு வணக்கம்; மருவி கருணை மலையே போற்றி- இயல்பாகப் பொருந்திய திருவருளை மலையாகவுடையவனே நினக்கு வணக்கம்; துரியமும் கடந்த சுடரே போற்றி- நான்காம் நிலையையுங் கடந்த ஒளிவடிவினனே நினக்கு வணக்கம்; தெளிவு அரிதாகிய தெளிவே போற்றி- பருப் பொருளறிவாலும் நுண்பொருளறிவாலும் அறிதற்கரிதாகிய அருளால் தெரியப்படும் பொருளே நினக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவைத்தலை குவைப்பதி என்பன சிவதலங்கள். மேவிய என்றார் கவைத்தலை என்னும் தலத்தில் இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியமையின். கண்ணே என்றார் இறைவன் காண்போற் சிறந்தவனாதலின். "கருவேயென் கற்பகமே கண்ணே" "நெடிய விசும்பொடு கண்ணே போற்றி" (தே.261:1; 269:10) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

மலிதல்- மிகுதல். "பூமலி வையை வருபுனல்" (கலி 90:10-41) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கோவே போற்றி- தலைவனே வணக்கம். "குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி" என அப்பரடிகள் (தே.245:7) அருளியமையுங் காண்க. மலைநாடு என்றதும் சேரநாட்டினை "வேழமுடைத்து மலைநாடு" (தனிப்பாடல்) என வருதலுங் காண்க.

அரிகேசரி- ஒரு சிவதலம் கலைஞர்கள் ஆண்டு மிக்கிருந்தமையின் 'கலையார் அரிகேசரியாய்' என்றார். கலையார் அரிகேசரியாய்' என்பதற்கு ஆடையாக உடுத்திய சிங்கத்தோலுடையவனே என்பாருமுளர். இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி அடியார்க்கருள்புரிந்த தலங்களைக் 'கவைத்தலை மேவிய கண்ணே' 'குவைப்பதி மலிந்த கோவே' 'மலைநாடுடைய மன்னே' திருக்கழுக்குன்றிற் செல்வா' பொருப்பமர் பூவணத்தரனே' என அடிகள் கூறுகின்றாராதலின் அவற்றிடையே போந்த 'அரிகேசரி' என்பதும் ஒரு சிவதலம் என்று துணியப்படும்.

திருக்கழுக்குன்றம் இறைவனுறையும் தலமாதலின் 'திருக்கழுக்குன்றிற் செல்வா' என்றார். "கண்ணிதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை" (ஞான 103:11) "கழையோடு கழுக் குன்றமர்ந்தான் கண்டாய்" (நாவு 295:5) "நட்டமாடி நவிலும்மிடம்... கழுக்குன்றமே" (சுந் 81:7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. "செல்வா" என்றார். இறைவன் ஞானச் செல்வனாதலின். "தேனார் பொழில்சூழ் மறைகாட்டுறைசெல்வா" தே.ஞா 173:5) என வருதலுங் காண்க.

பூவணம்- பாண்டி நாட்டிலுள்ள திருப்பூவணம் என்னும் தலம். "பாரார் வையைப் புனல்வாய்ப் பன்மணி பொன் கொழித்துச், சீரார் வாரி சேரநின்ற பூவணமே" (தே.ஞான 64:3:64:4) என வருவன காண்க. மலைகள் பொருந்திய பூவணமாதலின். "பொருப்பமர் பூவணம்" என்றார். "பொறை மல்கு பொழிலணி பூவணத்து" (ஞான 278:7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பூவணத் தரன்- பூவணத்தில் எழுந்தருளியிருக்கும் அரன். "பூவணத்துறை ஈசனை" (ஞான 278:5) "புண்ணியனா ருறை பூவணம்" (சுந் 11:5) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

அருவமாய் நிற்கும் இறைவன் உயிர்களுக்கு அருள் செய்ய வேண்டி உருவமாயு மிருத்தலின் "அருவமு முருவமு மானாய்" என்றார். "ஆரொருவர் உள்குவார். உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" (தே.232:11) என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. அருவமும் உருவமும் கூறவே அருவுருவமும் கொள்ளப்படும். இறைவற்கு இம்மூன்றும் வடிவமேயாம் என்பது.

"அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவா ரூபம் ஆனது மன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்குள்ள வாமே"
சூத் 1 செய் 38

எனச் சிவஞானசித்தியாரில் வருதலானுமறிக.

*சாக்கிரம் சொற்பனம், சுழுப்தி துரியம் துரியாதீதம் என்னும் அவத்தைகளுள் துரியாதீத அவத்தைக் கண் நிற்கும் உயிர். தனநிலை தோன்றாது அருள்வழி நின்றுணரும் ஒளிவடிவினன் இறைவனாதலின் துரியமு மிறந்தசுடரே" என்றார்.

"துரியங் கடந்த துரியா தீதத்தே
அரிய வியோமங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானை" 2454

எனத் திருமந்திரத்தும் வருவன காண்க. "துரியமும்- நின்மல துரியாவத்தைக்கும்" என்பது ஞானாமிர்தம் பழையவுரை (54:20 உரை) துரியமும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு.

இறைவன் காட்சி தருதல் நூல் முதலிய அளவைகளால் அறியப்படாது அவனது திருவடிஞானம் ஒன்றானே தெளியப்படுதலின் "தெரிவரிதாகிய தெளிவே" என்றார்.

"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி" (9ம் சூத்)

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க.

---

*பிருகுடி நாப்பன்- ஆன்மாவானவன் புருவமத்தியிலே நின்றபோது ஆன்ற சாக்கிரம்- விசாலமுடைத்தாகிய சாக்கிராவத்தை என்றும் ஒரு பெருங் கந்தரம் சொற்பனம்- ஒப்பில்லாத பெரிய கழுத்தடியிலே நின்றபோது சொப்பனாவத்தையென்றும், மருமத் தாதி கழுத்தி- நெஞ்சடியிலே நின்றபோது சுழுத்தியவத்தையென்றும், வலஞ்சுழி யுந்தி யும்பர் ஒருநாள் கங்குலி துரியம்- வலமாய்ச் சுழித்திருக்கின்ற நாபிதானத்துக்கு மேலே மேலே நாலங்குலமும் கீழே நாலங்குலமுமாக எட்டங்குலத்து நின்றபோது துரியாவத்தையென்றுஞ் சொல்லப்படும்.

ஞானமிர் 16:9-12 உரை

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| யூன் 04 | வைகாசி 21 | வியாழன் | திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தர் |
| யூன் 22 | ஆனி 07 | திங்கள் | மாணிக்கவாசகர் |
| யூலை 24 | ஆடி 08 | வெள்ளி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| யூலை 30 | ஆடி 14 | வியாழன் | பட்டினத்தடிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவும் சிவன் செயல்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

"என் செயலால் ஆவதொன்றில்லை
எல்லாம் சிவன் செயல்"

நான் நான் எண்ணத்தை விட்டு எனக்கு மேலாக ஒருவன் உள்ளான்; அவனே என்னைப் படைத்தவன்; அவனே என்னைக் காப்பான் எனும் எண்ணம் எப்பொழுது என் செயலால் எதுவும் நடப்பதில்லை யாவும் இறைவன் சித்தப்படியே நடக்கும். என எம்மை இறைவனிடம் ஒப்படைத்து விடுவோம்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதார் யார்? அப்பர் வாக்கு. மணிவாசகர் தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்தமையால் நடப்பதெல்லாம் என்னுடைய செயல் அல்ல, யாவும் நின்னுடையதே என்கிறார்.

நாம் ஒரு செயல் செய்யும்போது நாமே கர்த்தா என எண்ணுகிறோம். அது தவறு. அந்த எண்ணத்தை அகற்றிவிட வேண்டும். வாசகர் திருவாசகம் பாடினார். அவர் பாடவில்லை. இறைவனே பாடுவித்தார் என்பதை மாணிக்கவாசகரே, "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்" எனப் பாடியுள்ளார்.

விசாரசர்மர் மண்ணால் லிங்கம் அமைத்துப் பாலாபிஷேகம் செய்கிறார். தந்தையார் லிங்கத்தைக் காலால் சிதைக்கிறார். சிவலிங்கத்தை அவமதித்த தந்தையின் காலைத் துண்டிக்கிறார். இறைவன்மீது அன்பு வைத்த சிறுவன் செய்த தவம் அந்த உடம்புடன் இறைவனுக்கு மகனுமாயினார். "வந்துமிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவன் அந்த உடம்புடன் அரனார் மகன்ஏய் சண்டேஸ்வரர் பதமும் பெற்றார். சிறுவனை பாலாபிஷேகம் செய்ய வைத்து, சிறுவன் சிவன்மீது கொண்ட பக்தியை உணராது சிவலிங்கத்தைச் சிதைத்த காலை மழுவால் வெட்ட வைத்து சிறுவனை இறைவன் தன்னோடு சேர்த்தது முதல் யாவும் சிவன் செயலே என நாம் உணர்வோம்.



சுந்தரர்க்குத் திருமணம் நடக்கப் போகிறது. நரை, திரை, மூப்புக் கொண்ட வேதியர், "சுந்தரா நில்! நீ என்னுடைய அடிமை; தொண்டு செய்ய வா" என அழைக்கிறார். தேவலோகத்தில் அநிந்திதை, கமலினி மீது கொண்ட மோகத்தால் பூமியில் போய் பிறந்து உன் விருப்பத்தை அடைவாய் என வரமீந்தார் இறைவன். "ஐயனே! யான் பூமியில் அவதரித்து வாழும் நாளில் சந்தர்ப்பம் அறிந்து என்னைத் தடுத்தாட்கொள்வீர்" எனக் கேட்டார். மணப்பந்தலில் வைத்தே சுந்தரரை திருமண பந்தத்தில் ஈடுபடா வண்ணம் தடுத்தாட் கொண்டார் இறைவன். மணப்பந்தலில் இறைவனோடு வாதிட்டபோது பித்தன் என்று சொல்ல இறைவன் அச்சொல் கேட்டு "பித்தா" என்று அடியெடுத்துக் கொடுத்து இறைவன் பெருமைகளைப் பாடவைத்து உலகோர்க்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததும் சிவன் செயல். பாண்டியனின் மந்திரியாக இருந்த வாதவூரரைத் திருப் பெருந்துறைக்கு வரச்செய்தது முதல் நரிகள் பரியானது, வைகை பெருகியது, பிட்டுக்கு மண் சுமந்தது, பிரம்படி பட்டது, திருவாசகம், கோவையை பாடச் செய்தது வரை யாவும் சிவன் செயல் அல்லவா?

உலகையே காணாத கபோதி திருத ராட்டினன். ஆணவம், அகங்காரம், ஆசை, வஞ்சகம் கொண்டவன் துரியோதனன்; நீதி, தர்மம், தெரிந்தவர்கள் பாண்டவர்கள் ஐவர். சகுனியின் சூழ்ச்சியால் நாடு, நகர் யாவும் இழந்த நிலையும் இறைவன் செயல். பாரத யுத்தத்திற்கான கால்கோள்; பாஞ்சாலி சபை நடுவில் கணவன்மார் ஐவர், பீஷ்மர், துரோ ணர், கிருபாச்சாரியார் இருக்க துரியோதனன் ஆணையில் தம்பி துச்சாதனன் துகில் உரி கின்றான். கணவரைப் பார்க்கிறாள்; பிதாமகர் பீஷ்மர், துரோணர் மற்றும் சிரேஷ்டர் மௌன மாயிருக்கிறார்கள். தன் மானத்தைக் காப் பாற்றுமாறு ஒவ்வொருவரையும் அழுது மன்றாடுகிறாள். புயபலமிக்க வீமன் தோள் துடிக்கிறது; வில் வித்தை தெரிந்த அர்ச் சுனன் துடிக்கிறான்; அண்ணன் தருமன் தம்பி யரை கையமர்த்துகிறான். யாருமே தன்னைக் காப்பாற்ற மாட்டார்கள் என உணர்கிறாள். தன்னிரு கரங்களே உதவும் என துகிலை இறுகப் பற்றுகிறாள். மேலே ஒருவன் ஆடல் பார்த்திருக்கிறான். கூந்தல் அவிழ்கிறது, கைகள் சோர்கின்றன. ஆடையை நழுவ விட்டு இரு கைகளையும் மேலே தூக்கி கண்ணா! கிருஷ்ணா! கோவிந்தா! என அழைக்கிறாள். உரிய உரிய சேலை வளர்ந்து கொண்டே போகின்றது; துச்சாதனன் கை சோர மெய் நடுங்க வீழ்ந்தான். கற்பின் திண்மையை உணர்கிறது சபை.

"கண்ணில்லான் பெற்றெடுத்த கய வன் பற்றித் துகிலுரிய பாண்டவரும் பார்த் திருந்தார்; கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி அன்றைக்கு என்மானம் யார் வேறு காத்தார்?" எனக் கூறிப் பூரண சரணாகதி அடைகிறாள். "என் செயல் அல்ல யாவும் உன் செயல்" எனப் போற்றுகிறாள்.

புராண இதிகாசங்களில் இறைவன் நிகழ்த்திய செயல்களைத் தெரிந்து கொண் டோம். இனி இன்றைய உலகில் நிகழும் இறைவன் செயலைப் பார்ப்போம். நான் நான் நாம் நாம் யாவும் எம்மால்தான் யாவும் முடியும் என வீரம் பேசுகிறோம். "அரன் தன் பாதம் மறந்து செய்வன யாவும் அவம்". மூவேந்தர் காலம். நீதி தவறாத செங்கோல் ஆட்சி. எனது ஆட்சியில் மக்கள் திருடர் பயமின்றி வாழ்கிறார்களா என அறிவதற்கு மாறுவேட மிட்டு இரவு ரோந்து சென்ற பாண்டியன் பொற்கைப் பாண்டியனானான். தேர்க்காலில் நெரிபட்டு இறந்த கன்றின் தாய்ப்பசு பட்ட வேதனையைத் தானும் அனுபவிக்க நினைந்து ஒரேயொரு மகனைத் தேர்க்காலில் கிடத்திக் கொலை செய்த அரசன் மனுநீதிச் சோழனா னான். பற்றிப் படரக் கொழுகொம்பில்லாமல் சரிந்து வீழும் நிலைகண்ட பாரி மன்னன் தன் தேரையே கொடுத்தவன். வேடனொரு வன் புறாவைக் கொல்லவிடாது தன் தொடை யிலே புறாவினளவு தசையை வெட்டிக் கொடுத்தவன் சிபிச் சக்கரவர்த்தி. இவர்கள் நீதி தர்மம் தெரிந்தவர்கள். இவர்கள் செய்த காரியங்களும் இறைவன் செயல்களே.

ஒரு நாடு சிறக்க வேண்டுமாயின், படை, குடி, கூழ் (செல்வம்) வேண்டும். நீதி வழுவாமல், தர்மம், ஆளுமை கொண்ட அரசன், மதியூகமுள்ள மந்திரி, பரந்த அறிவுள்ள ஆலோசகர்கள் இருக்கவேண்டும். அரசாட்சி சரியில்லையெனில் என்ன நடக் கும்? மக்கள் துன்பம் தாங்கமாட்டாமல் கிளர்ந்தெழுவர். பசி, பட்டினி, நோய், வறுமை மக்களை வாட்டும். சீவியம் போகவேண்டுமே. பொய், களவு, சூது, கொள்ளை, லஞ்சம், ஊழல் மோசடிகள், வழிப்பறி, கப்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கடத்தல், கணவன் மனைவியைக் கொல்ல மனைவி கணவனைக் கொலை செய்து புதைக்க உடலின் ஆறு பகைவர்கள், ஐந்து திருடர்களின் உந்துதல் மனிதன் மிருகமாகின்றான். நெஞ்சில் அன்பு, இரக்கம், தர்ம சிந்தனை, இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற பயம் இம்மியளவுமில்லை உணர வைக்கும் காலம் வரை. இயற்கையே இறைவன். இயற்கையின் சீற்றம்தான் உலக அழிவு. புயற்காற்று, சூறாவளி, மழை வெள்ளப் பெருக்கெடுப்பு, மண்சரிவு, சுனாமி, வீதி விபத்துக்கள், பூமி அதிர்வு, உயிரோடு எத்தனை மக்கள் புதையுண்டிருப்பர். இடி மின்னல் தாக்குதல் இப்படி இன்னும் பல இவற்றைத் தெரிந்து கொண்டும் மனிதரின் அக்கிரமம், அட்டூழியங்களுக்காகவே இவைகள் நடந்தன. யாவும் இறைவன் செயல்களே என்பதை மனிதர் உணர வேண்டும்; திருந்த வேண்டும்.

பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்துள்ள இறைவன் மானிடர் உள்ளத்தில் உள்ளான் என்பதை அறியாத- உணராத மூடர்களும் உளர். மனைவி, மக்கள், சகோதரம், உறவினர் துணையென எண்ணினாலும் எந்நேரமும், எல்லா இடத்திலும் துணை நிற்பவர் இறைவனே. வாழ்வில் நாம் நினைப்பது எதுவும் நடப்பதில்லை. நமக்கு மேலால் ஒரு சக்தி நின்று நம்மை வழிநடத்துகிறது. நடப்பதெல்லாம் இறைவன் நியதி. இறைவன் சூத்திரதாரி. நாம் அவர் கையிலாடும் சூத்திரப் பாவைகள்.

"எம் செயலால் ஆவது யாதொன்றுமில்லை யாவும்
உன் செயல் என்றே உணர்வோம்"

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 64

பல்லவி

பவவினை போக்கிடுவாய் பாலமுருகா! – நீயே
அவனியிற் கதியென அடியினை தொழுமெந்தன்

அநுபல்லவி

சிவனவனின் புதல்வா செல்வச் சந்நிதிக் கந்தா!
தவமுனி நிழலிருந் தருள்குரு பராஎன்

சரணம்

தவனமாய் நிவேதிக்க எதுவந்தா லுமதை
கவனமாய் நாலாக்கி அதில்மூன்று பங்கினையும்
அவித்ததைக் குவித்துவிட்டு அருங்கத வதைநீக்கி
உவந்திடு கற்பூர ஒளிதர அருள்கந்தா!

அவநெறி வாழ்மருதர் கதிர்காமற் கிடையனாய்
தவநெறி காட்டிவைத்த தண்டமிழ் வடிவேலா!
கவனமாயறுபத்தைந்து ஆலிலையமுது வைத்து
அவனியிற் படைத்திடவே ஆருள் தருமெந்தாய்.

(பவவினை)


-இராசையா குகதாசன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி





– வாரியார் சுவாமிகள் –

51.உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## பதவுரை

உருவாய்- உருவுள்ளவராயும், அருவாய்- உருவம் இல்லாதவராயும், உளது ஆய்- உள்ள பொருளாகவும், இலது ஆய்- காண்பதற்கு இல்லாத பொருளாகவும், மறு ஆய்- நறுமணமாகியும், மலர் ஆய்- நறுமணமுடைய மலராகியும், மணி ஆய்- இரத்தின மணியாகியும், ஒளி ஆய்- அம்மணியில் உள்ள ஒளியாகியும், கரு ஆய்- அகில உலகங்கட்கும் மூலப் பொருளாகியும், உயிர் ஆய்- உயிர்க்கும் உயிராய்; கதியாய்- ஆன்மாக்கள் முடிவில் அடையும் வீடு பேறாகியும், விதி ஆய்- வீடுபேற்றை அடையும் நன்னெறியாகியும் விளங்கும், குகனே- குகமூர்த்தியே! குருவாய் வருவாய் அருள்வாய்- குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து அருள்புரிவீராக.

## பொழிப்புரை

உருவாகவும் அருவாகவும், அன்பருக்கு உள்ள பொருளாகவும், அன்பரல்லார்க்கு இல்லாத பொருளாகவும், ஞானமாகிய நறுமணப் பொருளாகவும், அம்மணத்தின் மூலமாகிய மலராகவும், ஒன்பது மணிகளாகவும், மணியின் ஒளியாகவும் எல்லாவற்றுக்கும் மூலப் பொருளாகவும், உயிர்க்கு உயிராகவும், வீடுபேற்றையடையும் நன்னெறியாகவும், அதனால் அடையும் வீடுபேறாகவும் விளங்கும் குகப்பெருமானே! குருவாக எழுந்தருளி வந்து காத்தருள்வீராக.

## விரிவுரை

உருவாய் அருவாய்:-

இறைவன் உரு, அரு, உருவரு என்ற சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் ஆகிய மூன்று நிலைகளும் கொண்டும் அதனைக் கடந்தும் விளங்குபவன்.

அருவு மாகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன்; ஊழின்
கருமம் ஆகுவன்; நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

-கந்தபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவன் அருவுருவும் அல்லன்
சித்தினோ டசித்தும் அல்லன்"
-சிவஞான சித்தியார் (90)

அருவமோ? உருவாருபம் ஆனதோ? அன்றி நின்ற
உருவமோ? உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த் திங்கென்னில்
அருவமும் உருவாருபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக்குள்ள வாமே.
-சிவஞான சித்தியார் (38)

"அருவனாய் அத்தி யீருரி போர்த்துமை
உருவனாய்" -அப்பர்.

உருவமில்லாத இறைவன் நம் பொருட்டு உருவம் தாங்கி வருகின்றான். ஆனால் அந்த உருவம் பஞ்சபூதங்களால் ஆய மாயா காரிய உடம்பன்று. அருள் திருமேனியென உணர்க.

**உளதாயிலதாய்:-**

இறைவன் பதிஞானத்தால் விளங்குபவன். பதி ஞானமில்லாதவர்க்கு விளங்காதவன். ஆதலால் உளது இலது என்றார்.

"உண்டிலை என்றே நின்று"
-சம்பந்தர்.

**மருவாய் மலராய்:-**

மணம் மலர் முழுவதும் பரவி அத்துவிதமாய் நிற்றல்போல் இறைவன் உலகெலாம் அத்துவிதமாகக் கலந்து நிற்கின்றான். இந்தக் குறிப்பை உணர்த்த "மருவாய் மலராய்" என்றார்.

"வாச மலரெலாம் ஆனாய் நீயே" -அப்பர்.
"துணரில் மலர்க்கந்தம் துன்னி நின்றானே" -திருமந்திரம் (3035)

**மணியாய் ஒளியாய்:-**

உலகப் பொருள்களில் மணி சிறந்தது; அதனால் முருகனை மணியென்றார். அப்பெருமானை தெய்வசிகாமணி என்பர். ஆணவ இருளையகற்றும் ஞானவொளியாகத் திகழ்பவன் முருகன்.

**கருவாய் உயிராய்:-**

கரு- மூலப்பொருள். இறைவன் எல்லாவற்றுக்கும் மூலமாய் முளைத்தவன். உயிர் தங்கும் கருவாய் நின்றவன். உயிர்க்கு உயிராய் விளங்குபவன்.

"தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டும்
தாய்த்துணையே" -குற்றாலத் தலபுராணம்.
"கருவின்றி நின்ற கருவாய்" -கந்தர் கலிவெண்பா.
"கருவினா லன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினா லன்றியே உருவுசெய் தானிடம்" -சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியாய் விதியாய்:-

கதி- வீடுபேறு. விதி- வீடுபேற்றுக்குரிய வழிவகை.

"விதியாய் விளைவாய் விளைவின் பயனாகி"

-சம்பந்தர்.

குருவாய் வருவாய்:-

இறைவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குரு வடிவாக வந்து அருள்புரிவான். மணிவாசகருக்குத் திருப்பெருந்துறையில் திருக்குருந்தடியில் இறைவன் குருமணியாக வந்து அருளிய திறம் இங்கு நினைவுகூர்தற்குரியது.

"கோகழியாண்ட குருமணி தன் தாள்வாழ்க"

-சிவபுராணம்.

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே.

-சிவஞானபோதம் (சூத்திரம்8)

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி யருளிய பெருமையை"

-திருவாசகம்.

"கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர் திருப்பேர்கொண்டு திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி"

-கந்தர் கலிவெண்பா.

"குகனே! உருவாய் வருவாய்; அருவாய் வருவாய்; உளதாய் வருவாய்; இலதாய் வருவாய்; மருவாய் வருவாய்; மலராய் வருவாய்; மணியாய் வருவாய்; ஒளியாய் வருவாய்; கருவாய் வருவாய்; உயிராய் வருவாய்; கதியாய் வருவாய்; விதியாய் வருவாய்; குருவாய் வருவாய்; அருள்வாய்" எனக் கூட்டிப் பொருள் கோடலும் உண்டு.

குரு:-

கு- அந்தகாரம்; இருள். ரு- நீக்குபவர். ஆணவ இருளைப் போக்குபவர் குரு.

கு சப்தஸ்து அந்தகாரஸ்யாத் ருசப்தஸ்தந்நிரோதக
அந்தகார நிரோதித்வாத் குருரித்யபீதியதே
குருரேவ பரம்ப்ரஹ்ம"

-அத்வயதாரகோபநிடதம்.

குருவின் உருவம் ஏனைய ஆன்மாக்களின் கருமேனி தீர்க்கவந்த திருமேனி என்றுணர்க. எத்துணைச் சிறந்தவராயினும் உண்டது வெளிப்படுமானால் அது மலம் எனப்படும். ஆனால் பசு உண்டது வெளிப்படுமானால் அதை மலம் என்று அருவருப்படைவதில்லை. ஏனைய மலங்களை எடுத்துத் தூய்மைப்படுத்த பசுவின் சாணம் பயன்படுகின்றது. பசுவின் சாணம் பஞ்ச கவ்யத்துள் ஒன்றாய், அபிஷேகத்திற்கும் பயன்படுகின்றது. மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாய்மையடைய பஞ்சகவ்யத்தை உண்ணுகின்றான். புனிதமான பொருள் சாணம். அதுபோல் நம் உருவினை மாற்றிக் கருவினைப் போக்க வந்த திருவுருவம் குருவுருவம் எனவுணர்க.

இறைவன் குருவடிவாக வந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு அருளுகின்றான்.

மணிவாசகருக்குத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவடிவில் வந்து அருள் புரிந்தார். அதேபோல் அருணகிரிநாதருக்கும் முருகவேள் குருவடிவாக எழுந்தருளி அருள் புரிந்தார்.

திருவடியுந் தண்டையுஞ் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலும் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய்வந் தென்னுள்ளங் குளிரக்குதி கொண்டவே

-கந்தரலங்காரம் (102)

வேதாகமங்கள் முதலிய அறிவு நூல்களின் உயரிய கருத்துக்களை ஒருவன் குருவின் மூலமாக உணர்தல் வேண்டும். விடாய் கொண்டான் .ஒருவன் நேரே கடல் நீரைப் பருகுவானாயின் விடாய் கூடுமே அன்றிக் குறையாது.

மேகமானது கடல் நீரை முகந்து, உவரை மாற்றி நன்னீரைப் பொழிகின்றது. அது விடாய் தீர்க்கும். அதுபோல் குருநாதர் சாத்திரக் கடலைப் பருகி, மாணவன் அறிவின் பக்குவத்துக்கு ஏற்ப உபதேசிப்பார். எனவே குருநாதர் மேகம் போன்றவர்.

கடலைக் கடக்கக் கருதிய ஒருவன் கப்பலில் ஏறுவானாயின் அக்கப்பலைச் செலுத்த மாலுமி இன்றியமையாது வேண்டும். அங்ஙனமே கல்விக் கடலைக் கடக்க குருநாதர் மாலுமி போல்வார் என்றும் உணர்க.

“குருலேக எடுவண்டி குணுகி தெலியகபோது”

என்று தியாகராஜ சுவாமிகள் தெலுங்கில் கூறுகின்றார்.

ஆதலால் ஒவ்வொருவரும் முருகவேளைக் குறித்துத் தியானம் புரிந்து, “பெருமானே! சிறியேனுக்குக் குருவாக வந்து தேவரீர் அருள் புரிவீர்” என்று முழு மனத்துடன் ஆராக் காதலாகி தினம் தினம் மனம் உருகி வேண்டுதல் புரிய வேண்டும். இடையறாது மெய்ஞ்ஞான பண்டிதனிடம் விண்ணப்பம் புரிந்தால் ஒருநாள் குருவடிவாய் வந்து திருவருள் புரிவான்.

எனவே,

“குருவாய் வருவாய் அருள்வாய் குகனே”

என்று அடிகளார் முறையிடுகின்றார்.

இந்தத் திருவாக்கு கந்தரநுபூதியாகிய ஞானத் திருக்கோபுரத்துக்குமேல் வைத்த ஆயிரமாற்றுத் தங்கக் கலசம் போல் ஒளி செய்கின்றது.

குகனே:-

ஆன்மாக்களின் இதய குகையில் இருப்பவன் குகன்.

“சத்யம் ஜ்ஞான மநந்தம் ப்ரஹ்ம யோவேத
நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன்”

-தைத்திரீயோபநிஷதம் (ஆனந்தவல்லி)

“அணோரணீயாந் மஹதோ மஹியாநாத்மா
குஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ: 1

*இழந்த நேரத்தை மீண்டும் கண்டெடுக்க முடியாது.* 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்ரதும் பச்யதி வீதசோகோ
தாது: ப்ரஸாதாத் மஹிமாந மீசம் 11

-தைத்திரீயாருஷ சாகை.

அணுவிலும் அணுவாய், பெரிதிலும் பெரிதாயுள்ள பரம ஆன்மா, இந்தச் செந்துவினது இருதய குகையிலுள்ளது. தன்னுடைய மகிமைக்கு ஏதுவாயுள்ள அதனைக் கன்மநீக்க முள்ளோன், தனக்கு ஆதாரமான ஈசனது பிரகாசத்தினால் சோகமில்லாதவனாய்க் காண்கின்றான்.

பல கோடிக்கணக்கான எண்ணில்லாத எல்லா உயிர்களிலும் குமாரக் கடவுள் ஒருவரே உயிருக்குயிராய் ஊடுருவித் திகழ்கின்றான். மணிகள் பலவற்றில் நூல் ஒன்றே ஊடுருவியிருப்பதுபோல் என அறிக.

மணிகணே ஸூத்ரமிவ ஸர்வஷேத்ரேஷு
அநுஸ்யூதத்வேந
அந்தர்யமாய்ந் ப்ரகாபதேஹ்யாத்மா ஸோந்தர்யாமீ.

-சர்வசார உபநிடதம்.

ஒரு கோபுரம் புதுக்கி, அதன் உச்சியில் தங்கக் கலசம் அமைப்பதுபோல், இந்தக் கந்தரநுபூதியின் முடிவில் குக என்ற மந்திரம் ஒளிசெய்து கொண்டிருக்கின்றது. “குகா, குகா!” என்பார் பிறவிக் கடலைக் கடப்பர்.

“பவ சாகரத்திலழுந்தி யெழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா எனும்
வகைவராதோ”

-(ஓலமிட்ட) திருப்புகழ்.

## கருத்துரை

குகனே! குருவாய் வந்து அருள்.

**குறிப்பு:-**

பேசா அநுபூதி பிறந்ததுவே என்று முடிகின்ற 43 ஆவது பாடலுடன் அநுபூதி முற்றுப் பெற்றது என்று ஒரு சிலர் கூறுவர்.

“அநுபூதி ஐம்பதுவே ஆருயிர் பேரின்ப
அநுபூதி நல்குமணி”

என்று தணிகையுலாவில் வருவதாலும், பாடலின் அமைப்பு அருமை பெருமைகளாலும் 51 பாடல்கள் கொண்டது அநுபூதி என்பதுவே உறுதி.

பின்னர் யாரோ மேலும் 50 பாடல்களைப் பாடிச் சேர்த்துவிட்டார்கள். அவை அருணகிரியார் வாக்குகள் அல்ல.

இந்தக் கந்தரநுபூதி, திருவருட்பிரசாத அநுபவ ஞான நூலாகும். வானோரும் போற்றும் இதனை ஏனோரும், நாடோறும் பாராயணம் புரிந்து ஆராவமுதம் பெறுவார்களாக. வாழ்க முருகனருள். வெல்க முருகன் சீர். போற்றி அருணை முனிவரடி.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

– திரு சு. சிவராசா அவர்கள் –

அன்பே சிவம், இரும்பே கனம் என்பது நாட்டார் வழக்கு. அன்பே சிவம், அதுவே தவம் என்பது பாட்டு. சிவத்திற்குமேல் தெய்வம் இல்லை, சித்திக்கு மேல் சாத்திரம் இல்லை என்பர் கற்றோர். அன்பே சிவமாய் ஆகி நின்றாரே என்கிறார் திருமூலர். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டும் என்னப்பன் என்னையும் ஆட்கொண்டவாறே என உருகுவார் மணிவாசகர். அன்பின் வழியது உயிர்நிலை என்றால் உயிரில் உயிராய் நிற்பதும் சிவமே. சிவம் என்றால் சோபனம், மங்கலம், செம்மை என்ற பல பொருட்களைத் தரும்.

சிவம் அன்பே வடிவானது என்பதைப் பற்றி இன்னும் ஏராளமாகச் சொல்ல இயலும். அதற்கு இடையில் சைவசித்தாந்தம் கூறுவதைப் பார்ப்போம். பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களும் அநாதியானவை. பதி என்பது சிவத்தையே குறிக்கின்றது. சிவம் மல சம்பந்தமில்லாமல் தூய மெய்ப்பொருள் வடிவாக விளங்குவதால் அது பசு பாசங்களினின்று வேறுபட்டது. பசு தானே அறியும் அறிவு இல்லாதது. மலபரிபாகம் அடைந்து குருஇலிங்க சங்கமத்தால் ஆணவ மலத்தின் முனைப்பு கெட்டுப்போக இறைவனது திருவடியை நெருங்கி பிறவியில்லாத பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுகிறது.

இவ்வாறு ஆன்மாக்களை ஈடேற்ற வேண்டும் என்று, அன்பே வடிவான சிவத்திடமிருந்து அருட்சக்தி தோன்றுகிறது. அந்த சக்தியே உலகங்களையும் உயிர்களையும் கருப்பமின்றிப் பெற்றெடுத்த உலகமாதா ஆவாள். இந்நிலையில் சிவம் சும்மாயிருக்க சக்தியே அனைத்தையும் இயக்குகிறது. ஒருவர் சிவனே என்று இருக்கிறார் என்றால் அவர் எந்தச் செயலுமின்றி இருக்கின்றார் என்பது பேச்சு வழக்கு ஆகும். திருவருட் சக்தியிலிருந்து பிரம விட்டுணுக்கள் தோற்றம் பெறுவர். இவர்கள் முறையே படைத்தல், காத்தல் தொழில்களைச் செய்ய சிவமே உருத்திரனாகி சங்காரத்தையும் ஊழிக்கால முடிவில் செய்கிறது.

முத்தொழில்களும் முக்குணங்களின் வயப்பட்டே நடைபெறுகின்றன. சிவம் குணாதீதன் ஆவார். சங்கார மூர்த்தியான உருத்திரனோ தாமச குணம் உடையவர். பிரம்மா சாத்துவீகமும், விஷ்ணு இராசதமும் உடையவராவார். வள்ளுவர் கூறும் ஆதிபகவனாம் சிவத்துக்கு எண் குணங்கள் சொல்லப்படுகின்றன. தன்வயத்தராதல், தூய உடம்பினராதல், வரம்பில் இன்பம் உடைமை, பேரருள் உடைமை, இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், வரம்பில் ஆற்றல் உடைமை, தூய அறிவினனாதல், முற்றும் உணர்தல் என்பன அவ்வெட்டுமாம். இது உபசாரமாக சொல்லப்பட்டது என்பதே உண்மை ஆகும்.

திருவருட் சக்தியிலிருந்து சதாசிவன், மகேஸ்வரன், ஸ்ரீகண்டன் என்ற முறையில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் தோற்றம் பெறுகிறார்கள். விஞ்ஞானகலர் (ஆணவம் மட்டும்), பிரளயாகலர் (ஆணவமும் கன்மமும்), சகலர் (இவற்றோடு மாயையும்) என இருக்கும் ஆன்மாக்களை ஈடேற்றும் மறக்கருணையே சங்காரம் ஆகும். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை உள்ள எண்பத்து மூவாயிரம் இலட்சம் யோனி பேதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைய ஆன்மாக்களையும் ஈடேற்றும் பெருங் கருணையே சங்காரம் என்றால் மிகை யாகாது.

இறைவனுக்கு ஆன்மாக்களிடத்தில் வேறுபாடு கிடையாது. அவன் குருவடிவாக வும் தூய சிவனடியாராகவும் வந்து ஆன் மாக்களை ஆட்கொள்ளுவான். முள்ளிச்செடி, எறும்பு, சிலந்தி, கரிக்குருவி, யானை, குரங்கு முதலான உயிரினங்களும் அவனருளால் ஆட்கொள்ளப்பட்டதாக புராணங்கள் கூறு கின்றன. பன்றிக்குட்டிகளுக்கும் தாயாகிப் பால் கொடுத்தவன் கல்லால் அடித்த சாக்கி யரும், வில்லால் அடித்த பார்த்தனும், செருப் புக்கால் பதித்த கண்ணப்பனும்கூட அவ னருள் பெற்றனர். செம்மனச் செல்விக்காக பிரம்படியும் ஏற்று கருணை செய்தவன்.

பெருமானுடைய திருவருளுக்கு ஆளான அடியவர்களும் தன் முனைப்பு பெறும்போது அவனுடைய மறக்கருணைக்கு ஆளாகிறார். மூவாசைகளில் ஏதாவது ஒன்றன் வயப்பட்ட அடியவரும் இவ்வாறே மறக்கருணையைப் பெறுவர். சுந்தரர், அப்பர், மணிவாசகர் போன்றோர் மனிதராய்ப் பிறந்ததும் இதன் பொருட்டேயாம். உமாதேவி கூடப் பார்வதி யாய், தாட்சாயணியாய் பிறந்ததும் இக் காரணம் பற்றியேயாம். தம்முடைய தவத்தின் சிறப்பால் ஈசனிடம் வரம்பெற்று பின்னர் தீயவை புரிந்து ஒழுகிய அசுரர்களும் ஒவ் வொரு விதமாக ஆட்கொள்ளப்பட்டாரேயன்றி வதம் செய்யப்பட்டாரில்லை.

இன்ன தன்மயன் என்று எழுதி காட் டொணாத சிவத்தின் கருணையும் அளப்பரி யது. எங்கெல்லாம் சற்புருஷர்கள் தோன்றி இறைவனின் இருப்பை போதித்தார்களோ அங் கெல்லாம் ஒரே தன்மையாகவே சொல்லப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அன்பை முன்னிலைப்படுத்தி இறை தத்துவம் சொல் லப்படுவதால், எதை வேண்டி வணங்கித் துதிப்பார்க்கும் அதையே சிவன் அருள்வான் என்ற திருமூலர் வாக்கும் பொருத்தப் பாடானதே. புத்தன் முதலான புல்லறிவு சமயங்கள் தத்தம் மதங்களில் தட்டிமுக் குட்பட்டு நிற்க. அத்தன் கருணையினால் ஆட்கொண்டதைப் பாடி தெள்ளேணங்கொட்டி மகிழ்வார் மணிவாசகர்.

எல்லா மதங்களும் ஒரே சமுத் திரத்தை சேருகிற புனித கங்கைகளே என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கு சத்திய மானது. அதனால் அன்பே வடிவான பரம் பொருளும் ஒன்றேயென்று உணரப்படும். மொழி, நாடு, இனம் முதலான வேறுபாடு களால் பரம்பொருளுக்கு வெவ்வேறு பெயர் சுட்டப்படுகின்றன. அன்றியும் வெவ்வேறு வணக்க முறைகளும் சடங்குகளும் மத போதகர்களால் ஏற்படுத்தப்பட்டன. தாம் தாம் சொல்லுகிற தெய்வமே மெய்யானது என்றும் அதுவே மறுமையில் சொர்க்கம் என்கிற பேரானந்தப் பெருவாழ்வை தரும் என்றும் வாதிடுவது அறியாமை ஆகும்.

மனிதர்கள் ஆசைக்கு ஆளாகியவர் கள். ஆசை வைத்தால் அக மோசம். அன்பு வைத்தால் அது துன்பம், பாசம் கொள்வது பாவம் என்ற கவியரசரின் பாடலும் சிந்திக்கத் தக்கது. ஆசை படப்பட ஆவது துன்பமே என்பது குறள் வாக்கு. ஆசை வழிப்பட்டு சபலப் புத்தியுடன் சலனப்படுகின்றவர்கள் மாற்று மத பிரசாரகர்களின் வலையில் வீழ்கிறார்கள். எண்ணுவார் நெஞ்சினில் தானே நண்ணுவான் ஈசன். சரணகமலாலயத்தை அரைநிமிட நேர மட்டில் கூட தியானம் செய்யாத மூடமட்டிகள் மாற்று மதங்களில் சேர்ந்து திருத்தமான வாழ்வு வாழ்கிறேன் என்பார். நோய், துன்பம், பேய், பிசாசு உபாதைகள் நீங்கினோம் என்பார். கல்லை வணங்குபவர் கயவர் என்பர். சைவ ஒழுக் கத்தில் பிறந்த பேறு பெற்றவர் இவ்வாறு மதம் மாறுவது முன்னை வினைப் பயனே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற சமயங்களில் சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களை கற்றுமகிழ்ந்த காந்தியும் பாரதியும் மதம் மாறுவதை ஏற்றுக்கொள்ள வில்லை. எமது யோகர் சுவாமிகளோ, அதை இறைவன் பார்த்துக் கொள்ளுவான் என்பார். சன்மார்க்கச் சிந்தனையாளரான இராமலிங்க வள்ளல் எம்மதமும் சம்மதமே என்றார். இறைவனின் கருணைக்கு அளவு கோல் வைத்தவர் அப்பர் சுவாமிகள் ஆவார். உன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே என்கிறார் சுவாமிகள். மக்கள் சேவையே மகேசன் கருணையாகக் கண்டார் பலர். அன்னை திரேசா, மார்ட்டின் லூதர் கிங், மண்டேலா, வினோ பாவே முதலியோரை ஈண்டு குறிப்பிடலாம்.

பரம்பொருள் ஆகிய சிவம் அன்பே வடிவானது. அவனின்றி அணுவும் அசை யாது. அவன் அருளாலேதான் அவனை வணங்க இயலும். தவமும் தவமுடையார்க் கேயன்றிப் பிறருக்கு ஆகாதாம். வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவதென்று இருப் பார்க்கு அருள் எங்ஙனமாகும். அடியார்க்கு எளியனாம் இறைவனின் அன்பும் கருணையும் எங்கும் நிறைந்திருக்கிறது. அவன் தானாகவே முன்வந்து வேண்டி அருள் செய்வான். அன்பே சிவமாக இருக்கின்ற இறைவனை உணர்ந்து வணங்குவோர் இம்மையில் தனு கரண புவன போகங்களையும் மறுமையில் பேரானந்தப் பெருவாழ்வையும் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

## ஆன்மீகச் சிந்தனை

தர்மத்திலிருந்து வழுவாத உலக இன்பங்களே மனிதன் அனுபவிக்கலாம். அதை ஆன்மிக இன்பம் தடுக்கவில்லை. உலக இன்பங்கள் “விஷயானந்தம்” என்றும், ஆன்மிக இன்பம் “பிரம்மானந்தம்” என்றும் சொல்லப்படும். எல்லைக்குட்பட்டது உலக இன்பம். எல்லைக்குட்படாதது ஆன்மிக இன்பம். உலக செல்வமே செல்வம் என்று கருதுபவர்கள் - அருள் செல்வத்தையும் அருளின்பத்தையும் அறியமாட்டார்கள். உலக இன்பங்கள் அற்பமானவை. அவற்றில் சுகம் காண்பவன் முடிவில் மோசம் போய்விடுகிறான். இதை அறிந்து உணர்ந்து புரிந்துகொண்டு வாழவேண்டும். இறைவன் நினைவு உள்ளத்தில் இல்லாவிட்டால் வருவது தாழ்வு. இறைவனின் நினைவு உள்ளத்தில் இருப்பதால் வருவது வாழ்வு. உலகில் எல்லாமே ஒருநாள் அழிந்து சாம்பலாகும் என்ற நிலையாமை பற்றிய கருத்து நம் உள்ளத்தில் இடம்பெறும் அளவுக்கு, நம்மிடமிருந்து அகங்காரம் நீங்கும். இறைவனிடம் பற்று ஏற்படும். இறைவனிடம் பற்று இருந்தால் மட்டும் போதாது, அதோடு உலகப் பற்று இல்லாமலும் இருக்க வேண்டும். உலகப் பற்று இல்லாமல் இருந்தால் மட்டும் போதாது. அதோடு இறைவனிடம் ஆழ்ந்த பற்று இருக்கவேண்டும். வேறு எந்தப் பற்றும் இல்லாமல் இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டவர்களாலேயே இறைவனை அடைய முடிகிறது.

*கோபம் அறிவை விழுங்கிவிடும்.* 


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 18. மணிச்சுடர் ரமணன்

திருவண்ணாமலைக்கு வடகிழக்கிலிருக்கும் பிரதேசத்திலிருந்து, ஆதிகால முதல் தொடர்ந்து வரிசையாக பக்தர்கள் வந்துகொண்டிருந்தனர். அவர்களில் முதலாவது கீரைப் பாட்டி. அவருடைய ஊர் குடியாத்தம். வேலூருக்கருகிலுள்ள பிரசித்தமான குடியாத்தமல்ல. வந்தவாசிக்கருகில் தேசூருக்குப் பக்கத்துக் கிராமம். திருவண்ணாமலைக்கு பாட்டி எப்போது வந்தாளென்பது தெரியாது. ஆனால் பகவான் கோயிலுக்குப் பாலகனாக வந்ததுமுதலே பாட்டி எப்பொழுதாவது அதைப் பார்க்க வருவாள். பகவான் சுப்பிரமணியர் கோயிலிலிருந்த சமயம் கீரைப்பாட்டி சாதுக்களுக்கு உணவு வழங்குவாள். ஒரு கம்மாள ஸ்திரி கீரைப்பாட்டிமூலம் பகவானுக்குச் சில சமயம் உணவு அனுப்ப ஆரம்பித்தாள். அப்போதெல்லாம் கீரைப் பாட்டிக்கு பெரிய ஜடை இருந்தது. 1900ஆம் ஆண்டில் பகவான் விருபாக்ஷ குகையில் வசிக்க ஆரம்பித்த சமயம் பாட்டியும் குகை நமச்சிவாயர் கோயில் மண்டபத்தில் குடியிருக்கத் தொடங்கினாள். தலைமுடி ஜடையெல்லாம் அகற்றிவிட்டு மொட்டையடித்துக் கொண்டிருந்தாள். மண்டபத்தின் தூண்களிலும் சுவர்களிலும் செதுக்கியிருந்த தெய்வ உருவங்களுக்குப் பூஜை, நைவேத்தியம் செய்யப் பாட்டி தவறுவதில்லை. விருபாக்ஷ குகை அருகிலேயே இருந்ததால் பாட்டியால் பகவானை அடிக்கடி, அல்லது தினம் ஒரு தடவையாவது பார்க்க முடிந்தது. தினம் காலை எழுந்ததும் விருபாக்ஷ குகைக்குத் தெற்கிலுள்ள குன்றில் ஏறி, இன்று ஆச்ரமமிருக்கும் இடத்தை அடைந்து, சுற்றியவாறு, கந்தாச்ரமம் பிற்பாடு உண்டாகவிருந்த ஸ்தலத்தையெல்லாம் கடந்து, தன் இருப்பிடம் திரும்புவாள். இந்தச் சுற்றுலாவுக்கிடையில், விறகு, சாணி முதலியன சேகரித்துக் கொண்டு, அவற்றை முதுகில் கட்டிச் சுமந்தவாறு, சமைப்பதற்குப் பசேலென்ற கீரை வகைகளைப் பறித்து நிரப்பிக்கொள்வதும் எண்பது வயதிலும் பாட்டியின் நித்திய நியமம். பாட்டியிடம் இருந்தது ஒரு பானைதான். அதில் முதலில் வெந்நீர் சுடவைத்துக் குளித்தபின், சாதம் வடித்துப், பின்னர் அந்தப் பானையிலேயே குழம்பு வைத்து கீரையும் கிரமமாகக் கடைந்து கொள்வாள். தான் சமைத்ததை மண்டபத்துத் தெய்வங்களுக்கு நிவேதனம் செய்துவிட்டு, அதில் கொஞ்சம் பகவானுக்கு எடுத்துக்கொண்டுபோய் அதை உண்ணச் செய்த பின்னரே தான் சாப்பிடுவது அந்தப் புண்ணியசாலியான மூதாட்டியின் வழக்கம். இந்த நியமத்திலிருந்து பாட்டி வழுவியதேயில்லை.



காலையில் பாட்டி ஊருக்குள் சென்று தெரிந்த வீடுகளில் (அவளுக்குத் தெரியாத வீடே ஊரில் இல்லை) கேட்டு, அரிசிக் குருணை, பருப்பு முதலிய பொருள்களெல்லாம் வாங்கி வந்து, தன்னிடமிருந்த வாயகன்ற மண் ஜாடியில் சேமித்து வைப்பாள். சில நாட்கள் கஞ்சி காய்ச்சி, கீரைக்கறியும் செய்து பகவானுக்குக் கொடுத்துவிட்டு, "சாமி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகராசி கொஞ்சம் குருணை கொடுத்தாள், கஞ்சி காய்ச்சினேன்" என்பாள்.

இது விஷயமாகப் பேச்சு எழுந்த சமயம் பகவான் நினைவு கூர்ந்து தெரிவித் தருளியது: எனக்கு ஒன்றும் தெரியாது என் பது பாட்டியின் எண்ணம். அவளில்லாத சமயம் மண்டபக் கதவைத் திறந்து பார்த் தால், பெரிய ஜாடியில் அனேக பதார்த்தங் களிருக்கும். என்னிடம் அவளுக்கு முழு நம்பிக்கை. அவள் சுபாவம் அது. காய் கறியொன்றும் கிடைக்கவில்லையென்றால் சோர்ந்துபோய் வாடி உட்கார்ந்திருப்பாள். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நான் புளிய மரத்திலேறி, இளந் தளிர்களைப் பறித்துப் போடவோ, கீரைகளைத் தேடி முருங்கை இலைகளை ஒடித்துப் போடவோ செய்து உதவுவேன். சில சமயம், கீரைகளையும், இலைகளையும் ஆய்ந்து சமைக்கத் தயா ராக சுத்தம் செய்வதுண்டு. எப்பொழுதாவது அங்கேயே தங்கி, அவளுடனேயே சாப்பிடு வதும் உண்டு. எப்படியும் எனக்கு தினமும் உணவளித்து விடுவாள். தனக்கென்று வைத் துக் கொள்வதில்லை. பாட்டிக்கு மிகுந்த பக்தியும் சிரத்தையும் இருந்தது.

அந்தக் காலத்தில் மண்டபம் சரிவரப் பராமரிக்கப்படாமலிருந்தது. கதவு, தாழ்ப்பாள் எல்லாம் மரத்தாலானவைதான். கீரைப் பாட்டி யுடைய சுயநலமற்ற சேவை மனப்பான்மை யையும் சாதுக்களுக்கு முக்கியமாக, பக வானுக்கு தவறாது சேவை செய்வதிலு முள்ள ஆர்வத்தையும் பார்த்தால், தன்னிட மிருந்த எளிய பொருள்களை, அவையும் சிரமப்பட்டு கேட்டு வாங்கி சேமித்தவை- ரகசியமாக வைப்பதிலோ, மண்டபத்துள் யாரையும் அனுமதிக்காததையோ, தவறாக நினைப்பதற்கில்லை. அது இயற்கையே! கந்தாச்ரமம் பூர்த்தியானபின், பகவான் சில இரவுகளை அங்கும் விருபாஷ குகையிலும் கழித்தது என்பது தெரிந்ததே. ஒருநாள் ராத்திரி பகவான் கந்தாச்ரமத்தில் தங்கியது. பழனிஸ்வாமி விருபாஷ குகையில் இருந்தார். நள்ளிரவில் திருடனொருவன் குகை நமசி வாய மண்டபத்தில் நுழைந்து, சில பொருட் களைத் திருடி எடுத்துக்கொண்டு வெளி யேறும்போது பாட்டி விழித்துக்கொண்டு கூச்சலிட்டாள். அவள் வாயை மூட திருடன் முயன்றும் பாட்டி எப்படியோ திமிறி, "அருணா சலா! திருடன் திருடன்" என்று உரக்கக் கத்தினாள். அந்தக் கூக்குரல் எப்படியோ உயர கந்தாச்ரமத்திலிருந்த பகவான் காதில் விழுந்தது. (ஆதிமூலமே என்றழைத்த சப்தம் எங்கோ வைகுண்டத்தை எட்டவில்லையா?) "இங்கே இருக்கிறேன், இதோ வாரேன், யாரது? என்று பலமாகக் குரல் கொடுத்துக் கொண்டே விரைந்தோடி வந்தது பகவான். (அஷரமண மாலையில் அருணாசலனைத் 'திருடன்' என்றழைத்த பகவான், 'அருணா சலா' என்று பாட்டி அழைத்த தீனக்குரல் கேட்டு 'இங்கிருக்கிறேன்' என்று அபயக்குரல் கொடுத்து விரைந்தது எத்தகைய அற்புதம்!) பகவானின் குரல் கேட்டதும் திருடன் ஓடிவிட் டான். பழனிஸ்வாமியும் பகவானின் குரல் கேட்டு ஓடி வந்திருக்கிறார். இருவரும் மண்ட பத்தில் நுழைந்ததும் வழக்கம்போல் பாட்டி தனியாக இருப்பதைக் கண்டனர். அருகில் உள்ள மாமரத்துக் குகையிலும், ஜடை ஸ்வாமி குகையிலும் யாருக்கும் வித்தியாச மாகக் கேட்காததால், பகவானும் பழனிஸ் வாமியும் பாட்டியை நீ ஏதோ கற்பனை செய்துகொண்டாயென்று கேலி செய்தனர்.

பாட்டியோ உறுதியாகத் தான் சொன் னதையே சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு விளக்கைக் கொளுத்தி, அதன் வெளிச் சத்தில் பார்த்தபின்தான், ஜாடியைச் சுற்றி சில சாமான்கள் இரைந்திருந்தது தெரிந்தது. திருடன் உண்மையிலேயே வந்திருக்கிறான் என்பது அப்போதுதான் நிதர்சனமாயிற்று. 1922இல் பகவான் மலையிலிருந்து கீழிறங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமுன் புனிதவதியான "அன்னை" கீரைப் பாட்டி இறைவனடி சேர்ந்தாள். உழைத்துக் கொடுத்து ஓய்ந்த அச்சரீரம் ஆச்ரமத்துக்குத் தெற்கில் உள்ள தஷிணாமூர்த்தி கோவிலுக் கெதிரில் இருக்கும் புளியமரத்தடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பகவானின் திருக்கரங்களால் முத்தி பெறுவதற்காக வென்றே கீரைப்பாட்டியே பசு லஷ்மியாகப் புனர் ஜன்மம் எடுத்ததாக அனேகர் நம்புகின்றனர். இந்தப் பேச்சு எழும் போதெல்லாம் பகவான் வழக்கம்போல் மௌனமாக இருந்துவிடும். முதலில் நினைத்தபடி பசு லஷ்மியை அருணாசலம் பிள்ளை கண்ணமங்கலத்தில் இருந்து ஓட்டி வரவில்லை, குடியாத்தத்திலிருந்து கூட்டி வந்தார் என்று யாரோ சொன்னதற்கு பகவான், "ஓ, கீரைப் பாட்டியும் அதே இடத்திலிருந்துதான் வந்தாள்'' என்று சொன்னது குறிப்பிடத்தக்கது.

* * * *

ஹைதரபாத் பேராசிரியர் சிவமோகன் லால், ஆச்ரமத்துக்கு அடிக்கடி வருவார். முக்கியமாக விடுமுறை நாட்களில் பகவானிடம் வந்து முழுவதுமாக ஈடுபட்டு அன்பு பூண்டவர். ஒருநாள் காலை பதினொரு மணிக்கு அவரிடமிருந்து தந்தி வந்தது. அது பகவானிடம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. என் மனைவி பிரசவ வலியால் கஷ்டப் படுகிறாள், பகவான் ஆசியை நாடுகிறேன்'' என்பதுதான் அதன் விசயம். சிறு இடைவெளிக்குப் பிறகு பகவான் "என் கிட்டே சொன்னால் மட்டும் ஆயிடுமா?'' என்றது. முருகனாரும் மற்றும் சிலரும் சந்நிதியில் இருந்தனர்.

பிற்பகல் மூன்று மணிக்கு சிவமோகன்லாலிடமிருந்து தன் மனைவிக்கு சுகப்பிரசவம் ஆனதாக மற்றொரு தந்தி வந்தது. பகவான் வழக்கப்படி 'உம், உம்' என்று காதில் வாங்கிக்கொண்டது. அச்சமயம் அங்கிருந்த முருகனார், பகவானே, இன்று காலை, என்கிட்டே சொன்னால் மட்டும் போதுமா? என்றீர்கள். சிவமோகன்லால் தங்களிடம் தெரிவித்து ஆசி வேண்டிய படியால்தானே அவர் மனைவிக்கு சுகப் பிரசவம் ஆயிற்று? என்று கேட்டார். பகவான் பதிலொன்றும் அளிக்கவில்லை. 'அறிவேன்' என்பது போன்ற புன்முறுவலுடன் தன் மௌன வியாக்யானத்தைத் தொடர்ந்தது.

(தொடரும்...

**கடிக்காதே சீறு**

காட்டுவழியே சென்ற முனிவர் ஒருவரை விஷப்பாம்பொன்று துரத்தியது. அப்போது அவர் தம்மிடமுள்ள மந்திர சக்தியால் பாம்பை மயக்க வைத்து பாம்புக்கு நல்ல உபதேசம் கொடுத்து ஒருவரையும் தீண்டாது வாழ்ந்தால் நீ மோட்சம் அடையலாம் என்று சொல்ல பாம்பும் அவர் சொன்னபடி நடந்துவர அயலில் உள்ள பிள்ளைகள் கடிக்காத பாம்புதானே என்று பாம்பைக் கொல்ல எத்தனித்தார்கள். அவைகட்குப் பயந்து பாம்பு உணவு தேடவும் வெளியே வராது சாகும் தறுவாயை அடைந்துவிட்டது. பிறிது ஒருநாள் முனிவர் அவ்வழியால் சென்றபோது பாம்பைத் தேடிக் கண்டுபிடித்து ஏன் இப்படி மெலிந்துள்ளாய் என வினவ பாம்பு நான் இப்போது ஒருவரையும் கடிப்பதில்லையே என அறிந்து என்னை மக்கள் துன்புறுத்துகிறார்கள், அவர்கட்குப் பயந்து உணவு தேடாமல் இருந்துள்ளேன் என்று சொல்லியது. முனிவர் பாம்பே அவர்களைக் கடிக்க வேண்டாமென்றல்லவா சொன்னேன் சீறிப் பயமுறுத்த வேண்டாமென்று சொல்லவில்லையே என்று சொன்னார். உன்னைப் பாதுகாத்துக்கொள். மற்றவருக்குத் துன்பம் செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் பண்பும் பயனும்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

நட்பு என்பதும் கேண்மை என்பதும் ஒரு பொருள் தருவன. நட்பு என்னும் பொருள் தரும் கேள் என்ற பதம், நட்பு உடைமை என "மை" விகுதி பெற்று விரிந்து, (கேள்+மை) கேண்மை ஆனது என்க. "யாதும் ஊரே, யாவருங் கேளிர்" என்னும் தொடர், கேண்மை உடையவர் கேளிர்; நண்பர் எனப் பொருள் தந்து நின்று, நன்மக்கள் அனைவரையும் நண்பர்களாகக் கொண்டு பழகும் தமிழர் பண்பாட்டை உலகறியச் சுட்டி நிற்பதைக் காண லாம்.

இந்த வகையில், நட்பு அல்லது கேண்மையை எப்படி யாரோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெய்வப் புலவர் எப்படிக் கூறுகிறார் எனப் பார்ப்போம்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள் 783)

ஒரு நல்ல நூலை திரும்பத் திரும்பப் பலமுறை படிக்குந்தோறும் அதிலுள்ள நயம் விளக்கம் பெறுகிறது. ஒருமுறை படித்தவுடன் அதன் பயனை முற்றும் அனுபவிக்க முடியாது. இதனை நுனிப்புல் மேய்தல் என்பர். ஆகவே, நாம் பண்புடையாளரைக் கண்டறிந்து அவரோடு பழகப்பழக, அந்த நட்பு பயனுள்ளதாக அமையும் என்பது வள்ளுவர் அறிவுரையாகும்.

"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்" என்னும் பெரியோர் கூற்றும் மனங்கொள்ளத்தக்கதே. இனி ஒருவருடைய செயற்றிறன், அறிவுத் திறன்களை நன்கு அறிந்துகொண்டு, அவரோடு நட்புக்கொள்ள முயல்வது நன்மை தரும் என்கிறார் திருவள்ளுவர்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் (குறள் 441) என்பது அவர் வாக்கு.

இப்படி ஒருவருடைய குணாதிசயங்களை அறிந்து கொள்வதுபற்றி நாலடியார் கூறுவதைப் பார்ப்போம்.

யானை அனையவர் நண்பு ஒரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்.

யானையைப் போன்ற குணமுடையவர் நட்பைத் தவிர்க்க வேண்டும்; நாயை ஒத்தவர் கேண்மையைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்கிறது. ஏன்? யானை தனது பாகனது நல்ல தன்மையைப் பலமுறை அறிந்திருக்கும். ஆயினும் திடீரெனக் கோபித்து அந்தப் பாகனையே கொன்றுவிடும். அதேவேளை, நாய் என்ன செய்கிறது? தான் எஜமானன் எனப் பழகியவர், சிலவேளை தனக்கு வேலால் எறிந்து ஒரு புண்ணை உண்டாக்கிவிட்ட வேளையிலும் அந்த எஜமானுக்கு நன்றியுணர்வைக் காட்டி வால் குழைத்து நிற்கிறது. ஆனபடியால் நாய் போன்றவருடைய நட்பை, கேண்மையை விரும்புங்கள் என்கிறது நாலடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஒருவரது உள்ளக் கருத்தைச் சில காலப் பழக்கத்தில் உணர்ந்து ஒழுகும்போது, கற்றறிந்தவரது கேண்மை, நுனிப்பகுதியிலிருந்து கரும்பைச் சுவைப்பதுபோல, நாட் செல்லச்செல்ல அந்த நட்பு இனிமையில் கூடிச் செல்வதாக உணர முடியுமாம். அவ்வாறு இல்லாமல், தொடக்கத்தில் இனிமை காட்டிவிட்டுப் போகப்போக நன்மையில்லாமல் அடியிலிருந்து கரும்பைச் சுவைப்பதுபோல இருப்பின் அத்தொடர்பு விடத்தக்கது என்கிறது நாலடியார்.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்பு தின்றற்றே - குருத்திற்(கு)
எதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ என்றும்
மதுரமி லாளர் தொடர்பு என்பது பாடல்.

அன்றியும், சிற்றறிவுடையாரது நட்பு, காலையில் தோன்றும் நிழல் குறைந்து குறைந்து மதியத்தில் இல்லாமலே போவது போன்றது. ஆனால், மாலையில் தோன்றும் நிழல் நீண்டு நீண்டு போகுமேயன்றி குறையாது. ஆகையால் நீண்டு செல்லும் புகழாளர் தொடர்பையே பேணுங்கள் என்கிறார் நாலடியார் தந்த புலவர். பாடல் தொடரும்...

நளிகடல் தண்சேர்ப்ப! நாள் நிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை; - விளிவின்றி
அல்கு நிழல்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு (நாலடியார்)

ஆகவே, மாசற்றவர் கேண்மையைப் பற்றிக்கொள்ளல் வேண்டும்; ஒப்பில்லாதவர் நட்பைப் பலவழிகளிலும் தவிர்த்துக் கொள்வது நல்லது என்கிறார் தெய்வப் புலவர்.

மருவுக மாசற்றார் கேண்மை யொன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு (குறள் 800) என்பது வள்ளுவர் வாக்கு.

அன்றியும், சில மனிதர், முகத்தில் இனிமை காட்டி அகத்தில் வஞ்ச மனத்தராய் இருப்பர். அவ்வாறானவரை இனங்கண்டு தூர விலகிவிட வேண்டும் என்கிறார் பொய்யாமொழிப் புலவர்.

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும் (குறள் 824) என்பது பாடல் ஆகும். இதனை மேலும் விளக்குகிறது இன்னொரு பாடல்.

முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம் நக நட்பதே நட்பு (குறள் 786) என்பது திருக்குறள்.

ஆகவே உண்மையான நட்பு, உடுக்கை இழந்தவன் கைபோல, நமக்கு வரும் இடுக்கண் களைவதாக இருக்கும் அதாவது, உடுக்கை (நமது அரையில் கட்டிய வேட்டி கழன்றால்) இழந்தால், நமது மானம் போகாமல் தானாகவே நமது கை அதனைப் பற்றிக்கொள்ளும்; நமது மானத்தைக் காப்பாற்றும். இந்தக் கை உதவுதல் போன்ற செயற்பாடு உள்ளவரது நட்பை பெறுவோமாக என்கிறார் திருவள்ளுவனார்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் 788)

ஆகவே நட்பின் பண்பு எவ்வாறு அமையவேண்டும்; அதன் பயன் எவ்வாறு நமது வாழ்க்கையில் உதவ வேண்டும் என்பதை விளக்கச் சில உதாரணங்களைக் காட்டினோம். மேலும் முயன்று மாணவர் பயன்பெறுவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| திருமதி கி. சற்குணன் | வெள்ளவத்தை | 25000. 00 |
| வே. கணபதிப்பிள்ளை ஆசிரியர் | அல்வாய் | 2000. 00 |
| கரன் | (தொண்டைமானாறு அஞ்சல்மூலம்) | 11500. 00 |
| P. மகாலிங்கம் | லண்டன் | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. பராசக்தி | காரைநகர் | 1250. 00 |
| அ. தில்லைநாதன் | ஆவரங்கால் | 5000. 00 |
| ஏ. இராஜநாதன் | ஆவரங்கால் | 5000. 00 |
| கஜாசிவா | நவக்கிரி | 1000. 00 |
| ப. நடராஜா நினைவாக ந. நந்தகுமார்மூலம் | கொழும்பு | 20000. 00 |
| நந்தசபேஷ், நந்தசுரேஷ், நந்தீஸ்வரன் கந்தரோடை | சுன்னாகம் | 5000. 00 |
| சி. வசிகரன் | அச்சுவேலி | 1000. 00 |
| S. பிரதீஸ்குமார் (வங்கியாளர்) | கொழும்பு | 3000. 00 |
| பொ. வெங்கடேஸ்வரன் | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| சி. பரணிதரன் | வவுனியா | 1000. 00 |
| கு. கருணாநிதி | நீர்வேலி தெற்கு | 500. 00 |
| சிவமணி கோபாலபிள்ளை | காரைநகர் | 2000. 00 |
| திருமதி அனுஷா ஸ்ரீகரன் | நியூஸ்லான்ட் | 10000. 00 |
| இரத்தினம் மாரிமுத்து | அராலி மத்தி | 1500. 00 |
| P. கோபிநாத் | கொழும்பு-15 | 5000. 00 |
| A. மகாலிங்கம் | வத்தளை | 3000. 00 |
| சி. அஷிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 800. 00 |
| சி. துவாரகா | கொழும்பு | 3000. 00 |
| ந. தெய்வேந்திரம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| செ. சண்முகநாதன் | பருத்தித்துறை | 2000. 00 |
| இ. இளஞ்செழியன் | மீசாலை | 1000. 00 |
| ச. சிவராஜேஸ்வரி | சுழிபுரம் | 500. 00 |
| த. சிவரூபன் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| E.S.P. நாகரெட்ணம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| பாலசிங்கம் அன்னஞானம் பண்ணாகம் | சுழிபுரம் | 1000. 00 |

*சோம்பலைப் போக்கு; அப்போதுதான் நீ சுதந்திரமான மனிதனாகிறாய்.* 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்ரீரஞ்சன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| தயாநிதி ஸ்ரீகரன் | தெகிவளை | 5000. 00 |
| கா. பரநிருபசிங்கம் | அச்சுவேலி | 1500. 00 |
| வல்லிபுரம் இராசம்மா நினைவாக து. இந்திராதேவிமூலம் | சுண்ணாகம் | 5000. 00 |
| சி. விவேகானந்தம் | பருத்தித்துறை | 1000. 00 |
| மா. மகாலிங்கம் | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| சிவபாலசிங்கம் சரஸ்வதி | கரவெட்டி கிழக்கு | 5000. 00 |
| ம. ஜெயகரன் | நீர்வேலி | 10000. 00 |
| விஜயலெட்சுமி (தமிழ்ப் பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவனம்) | கொழும்பு | 2000. 00 |
| கதிரவேலு பரமேஸ்வரி | அச்சுவேலி | 3000. 00 |
| லோ. புஷ்பராணி | வல்வெட்டி | 5000. 00 |
| இந்திரன் கந்தையா | காரைநகர் | 1000. 00 |
| செ. லோகேஸ்வரராஜா | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ந. பிரசாத் | அச்சுவேலி | 1000. 00 |
| புஸ்பகாந்தன் தினோஜன் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| ந. கிருஷ்ணராஜா (பாபு வெதுப்பகம்) | புன்னாலைக்கட்டுவன் | 10000. 00 |
| செல்வி த. உமையாள் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| T. நந்தகுமரன் | கல்வியங்காடு | 1000. 00 |
| M. மைதிலி (தாதி உத்தியோகத்தர்) | வல்வெட்டித்துறை | 500. 00 |
| செ. ரவீந்திரநாதன் குடும்பம் | கொழும்பு-13 | 2000. 00 |
| சம்பந்தமூர்த்திமூலம் தக்சாயினி, லவன், ஞானகுரு | லண்டன் | 10000. 00 |
| சி. கணேசமூர்த்தி | அல்வாய் | $2^1/_2$ மூடை அரிசி |
| சாந்தினி லோகரட்ணம் | கனடா | 6000. 00 |
| V. டினோஷன் | கரவெட்டி | 5000. 00 |
| ஆ. சிவநாதன் அதிபர் | கரவெட்டி | 1000. 00 |
| இ. உமாசுதன் | சுதுமலை | 1500. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. நிரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தா. சந்திரசேகரம் | புலோலி | 1000. 00 |
| பா. ஜனார்த்தனன் | தாவடி | 2000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் | கோப்பாய் தெற்கு | 10000. 00 |
| சு. சுரேந்திரரட்ணம் | கோப்பாய் தெற்கு | 5000. 00 |
| A.T. சிவனேசபிள்ளை | இடைக்காடு | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| க. நல்லையா | சங்கானை | 1000. 00 |
| மு. முருகதாஸ் | சிறுப்பிட்டி தெற்கு | 2000. 00 |
| T. செந்திநாதன் (இலங்கை வங்கி நெல்லியடி) | சுழிபுரம் | 2000. 00 |

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்திற்கு வழிகாட்டிய திசைகாட்டியே அமரர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"



என்ற திருவள்ளுவக் கோட்பாட்டுக்கமைவாக குருக்கள் ஐயா வானுயரப் போற்றப்படுகின்றார்.

காரைநகர், ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான குரு மரபைச் சேர்ந்தவரும், இலங்கையிலே சைவ, கலை, பண்பாட்டு, இலக்கிய, இலக்கண, வேத, மந்திர, சித்தாந்த தேவார, திருவாசக, புராண, இதிகாச, ஆகமம் சார்ந்த அத்தனை விடயங்களையும் ஐயந்திரிபற மொழிகின்ற மூதறிஞருமாகிய கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் சைவத்திற்கு வழிகாட்டிய திசைகாட்டியாவார். பக்குவம், பயபக்தி, பணிவு, பரோபகாரம், பராக்கிரமம், பணிவிடை ஆகிய பண்புகளை இந்த மண்ணில் பாங்கோடு விதைத்த பெருந்தகையாளர். தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதமோடு காரைநகர் மணிவாசகர் சபையை ஸ்தாபித்து (1940-2015) அதனது பவள விழாவில் கலந்து சிறப்பித்த பாக்கியத்தினைக் காரைநகர் பெற்றது. அந்தப் பவளவிழா மலரில், (பக்கம் 19இல்) சித்தம் அழகியார் என்பதற்குத் தரும் விளக்கம் மிக அருமை. எவ்வாறெனில் "திருவாசகத்தை முறையாக அன்புடன் நாளும் ஓதி வருபவர் எவராயினும், அவர்தம் உள்ளமும் உயிரும் - 'தூய்மையும் அழகும் உற்று சித்தம் அழகியார் எனப்படும் மேலான நிலையைப் பெறுவர்' என்பது திண்ணம்" என்று விளக்கமுரைத்துள்ளார். குருக்கள் ஐயா அடிக்கடி பாடிப்பரவசமடையும் பாடலிதுவாகும்.

"திருக்குறள் போல் நீதிநூல்
சிவஞான போதம் போல்
பெருக்கமிகும் மெய்ப்பொருள் நூல்
பீடுயர் தொல் காப்பியம் போல்
திருத்தமிகும் இலக்கணநூல்
சிறந்த திருவாசகம் போல்
உருக்கமிகும் பக்திநூல்
உலகினில் வேறொன்றுமில்லை"

ஆம், அவரது ஆத்மா திருவாசகமோடு ஒன்றித்தே சிவனோடு ஒன்றாகியது. சிவபுராணம் என்பது பிறவிப் பிணிதீர்க்கும் ஒரு அருமருந்து. அருமருந்தொரு தனிமருந்தினை அம்பலத்தில் கண்டேன் என்பார். ஈழத்துச் சிதம்பரத்தின் தாற்பரியமாக, மேலும் சொல்வதானால் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாக என்றும் காட்சிப்படுத்தப் படு கின்றார். திருநீறு, சந்தனம், உருத்திராக்க மாலை, பத்திர புஷ்பம், திருநீற்றுப்பை, சிவாச்சாரிய நூல், வேட்டி, சால்வை, சிவாய நம, நமசிவாய என்ற சிவாம்சங்கள் அவரது மேனியில் தவழ்ந்து விளையாடின.

தமிழ், ஆங்கிலம், சமஸகிருதம் ஆகிய மும்மொழிகளில் பாண்டித்யம் பெற்ற இவர், கொழும்பு விவேகானந்தக் கல்லூரி யில் ஆசிரியராகக் கடமையாற்றியபோது பல மாணவப் பரம்பரையை வளர்த்து ஆளாக்கிய பேறு பெற்றவர்.

தமிழ் வித்தகர்களான, தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளை அவர்களிட மும், பண்டிதர் து. பஞ்சாட்சரக் குருக்கள், வேதவிசாதரர் சிதம்பர சாஸ்திரிகள், மகா வித்துவான் சி. கணேசையர், பண்டிதமணி ஆகியோரிடமும் குரு - சிஷ்ய முறையில் பயின்று வேண்டியமுறைகளில் தேர்ச்சி பெற்றார். அதன் பலனாகப் பல நூல்களைப் பதிப்பித்தும், பொருத்தமான நூல்களை எழுதியும், ஊடகங்கள் மூலமாக ஆக்கபூர்வ மான கட்டுரைகளை வழங்கியும், அல்லா மலும் தீவக மக்களின் துயர்களை எடுத் தியம்பியும் காலத்தால் அழியாத தொண் டினை ஆற்றிக்கொண்டிருந்தார்.

முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம், பல்துறைப் பிரமுகர், ஆ. சபாரத்தினம், ஆகி யோருடன் நெருங்கிப்பழகிய சுபாவத்தினால் தமிழ், சமய மணம் இவரிலும் கமழ்ந்தது. மூதறிஞர் சிற்பி ஐயாவின் அரவணைப்பினால் தமிழ் அமுதாகிச் சிவமாகியது. காரை நகரில் பிறந்தாராயினும், கந்தரோடையிலே தான் அவர் மனம் பற்றுக்கொண்டதெனலாம். வற்றாக்கை அம்மன் அருகிருந்து திருவருள் பாலிக்கும்போது வைத்தீஸ்வரக் குருக் களுக்கு யாது குறை? எந்தவொரு குறையு மில்லாது அவரது பிள்ளைகள், தத்தம் வாழ்க்கை முழுவதுமாக அவருக்குத் தொண்டு செய்யும் விருப்போடு தம்மை அர்ப் பணித்தமை எங்கேயும் காணமுடியாது. இது அல்லவோ பிள்ளைகள் என்று புகழப்படு கிறார்கள். தந்தை சொல்மிக்க மந்திர மில்லை. என்ற மூத்தோர் மொழிக்கேற்ப மந்திரம் வெல்லப்பட்டுள்ளது.

ஆயிரம் பிறைகண்ட ஆசாரசீலருக்கு இந்த ஆண்டு, 2015.09.22ஆம் திகதியன்று நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்காக, காரைநகர் வாழ் சமூகம் பெருமெடுப்பிலே பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. எனவே 22.09.2015 அன்று அவரது வீட்டில் திருமுறை ஒலிக்கட்டும். திருவாசகம் ஒலிக் கட்டும். "காதலாகிக் கசிந்து கண்ணீர மல்கி, ஓதுவார்தமை நன்நெறிக் குய்ப்பது" என்ற சம்பந்தரின் மகுட வாசகம் ஒவ்வொரு ஆலயங்களிலும் ஒலிக்க வேண்டும். திரு முறைகள் பண்ணோடு ஒலிக்க வேண்டும். ஓத வேண்டும். மேலும் தமிழ் வேதம் உயிர் பெற வழி செய்யப்படுதல் நம் ஒவ்வொரு வரினதும் பொறுப்பாகும். இதையெண்ணி குருக்கள் ஐயா அவர்கள் வருந்தியதாக, காரைநகர் களபூமி க.கு.க. சிவபாலன் அவர்கள் குறிப்பிடுகின்றார். திண்ணபுரத்தான் மகிமையைக் கூறும், திண்ணபுர அந்தாதியை மீள்பதிப்புச் செய்த தமிழ்த்தொண்டும், சிவத் தொண்டும் என்றும் நினைவு கூரத்தக்கவை யாகும். வேதத்தை விட திருமுறையே உயர்ந்தது என்பதை, திருமுறைப் பெருமை என்னும் நூல் மூலம் நிரூபித்துக் காட்டியவர். ஆலயங்களில் திருமுறைக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்பதை அழுத்தம் திருத்தமாக உரத்துச் சொன்னவர் குருக்கள் ஐயா அவர்கள்.

சிவத்தமிழ் வித்தகர், பண்டிதர், மூதறிஞர், புலவர்மணி, முத்தமிழ் வித்தகர், கலாநிதி ஆகிய பட்டங்களைத் தமதாக்கிய குருக்கள் ஐயா அவர்கள் எத்தனை பட்டங் களைச் சுமந்தபோதும் அவற்றையெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்குமே பெரிதுபடுத்தி மக்களை சுமக்க வைக்க விரும்பியதேயில்லை. அருவமாகத் தனது செயற்பாடுகளை வெற்றிபெறச் செய்த தில் காரைநகர் மண், குருக்களுக்கு என்றும் தலைவணங்கிய வண்ணம் அஞ்சலிகளை ஊடகங்கள் மூலமாக வெளியிட்டு வரு கின்றன. குருக்கள் எது சொன்னாலும் ஏற்று அதன்படி நடக்கின்ற பண்பு காரைநகர் வர மாகப் பெற்றிருக்கிறது. குருக்கள் சொன்னால் அது மந்திரமாக இன்றும் போற்றப்படுகிறது. ஆதலால், சகலாகம பண்டிதராக விளங்கும் வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயாவை, இலங் கையில் சைவசமயத்தின் பெருந்தலைவராகப் போற்றியிருந்தால், சைவ சமயம் மீண்டும் ஒரு பக்திக் காலமாகி இலங்கையில் துளிர் விட்டிருக்கும். அல்லாமலும் இவரது சொல் உலகிலே பெறுமதியாக இருந்திருக்கும். ஆலயம் சார்ந்ததாயினும் சரி, ஆகமம் சார்ந்ததாயினும் சரி, புராண இதிகாச மாயினும் சரி, இலக்கிய இலக்கணமாயினும் சரி, சமூகம் சார்ந்ததாயினும் சரி, பண்பாடு என்றாலும் சரி, கலாச்சாரமாயினும் சரி, திருமுறை என்றாலும் சரி வைத்தீஸ்வரக் குருக்கள் ஒரு தீர்ப்பு வழங்கக் கூடிய ஒரு நீதிபதி என்று பெறுமதியாகச் சொல்ல முடி யும். காலம் அதைச் செய்திருக்க வேண்டும். எல்லோரும் தலைவராக எப்போதும் வரலாம். ஆனால், தலைவராகப் பிறக்க வேண்டும். குருக்கள் தலைவராகவே மிளிர்ந்தமையால்த் தானே, கல்விச் சமூகம் கால் தொட்டு வணங் கிற்று. அவரது உருவம் சிவசின்னங்களால் முழுமையாகப் பொலிந்திருந்தது. காரோ, பங்களாவோ, கட்டிடங்களோ இல்லாமல் கட் டிய நாலுமுழ வேட்டியும் ஒரு துண்டும், பஞ்சாட்சரச் செபிப்பும், திருவாசகத் தேனு மாக, இலங்கையில் சைவ சமயத்தின் அடை யாளமாக, சூரிய சந்திரர் இருக்கும்வரை வைத்தீஸ்வரக் குருக்கள் வணங்கப்படுவார். இவரது தந்தையாரான கணபதீஸ்வரக் குருக்களின் சிவபூஜையில் மகிழ்ந்த இறை வன், இவரது சிவாகம வாழ்வில் கிடைத்த சுகானுபவத்தைக் கேட்டுக் கேட்டு அனுபவிப் பாராக.

18ஆம் நூற்றாண்டில், தமிழ்நாடு உத்தரகோசமங்கையில் இருந்துவந்து தன் னைச் சித்தி விநாயகர் கோவில் அருச்சக ராகக் கடமையாற்றிய, முத்தமிழ் வித்தகர், மேருகிரி முருகேசையர், கார்த்திகேசுப் புல வர் வழிவந்த குருக்கள் ஐயா அவர்கள், பல காலமாக ஏட்டுப்பிரதியாயிருந்த "தன்னை யமக அந்தாதியினை" உரையுடன் வெளி யீடு செய்தார்.

இவ்வாறு முழுமையாகத் தன்னை தமிழுக்கும், சமயத்திற்கும், மண்ணுக்கும் அர்ப்பணித்த குருக்கள் ஐயா அவர்கள், உடல், உளம், உள்ளவர்கள் சிவபுராணத் தால் பொலிந்து உருகிட 25.04.2015 சனி அதிகாலை சிதம்பரம் கூத்தபிரான் திருவடி யிலே ஜோதியானார். சிவபெருமான் உமா தேவி சகித பேரானந்த வாழ்வில் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். வேறென்ன வேண்டும்? இதுதானே வாழ்க்கையின் பேறு! இது தெரிந்து விட்டால் வாழ்க்கை எல்லோ ருக்கும் இனிதாய் அமைந்துவிடும்.

ஆம்! குருக்கள் நினைவாக, இந்தி யாவில் இருந்து ஓதுவார்கள் வரவழைக்கப் பட்டு திருமுறைகளைப் பண்ணோடு பாடு வதற்கு, காரைநகரில் ஒரு அறக்கட்டளை செயற்படுமாயின், ஒரு பண்பாடான சந்ததி யாழ்ப்பாணத்தில் வரமாக அமையும். காரை நகர் இலங்கையின் சொத்தாக நிச்சயம் மிளிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## *16. அன்பியல்*

411. நாம் சிவபெருமானிடத்து எப்பொழுது அன்பு செய்தல் வேண்டும்?

இம்மனித சரீரம் பெறுதற்கு அரியது; இது இக்கணம் இருக்கும், இக்கணம் நீங்கும் என்று அறிதற்கு அரிதாகிய நிலையாமையுடையது எனவே நாம் இடையறாது எக்காலமும் அன்புசெய்தல் வேண்டும்.

412. சிவபெருமான் இம்மனித சரீரத்தை எதன் பொருட்டுத் தந்தருளினார்?

தம்மை மனசினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மால் அதிட்டிக்கப்படும் குருலிங்க சங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையும் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவும் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலம் செய்யவும், தமது பெருமையையும் தமது திருவடியார் பெருமையையும் காதுகளினாலே கேட்கவும் இம்மனித சரீரத்தைத் தந்தருளினார்.

413. சிவபெருமானிடத்து அன்பு எப்படி விளையும்?

பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த வாசங்களின் இலக்கணங்களையும், பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், எத்துணையும் பெரிய சிவபெருமான் எத்துணையும் சிறிய நமக்கெல்லாம் இரங்கி, எளிவந்து, ஓயாது என்றும் உபகரிக்கும் பெருங்கருணையையும், இவ்வியல்பின் அநந்தகோடியில் ஒரு கூறாயினும் உடையவர் பிறரொருவரும் நமக்கில்லாமையையும் இடையறாது சிந்திக்கச் சிந்திக்க, நமக்கு அச்சிவபெருமானிடத்து அன்பு விளையும்.

414. சிவபெருமானிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்கள் எவை?

அவருடைய உண்மையை நினைக்குந்தோறும், கேட்குந்தோறும், காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறும் திவலை உண்டாகப் புளகம் கொள்ளலும், ஆனந்த அருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும், பிறவுமாம்.

415. இல்வாழ்க்கை முதலியவைகளில் புகுந்து அவ்வவைகளுக்கு வேண்டும் தொழில்கள் செய்வோருக்கு இடையறாத வழிபாடு எப்படிக் கூடும்? அவர் யாது செய்வார்?

கழைக்கூத்தன் கூத்தாடும் பொழுதும் அவன் கருத்து உடற்காப்பிலே வைக்கப் பட்டிருத்தல் போல, நாம் லௌகிக கருமம் செய்யும் பொழுதும் நமது கருத்துச் சிவபெரு மானிடத்தே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; இப்படிச் செய்யாதொழியின், மரண காலத்திலே சிவத்தியானம் சித்திப்பது அரிதரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**416. சிவபெருமானை வழிபடுவோர் மரிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும்?**

கற்றாரிடத்தும், பொருளினிடத்தும் சற்றாயினும் பற்று வையாது, சுற்றத்தாரைத் தூரத்தே இருத்திவிட்டுத் தாம் விபூதி தரித்து, மனம் கசிந்துருகக் கண்ணீர் பொழிய, உரோமம் சிலிர்ப்பச் சிவபெருமானைத் தியானித்து, வேத சிவாகமங்களையேனும் தேவார திருவாசகங்களையேனும் சிவபக்தர்கள் ஓதக் கேட்டல் வேண்டும்.

417. அவர் மரிக்கும் பொழுது அவருக்கு யாது செய்தல் வேண்டும்?

அவருடைய புத்திரர் முதலானவர்களுள்ளே சிவதீட்சையுடையவர், மனம் ஒரு சிறிதும் கலங்காது, அவர் நெற்றியிலே சிதம்பரம் முதலிய புண்ணிய ஸ்தலத்து விபூதி சாத்தி, அவருடம்பிலே வில்வத்து அடிமண்பூசி, அவர் வாயிலே கங்காதீர்த்தம் விட்டு, அவர் தலையைத் தமது மடிமீது கிடத்தி, அவர் செவியிலே அருமருந்தாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்தல் வேண்டும்.

## நித்திய கரும விதி

சைவசமய மரபிலே பிறந்தவர் எல்லாரும் ஏழாம் வயசிலாவது, ஒன்பதாம் வயசிலாவது சமயதீஷை பெற்று, அநுட்டானம் செவ்வையாகப் பழகிக்கொண்டு, மரண பரியந்தம் விடாது செய்க.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுந்து, சிவசிவ என்று நெற்றியில் விபூதி தரித்துக் கணபதயே நம; என்று குட்டிக், குருப்பியோ நம; என்று கும்பிட்டுச் சிவபெருமானை இருதயத்திலே தியானித்து, ஒரு தோத்திரமாவது சொல்லிக்கொள்க.

அதன்பின் எழுந்து, புறத்தேபோய், மலசல மோசனஞ் செய்து, சௌசம் பண்ணித் தந்த சுத்தி செய்து, முகங்கழுவி, நெற்றியில் விபூதி இட்டுக்கொள்க.

நீர்நிலையை அடைந்து ஸ்நானஞ் செய்து, ஈரந்துவட்டி, நெற்றியில் விபூதி இட்டு, உலர்ந்த சுத்த வஸ்திரம் தரித்துக் கொள்க.

அநுட்டான பாத்திரத்தை வெள்ளையிட்டு அலம்பிச் சுத்த சலம் பூரித்துச் சுத்த பூமியிலே சிறிது சலம் விட்டு, அதன்மேற் பாத்திரத்தை வைத்துக் கிழக்கு முகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் இருந்து, விபூதி இட்டுக்கொண்டு அநுட்டானம் பண்ணுக.

வியாதியினாலே ஸ்நானஞ் செய்யமாட்டாதவர், கைகால் கழுவி, ஈர வஸ்திரத்தினால் உடம்பெங்குந் துடைத்து, உலர்ந்த சுத்த வஸ்திரத்தினால் ஈரம் துவட்டி, நெற்றியில் விபூதியிட்டு, வேறு உலர்ந்த சுத்த வஸ்திரம் தரித்து, ஆசமனம் செய்துகொண்டு, அநுட்டானம் பண்ணுக. அதுவும் செய்யமாட்டாதவர், நெற்றியில் விபூதியிட்டுச், சிவபெருமானைத் தியானித்துச் சிவமூல மந்திரத்தை மனசிலே சிந்தித்துக்கொண்டு கிடக்க.

வீட்டுக்கு விலக்காயுள்ள பெண்கள் மூன்று நாளும் சிவமூலமந்திரத்தை மனசிலே சிந்தித்துக்கொண்டு, நான்காம் நாள் ஸ்நானஞ் செய்து, அநுட்டானம் பண்ணுக.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலநறுவை மண்ணிலே சிவத்தொண்டு புரியும் சிவதொண்டர் அணியினர்

– கந்தசாமி ரோகினி – தினேஸ்குமார் அவர்கள் –

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்னச் சத்திரமாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
இன்னருள்ள கருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் பாவரிகளை மகுட வாக்கியமாகக் கொண்டு 2010ஆம் வருட தை மாதம் 14ஆம் திகதி அறநெறி செம்மல்களை அகிலத்திற்கு தருவிருக்க ஆதிகால வரலாற்றாய் வில் சிவபூமி எனும் பெயர் பொறித்த பொக்கிஷமாம் பொலநறுவை மண்ணில் சமன்பிட்டி எனும் இறைகடாட்சம் கூடிய திருவூரில் உருவானதே அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலையாம்.

அறம் என்றால் என்ன? சமயத்தின் உட்பொருள் என்றால் என்ன? வழிபாட்டு முறைகள் என்றால் என்ன? என அறியாத எதுவும் தெரியாத நிலையில் தொடங்கிய இவ் அறநெறிக்கூடம் இன்று ஈழம் அறிந்த பல பண்புடைச் சிறார்களை உருவாக்கியதில் மட்டற்ற மகிழ்நிலையில் உளதெனலாம். பாடசாலையின் வரலாற்றை ஒருபுறம் வைத்து இக்கூடத்திற்குள்ளாக வந்து சிவத்தொண்டு எனும் சீரிய பணிகளைச் செய்யும் சிவதொண்டர் அணி பற்றி கூற விளைகின்றேன். அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பதிவிலே உள்ள எமது சிறார்களது சிவதொண்டு பற்றி வியக்காதவர்கள் இல்லை எனலாம். சுமார் 20 சிறார்கள் தமது பாடசாலையின் வழிகாட்டல்களை மையப்படுத்தி இங்கு இரு குழுவினராக சிவதொண்டு புரிகின்றனர். இந்து மாமன்றத்தின் யாழ் பணிமனையில் மட்டுமல்லாது மட்டக்களப்பு இந்து கலாச்சார நிலையத்திலும் மூன்று தடவைகள் விசேட பயிற்சி பெற்று சிறந்ததொரு கட்டமைப்பின்கீழ் பணிகளைச் செய்கின்றனர்.

குறித்த செய்கையில் இவர்களுக்கு தூய்மையைக் குறிக்க வெண்மை நிறச் சீருடை தயார் செய்யப்பட்டு திறம்படச் செய்யும் இச்சிறார்கள்மூலம் ஊரிலே 2010ஆம் வருடம் இருந்த நிலையினைவிட இன்று ஆன்மீகம், ஆலயம் பற்றி பலர் விழிப்படைந்திருப்பது தான் எமது அணியினரது சேவைக்குக் கிடைத்த முதல் மரியாதை. அரசையடி எனும் சிறு ஆலயத்தை தமது கட்டுக்கோப்பில் வைத்துப் பராமரிப்பது ஒவ்வொரு வாரமும் கூட்டுப் பிரார்த்தனை செய்வதும் ஆலயம் தோறும் சிரமதானம் செய்வதும், வாரம் இரு தடவை கணனிப்பயிற்சியில் ஈடுபடுவதும், தரம் 03 அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு யோகாசனம், சூரிய நமஸ்காரம் கற்பிப்பதும், பெரியார்கள், நாயன்மார்கள், மற்றும் விரத விழாக்களை முறைப்படி கொண்டாடுவதும், நாட்டார் பாடல்களை தேடி நயமோடு அதைத் தொகுத்து முறைப்படி பாடி மனனம் செய்வதும் சிவராத்திரி தின கொடி விற்பனையில் ஈடுபடுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பண்பாடுகளைப் பேணும் நாரினால் மாலை கட்டுதல், மாக்கோலம் போடுதல் என இவர்களது பணியினை விரித்துக்கொண்டே போகலாம்.

தொழில்நுட்பத்தில் தொலைந்துபோகும் இவ்வுலக மானிடர்கள் மத்தியில் பெரும்பான்மையினர் செறிந்து வாழும் மாவட்டத்திலே இவர்களது பணி மிக அவசியமானதொன்றே. அது மறுப்பதற்கில்லை.

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டாய்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என தாயுமானவர் விளம்பியதை எமது சிறார்கள் விரும்பி விநயமுடன் ஆற்றி வருகின்றனர். ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளை மிக மகிழ்வோடு எமது அன்னையின் அறப்பள்ளிக்கு அனுப்பி வைப்பது அவர்களது பேரவா, மனமாற்றம் இவையாவும் எமது பாடசாலைக்கும், சிவதொண்டர் அணிக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியே என்றால் மறுப்பதற்கில்லை. எமது பணிக்கு வலுவூட்டுவோர் வரிசையில் அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் சந்நிதியான் ஆச்சிரமம் என்பன கைகோர்த்து எமது பணிக்கு உதவுவதனை,

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"

"புண்ணியம் செய்வார்க்குத்தான் பூவுண்டு நீருண்டு" எனும் சிந்தனை மொழிகளுக்கேற்ப என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை. மேற்படி அமைப்புக்கள் எம்மோடிணைந்து இறைபணியாற்றுகின்றது. எல்லாம் கடவுள் சித்தம் என எண்ணி நெஞ்சம் நிறைவடைகின்றோம்.

நேரடியாகப் பலர் எமது சிறார்களை எமது ஊரில் வந்து சந்தித்து அவர்களது பணிக்கு உதவ முன்வந்திருப்பது "நாங்களல்ல, எங்கள் முன்னோர் செய்த தவப்பயன்" என்றே கூறலாம். விஞ்ஞான உலகோடு போராடி மெய்ஞானத்தை மெய்மறந்து கூட சிலர் நினையா. இவ்வுலகில் இவர்களது பணியைச் செப்பும்போது உள்ளம் நிறைவு பெறுகின்றது. பூரணத்துவம் பெறுகின்றது.

இத்தனைக்கும் இவர்களது கல்வி நிலையும் மிகச்சிறந்த முறையில் இடம்பெறுகின்றது. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் நடாத்துகின்ற இந்துசமயப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் எமது பாடசாலையிலிருந்து மட்டும் சுமார் 11 மாணவர்கள் இவ்வருடம் பரிசு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு தமிழ்ச் சங்கம், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், லேக்ஹவுஸ் இந்து மன்றம், கொழும்பு பல்கலைக்கழகம் என சகல நிறுவனங்களும் நடாத்துகின்ற போட்டிகளில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடுவது கற்றல் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் எமது மாணவர்களுக்குள்ள இடம் எடுத்துரைக்கப்படுகின்றது.

"பேரறிவாய் பெருஞ்சுடரொன்று அதன்
வேரறியாமையை விளம்புகின்றேன்"

எனத் திருமூலர் கூறியதுபோல சிவதொண்டர் அணியினர் செய்யும் சிவப்பணிகளை எடுத்தியம்பியதில் ஓரளவு திருப்தியடைகின்றேன்.

"அன்பே சிவம்
அதுவே நலம்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிப் பெருவிழா – 2015

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா (2015) சந்நிதியான் ஆச்சிரமத்தில் 22.05.2015 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பக்திபூர்வமாக ஆரம்பமானது.

அன்று காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விஷேட பூசை வழிபாடு களைத் தொடர்ந்து ஆச்சிரம வளாகத்தின் பூசை அறையிலும் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் (நல்லை ஆதீன முதல்வர்) ஆசியுரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின. உருத்திரபுரம் - மகாதேவா ஆச்சிரம சிவத்திரு கணேசானந்தா சுவாமிகளின் வாழ்த்துரையும், கிளிநொச்சி சின்மயா மிஷன் சுவாமிகள் ஸ்ரீமத் சுவேந்திரா சைதன்யா சுவாமிகளின் சிறப்புரையும் மண்டபம் நிறைந்திருந்த மக்களின் மனதில் ஆன்மீக உணர்வுகளைத் தூண்டின. சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

ஆசியுரை, வாழ்த்துரை, சிறப்புரையினைத் தொடர்ந்து வைகாசிப் பெருவிழாவின் விசேட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. பண்டாரவளை கோணமுட்டாவ ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், அப்புத்தளை, தொட்டிலாகல ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய ஸ்ரீவாணி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பொலநறுவை- சமன்பிட்டி- கறப்பளை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என வைகாசிப் பெருவிழா களைகட்டியது. மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மேற்குறித்த அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாட்டு, நடனம் என அனைத்து நிகழ்ச்சிகளும் அனைவராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் ஆத்மா சாந்திக்கான மௌன அஞ்சலி நிகழ்வில் யாழ் சைவ மகாசபை அங்கத்தவர்கள் உட்பட அனைவரும் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டனர்.

கலை நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட பாடசாலைகளுக்குப் பாராட்டுப் பத்திரங்களும், மாணவர்களோடு வருகை தந்திருந்த ஆசிரியர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன.

## 2015ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 5000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வ. இராசையா இ. இராஜேஸ்வரன் | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் | இளை. வைத்திய பொறுப்பதிகாரி | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் | ஆசிரியர் கரணவாய் | கரவெட்டி | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 2500. 00 |
| க. சொர்ணவடிவேல் | கதிர்காமசிங்கம் அன்சன்ஸ் | அளவெட்டி | 1000. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஜெகதீஸ்வரன் தர்மவதனி | | U.K. | 10000. 00 |
| மு. தியாகராசா | | சாவகச்சேரி | 1000. 00 |
| N. துரைராசா | | யாழ்ப்பாணம் | 1000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 08

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## சுய சிந்தனையை வெளிப்படுத்தியவர்கள் சித்தர்கள்

01) சுதந்திரமான சிந்தனையாளர்கள்

அட்டமா சித்திகள் என்று அழைக்கப்படும் பல்வேறு சித்திகள் (சிறப்பு ஆற்றல்கள்) கைவரப் பெற்றவர்கள் என்றும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள் என்றும், கர்மவினையைத் தனக்குக் கிட்ட நெருங்கவிடாமல் செய்தவர்கள் என்றும், உடலோடு கிடைக்கக்கூடிய முத்தியாகிய சீவன்முத்தி நிலை கைவரப் பெற்றவர்கள் என்றும் சித்தர் களுக்குப் பல்வேறு விளக்கங்கள் அறிஞர் பெருமக்களால் கூறப்பட்டுள்ளது. வெறும் சடங்குகளும் கிரியைகளும் தான் சமயம் என்று காட்ட முனைந்த வைதிகர்களின் கருத்துக்கு எதிராக மனிதநேய சிந்தனையை முன் வைத்தமையால் இவர்களைப் புரட்சியாளர்கள் என்றும் உலகாயத வாதிகள் என்றும் வைதிகப் பற்றுடைய பழமை வாதிகள் கூறினார்கள். திருவருளினால் சுயசிந்தனையில் பிரகாசிக்கின்ற ஒளிமயமான கருத்துக்களைக் கூறுபவர் களைச் சித்தசுவாதீனம் உடையோர், புரட்சியாளர்கள், சமூக விரோதிகள் என்று கூறி ஒதுக்கும் வழக்கம் பழமைவாதிகள் சிலரிடம் இன்றும் காணப்படுகிறது. அப்பன் வெட்டிய கிணறு என்பதனால் அதில் உள்ள உப்புத் தண்ணியைத்தான் நாம் குடிப்போம் என்று கூறுபவர்கள் இன்றும் இருக்கின்றார்கள்.

ஆனால் நம்மிடையே வாழ்ந்த சித்த புருஷர்கள் சுய சிந்தனைக்கு முதன்மை கொடுத்தார்கள். சித்தம் ஒப்புக்கொள்ளும் உண்மையை மட்டும் தரிசித்தவர்கள் தெய்வத்தின் குரலாக நமக்குள்ளே இயங்கும் மனச்சாட்சிக்கு மதிப்பளித்தவர்கள். இவர்களுடைய பார்வையில் உலகாயதமும் உண்டு. ஆன்மீகமும் உண்டு. இவற்றுக்கு மேலாக அனுபவித்த உண்மையையும், அறிந்த உணர்வையும் அச்சமின்றி எடுத்துரைக்கும் மனப் பக்குவமும் உண்டு. இந்த மனப் பக்குவமே அவர்களை எந்த நிறுவனக் கட்டமைப்புக்குள்ளும் அடங்காத சுயசிந்தனையாளர்களாகக் காட்டியது.

மெய்யுணர்வாளர்களாகிய சித்தர்கள், பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் என்பதைத் தங்கள் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். அண்டம், பிண்டம் ஆகிய அனைத்திலும் இறைவன் வியாபித்திருக்கின்றான். வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி என பஞ்சபூதங்களின் இயக்கத்திற்கும் இறைவனே மூலகாரணன் என மணிவாசகரின் திருவாசகம் கூறுகிறது. ஒருவன் மெய்யாகவே இறைவனை நேசிக்கிறவனானால் அந்த நேசத்தை இறைவனால் நிரம்பிக் கிடக்கிற இந்த உலகத்தின் ஒவ்வொரு பொருளின்மீதும் காட்டக் கடமைப்பட்டவன். அவனது கருத்து நிலையில் ஒவ்வொரு சீவனும் நடமாடும் கோயில். சிவனைச் சீவனிலேயே காணலாம். இவ்வாறு சீவனிலே சிவத்தைக் கண்டவர்கள்தான் சித்த் புருஷர்கள். சிவஞானத்தை அனுபவத்தில் கண்டவன் போதன், அறிஞன் என்றெல்லாம் அழைக்கப்படுவான். உண்மைப் பொருளைப் பற்றிய மெய்யுணர்வினைத் தெளிவிக்கும்

*கர்வம் கொள்ளாதவன் புகழ் பெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் என்பதாலேயே மெய்கண்டார் அருளிய நூலிற்கு சிவஞானபோதம் என்ற பெயர் ஏற்பட்டது.

சீவன் பாசங்களால் பீடிக்கப்பட்டிருக்கும் நிலையில் சிவனை அறிய முடியாது சீவன் எனவும் சிவன் எனவும் இரண்டு பொருள் இல்லை. சீவன் ஜீவத்தன்மை நீங்கி அகண்ட ஞானம் பெற்ற பின்பு சீவன் என்ற பெயரைப் பெறாது சிவன் என்ற பெயரையே பெற்று விளங்கும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட்டிருப்பரே

## 02) எது ஆசூசம்

மெய்யுணர்வாளர்களாகிய சித்தர்கள் சட்டத்தையும் அதிகாரத்தையும் முன் வைத்து சமூகத்தை சீர்திருத்த முயலவில்லை. உள்ளத் தூய்மையுடன் சுதந்திரமாகச் சிந்தித்தார்கள். பஞ்சமா பாதகங்கள் ஐந்தையும் செய்யத் தயங்காதவர்கள் போலிச் சாத்திரம், சடங்கு என்பவற்றிலே அதீத நம்பிக்கை கொண்டு அலைவார்கள். காமப் பசிகொண்டு பரத்தையர் வீடெல்லாம் அலைந்து திரிவார்கள். ஆத்த மனையாள் அகத்திலே இருக்கவே காத்த மனையாளை நாடி அலையும் கயவர்கள் ஆசூசம் (தீட்டு) என்பன சமூக வாழ்வில் பேணப்படல் வேண்டும் என்று முரசறைவார்கள். காமக் கிழத்திகளோடு கூடுவார்கள். கீழ்நாட்டு மேல்நாட்டு குடிவகைகளை எல்லாம் மதுபான சாலைக்குச் சென்று மூக்குமுட்ட அருந்துவார்கள். வெளியிலே வந்து தீண்டாமை பற்றியும் ஆசூசம் பற்றியும், துடக்குப் பற்றியும் பேசுவார்கள்.

மற்றவனைத் தொட்டால் தீட்டு என்று தீண்டாமை பாராட்டுகின்றவன் உண்மையில் தனக்கேயல்லவா தீண்டாமை பாராட்டிக் கொள்ள வேண்டும். மனித உடலே அழுக்கின், மலத்தின் விளைவு தானே என்பதை இவர்கள் உணர மாட்டார்கள். பஞ்சபூதத்திலும் இறைவனின் வியாபகத்தைக் காண்கின்ற ஞானிகள் ஆசூசம் பாராட்டமாட்டார்கள்.

"பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ"

என்பார் சிவவாக்கியார்.

"சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்"

என்பார் பாம்பாட்டிச் சித்தர்.

"சாதி வகையில்லாமல் சஞ்சரிப்பதெக்காலம்"

என்பார். பத்திரகிரியார்.

இவ்வாறு சித்த புருஷர்களில் பலர் தீண்டாமை என்னும் கொடிய நோயை எமது சமூகத்தில் இருந்து விரட்ட வேண்டும் என்று பாடினார்கள். இவ்வாறு அனல் கக்கிக்கொண்டு வந்த சித்தர்பாடல் வரிகளுக்கெல்லாம் தீக்கொளுவிய மூலப் பொறியாக "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலரின் பாடல்வரி அமைந்துள்ளது.

அறிவில்லாதவர் பிறரைத் தீண்டுவதால் தீட்டு உண்டாகிறது என்பர். ஆனால் தீட்டு எவ்விடத்தில் உள்ளது என்பதை யாரும் அறியவில்லை. தீட்டுத் தோன்றும் இடம் எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரிந்து கொண்டால் மானிட உடம்பே தீட்டுத்தான் என்பதைப் புரிந்து கொள்வர். உயிர்கள் தோன்றும் இடமாகிய கருப்பையே தீட்டுத் தோன்றும் இடமாகும். எனவே மனித உடலே தீட்டு உடையதாகவே காணப்படுகிறது. உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரைத் தீண்டுவது ஆசூசம் என்பது அறியாமையால் ஏற்பட்டதாகும். மலங்களால் ஆகிய உடம்பே அசுத்தமானது என்பதை அறிவதே அறிவுடைமையாகும்.

ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூசமாமிடம் ஆரும் அறிகிலார்
ஆசூசமாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூசமாமே

-திருமந்திரம்.

### 03) மனம் உயர மனிதன் உயர்வான்

மனிதன் மனத்தை உடையவன் ஆகையால்த்தான் மனிதன் என்ற பெயரை அடைகின்றான். எனவே ஒவ்வொருவரும் மனத்தை உயர்த்த முயற்சிப்பது இன்றியமையாத தாகும். மனம் உயர மனிதன் உயர்கின்றான். மனம் பொறிகளின் வழியாக உலகியலில் ஈடுபட்டு இன்ப துன்பங்களை நுகருகின்றபோது ஆகாமிய வினைகளுக்கு வழி தேடிக் கொள்கிறது. மனிதனைத் தன் நிலையில் இருந்து கீழே இறக்கவும் மேலே உயர்த்தவும் மனமே மூலகாரணமாக இருக்கிறது. இறைவன் எல்லா நன்மைகளும், இன்பங்களும், ஆற்றல்களும் இயைந்த தனிப் பரம்பொருள். நம்முடைய மனம் உய்ய வேண்டுமானால் இறைவனுக்கும் நமக்கும் ஓர் இணைப்பு வேண்டும். இறைவனையும் நம்மையும் இணைக்கும் ஊடகமாகவே மந்திரங்கள் காணப்படுகின்றன. நிறைமொழி மாந்தராகிய பெரியோர்கள் அருளிய மந்திரங்களின் துணை கொண்டே இறைவனுடைய திருவருளைப் பெற நாம் முயற்சி செய்தல் வேண்டும்.

பன்னிரு திருமுறைகளில் மந்திரம் என்ற பெயருடன் இணைந்திருக்கும் நூல் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமே ஆகும். திருமந்திரம் அனுபவ ஞானத் திருநூல். செந்தமிழ் சிறக்க எழுந்த ஒரு நூல். மூவாயிரம் பாடல்கள் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிற யோகநூல். தமிழ் மக்கள் அனைவருமே உணர்ந்து ஒழுக உயர்வளிக்கும் ஒரு தனி நூல். மனமே மனிதர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமான வாழ்விற்கு ஆதாரமாக உள்ளது. மனமே எண்ணங்களின் விளைநிலம். மனம் தூய்மையானதாக இருந்தால் சொல்லும் செயலும் தூய்மையுடையதாக இருக்கும். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பது மகாகவி பாரதியின் வாக்கு. "மனமது சுத்தமானால் மந்திரம் செபிப்பதுண்டோ" என்றே தாயுமானவரும் கூறுகின்றார்.

அஞ்சுகின்றவர்களாலும், அகங்காரம் பிடித்தவர்களாலும் என்றுமே இறைவனைக் காணமுடியாது. அஞ்சுகின்றவர்கள் கோழைகள். இவர்கள் உலகியல் இன்பங்களில் ஆசைகொண்டு அலைவார்கள். ஐம்புலன்களை இவர்களால் அடக்கி ஆள முடியாது. அகங்காரம் அறிவை அடக்கிவிடும். ஆத்திரத்தைக் கிளப்பி விடும். அச்சமும் அகங்காரமும் உடையவர்கள் உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காண முடியாமல் தவிப்பார்கள். அச்சத்தையும் அகங்காரத்தையும் அடக்கிக் கொண்டால் இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நிலையைக் காண்பது நிச்சயமாகும். உறுதியாகும் என்பதைப் பின்வரும் ஒளவையாரின் ஞானக்குறள் தெளிவு படுத்துகிறது.

அச்சம் ஆங்காரம் அகத்து அடக்கினால் பின்னை
நிச்சயம் ஆம் ஈசன்நிலை

பொய் பேசுவோர் அன்புள்ளவராக வாழமுடியாது; ஈசன் அருளுக்கு இலக்காக முடியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் இரக்கமுள்ளவராக இருக்க முடியாது. இறைவன் கருணையை அடைய முடியாது. நல்லொழுக்கம் இல்லாதவர்களால் அன்புடன் நடக்க முடியாது. ஆண்டவன் அருளைப் பெறமுடியாது. உண்மை பேசுவதனால் வஞ்சகமற்ற உள்ளத்தாலும், குற்றமற்ற பரிசுத்தமான ஒழுக்கத்தினாலும் ஈசன் அருளைப் பெற முடியும்.

வாய்மையால், பொய்யா மனத்தினால், மாசற்ற
தூய்மையால் ஈசன் அருள்

ஒளவையார் ஞானக்குறள்.

மனிதருள் இனம் பிரிப்பது, சாதி வேற்றுமை பாராட்டுவது அறிவீனம்; இயற்கைக்கு மாறானது; சக்தி பூசை செய்கின்ற உயர்குலத்தில் பிறந்த ஒருவர் தாழ்ந்த குலத்தில் உள்ள பெண் ஒருவருடன் கூடினால் கருத்தரிக்காதா என்று ஞான வெட்டியான் என்ற சித்தர் தனது பாடலிலே வினவுகின்றார். இஞ்சியைப் பயிரிட்டால் மஞ்சள் விளையுமா? ஏலம் பயிர் செய்தால் சுக்கு விளையுமா? விஷத் தன்மை பொருந்திய எட்டி மரத்திலே நல்ல எலுமிச்சம் பழம் தோன்றுமா? ஞான வெட்டியான் மனித குலம் மனித இனம் ஒன்றே என்பதைப் பின்வரும் தனது பாடலின் ஊடாக விளக்குகிறார்.

இஞ்சியிட மஞ்சள் உண்டோ? ஏலம் இடச் சுக்காமோ?
நஞ்சுகந்த எட்டியிலும் நல்ல எலுமிச்சையுண்டோ?
துஞ்சுபுகழ் பூசை செய்யும் சுந்தரரே என் குலத்தில்
வஞ்சியை நீர் சேர்ந்ததனால் மைந்தன் தரியாதோ?

## 04) ஞானம் பெறத் துணை நிற்பது - சிவாயநம மந்திரம்

உள்ளம், பேச்சு, செயல் எல்லாம் ஒன்றுபட்டிருத்தலே நல்ல மனிதர்களின் இயல்பாகும். கல்வி அறிவு குறைந்த பாமர மக்களிடம் இத்தன்மையைக் காணலாம். தர்மத்திற்கு மாறாகச் செயற்படுவதற்கு பாமர மக்கள் அஞ்சுவார்கள். ஆனால் படித்தவர்கள் அறிவுடையவர்கள், நாகரிகம் உள்ளவர்கள் என்று தம்மை நினைத்துக் கொண்டிருப்பவர் களிடம் எண்ணமும், பேச்சும் செயலும் ஒன்றாக இருப்பதைக் காணுதல் அரிது. அவர்கள் பெரும்பாலும் ஒன்றை நினைப்பார்கள். அந் நினைப்பை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு நினைத்திருப்பதற்கு நேர்மாறாகப் பேசுவார்கள். செயலிலே இறங்கும்போது சொல்லுக்கு மாறாகச் செயற்படுவார்கள். படித்துப் பட்டம் பெற்றவர்களிலும் பொருளாதார வசதி உடையவர்களிலும் பலர் இத்தன்மை உடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். அறிவாளி, திறமைசாலி, தந்திரசாலி, காரியம் சாதிக்கக்கூடிய சாமர்த்தியசாலி என்றெல்லாம் இவர்கள் போற்றப்படுகின்றார்கள். நினைப்பும், சொல்லும், செயலும் ஒன்றாக உள்ளவர்களை ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதவர்கள், அறிவில்லாதவர்கள், வெகுளிகள் வாழும் தந்திரம் தெரியாதவர்கள், காரியம் சாதிக்கும் திறமை இல்லாதவர்கள் என்றெல்லாம் இழிவாகப் பேசப்படுகின்றார்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தாலும் அவர்கள் வஞ்சகர்கள், கபடர்கள், சூழ்ச்சிக்காரர்கள் என்பதில் ஐயம் இல்லை. இத்தகையவர்களுடன் தொடர்பு வைத்திருப்பது என்றும் ஆபத்தையே தரும். "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்றே இராமலிங்க சுவாமிகளும் இதனைக் குறிப்பிடுகின்றார். உலகியல் வாழ்க்கையிலே நமக்குக் கிடைக்கின்ற உறவுகள் எல்லாம் சிறப்பானதாக இருப்பதற்கு அம்பாளின் துணை வேண்டும் என்பதை "நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்" என அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியிலே குறிப்பிடுகின்றார்.

கள்ள உள்ளம் படைத்தவர்கள் எவ்வளவுதான் சிறந்த ஞான நூல்களைப் படித்தாலும் பயன் இல்லை. சிறந்த அறிவுரைகளைப் பிறருக்கு எடுத்துரைத்தாலும் அதனைச் சமூகம் ஏற்கப் போவதில்லை. வாக்கும் வாழ்வும் ஒருமித்து இல்லாதவர்களின் கருத்துக்களால் யாரும் பயன் அடைய மாட்டார்கள். அவர்கள் தம் உள்ளத்தில் உள்ள கள்ளத் தன்மையை அடியோடு அறுத்தால் அவர்களுடைய வாக்கிலே தெய்வீகம் பிரகாசிக்கும். தமது சக்தி, தமது திறமை, தமது ஒழுக்கம் எல்லாம் தமது உள்ளத் தூய்மையிலேதான் தங்கியுள்ளது என்ற உண்மையை உணர்ந்து கொள்வார்கள். அறிவு என்னும் ஒளியைத் தரிசிக்கும் இவர்கள் தெளிந்த ஞானம் உடையவர்களாக இருப்பார்கள். இத்தகைய ஞானத்தை நமக்குள் சிறந்து நிற்கும்படி செய்வது சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும்.

கள்ள உள்ளத்துடன் கூடி இருந்து சிறந்த ஞான நூல்களை ஓதுகின்றீர்கள். வஞ்சனையை உடையவர்கள் நல்ல கதியைத் தவிரத் தீய கதி எதையும் காணமாட்டீர்கள். உங்கள் உள்ளத்தை மாசற்றதாக வைத்துக்கொண்டு நாள்தோறும் அறிவொளியைக் கண்டு வாழ முயற்சி செய்யுங்கள். அத்தகைய வல்லமை பெற்றால் தெளிந்த அறிவானது உம்மிடம் சிறந்து நிற்கும். இதற்குச் சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சரமும் துணை செய்யும் எனச் சித்தபுருஷராகிய சிவவாக்கியர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

கள்ள உள்ளமேயிருந்து கடந்த ஞானம் ஓதுவீர்!
கள்ளம் உள் அறுத்தபோது கதி இது அன்றிக் காண்கிலீர்
உள்ளமே விளக்கி நித்தம் ஒளி அணுக வல்லிரேல்
தெள்ளி ஞானம் உம்முளே சிறந்ததே சிவாயமே.

இருபத்தோராம் நூற்றாண்டை அறிவியல் யுகம் என்று கூறலாம். விஞ்ஞானம் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. ஆனால் மற்றொரு புறத்தில் மூடநம்பிக்கைகள் மலிந்து காணப்படுகின்றது. மெய்ஞ்ஞானமாகிய சமய நெறியைச் சிலர் மூடநம்பிக்கைகளின் இருப்பிடமாகக் காட்ட முயற்சி செய்கிறார்கள். விஞ்ஞானத்தின் எதிர் மூடநம்பிக்கையையே ஒழியச் சமயம் அன்று என்பது மூதறிஞர் ராஜாஜியின் கருத்தாகும். மக்கள் அனைவரும் உண்மை அறிவு பெற வேண்டுமானால் சித்த புருஷர்களின் கருத்துக்கள் மக்களிடையே பரவ , வேண்டும் அப்பொழுதுதான் பகுத்தறிவுச் சுடர் பழைய மூடநம்பிக்கை என்னும் மேகங்களால் மறைக்கப்படாமல் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமயங்களில் அன்பு

– திரு க. கணேசதேவா அவர்கள் –

## அறிமுகம்

உலகில் பல்வேறு சமயங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சைவ சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம் என்பன முக்கியமானவை ஆகும். இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற மூன்று சமயங்களும் இறைவனைக் குறிப்பிடுகின்ற பெயரில் மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது. இறைவன் ஒருவன் என்ற கருத்தில் வேறுபாடு இல்லை. இவை அன்பு வழிபாடு மூலமே இறைவனை அடையலாம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அன்பினால் இறைவனை அடைவதற்கு பல வழிகளை இவை கூறுகின்றன.

இறைவனை வழிபாடு செய்வது, மதித்து வணங்குவது அன்பின் சிறப்பம்சங்களில் ஒன்று. யார் இந்த முழு அண்டத்தின்மீது அன்பு செலுத்துகிறார்களோ அவர்கள் அண்டத்தில் உள்ள எல்லாவற்றையும் வழிபாடு செய்வார்கள். ஏனெனில் இந்த உயிரினங்கள் வாழும் ஜீவ பூமியில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் தெய்வத்தின் ஒரு பகுதி. இந்த அண்டத்தை பூஜிப்பதால் நீங்கள் அதிக தெய்வ அம்சத்தைப் பெறுகிறீர்கள். அன்பைப் பற்றிப் பேசிக் கொண்டும், புகழ்ந்து கொண்டும் இருப்பது அன்பின் அடையாளம் ஆகும். கடவுள் தினமும் உங்களை வழிபாடு செய்கின்றார். தெய்வம் உங்களைத் தினமும் வழிபாடு செய்கிறது. அதுதான் பூஜை. பூஜை செய்யப்படுபவரும், பூஜை செய்பவரும் ஒன்றாகி விடுகிறார்கள். அந்தச் சங்கமம் தான் அன்பு. தெய்வத்தை எல்லா உருவங்களிலும் மதித்து வணங்குவதுதான் தெய்வீக அன்பு. இந்த தெய்வீக அன்பையே உலக சமயங்கள் கூறுகின்றன.

## உலக சமயங்களில் இறைவன் அன்பு

கடவுளிடம் செலுத்தும் தூய அன்பே தெய்வீக அன்பாகும். அன்பு ஒரு தியாகமே ஆகும். அன்பு ஒருபோதும் எதையும் ஏற்றுக்கொள்ளாது. எப்போதுமே கொடுக்கிறது. அன்பு மூலம் இறைவனை அடைய வெவ்வேறான மூன்று வழிகள் உள்ளன.

1. இறைவனை மிகப் பலம் வாய்ந்த பெரியவராகப் பாவித்து அவருடைய பலத்திற்கு வணக்கம் செய்வதாகும்.
2. இறைவனைத் தந்தையாக வழிபடுவது ஆகும்.
3. இறைவனை அன்னையாக மதிப்பதாகும்.

கடவுளை உண்மையாக நேசிப்பவன் இறை அன்பிலே மூழ்கிக் கிடப்பான். அவன் தவறான வழிக்குச் செல்லமாட்டான். அன்பு தன் நலத்திற்கு முற்றும் மாறானது. பிரதிபலனை எதிர்பாராமல் விழுந்து வணங்கும் குணமே அன்பு. ஆனால் கடவுளின் அன்பு வேறுவகையானது. சுயநலமும் தன்நலமும் இல்லாது இறைவனை வணங்குவது இறை அன்பு என சமயங்கள் கூறுகின்றன.

பக்தன் ஒருவன் தான் கொள்ளும் பக்தியில் மேல்நிலைக்குப் போகும் அளவு சுயநலப்பற்று அவனது உள்ளத்தில் நின்று அகன்று போகின்றது. அந்த பக்தன் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் விண்ணப்பம் ஒன்று உண்டு. எனது உடல், பொருள், ஆவி எல்லாம் இறைவா நாம் உமக்கே உகந்தளித்து விடுகிறேன். உம்மிடம் இருந்து நான் எதையும் வேண்டேன். என்னையே உமக்கு உரிமையாக்குவதனால் உம்மிடம் இருந்து நான் கேட்பதற்கு ஒன்றுமில்லை. நானே எனக்குரியவன் அல்லன். ஆதலால் எனி எதை எமக்காகவென்று நான் உம்மிடம் இருந்து கேட்பது, இத் தீவிர நிலையைப் பக்தன் ஒருவன் அடைய வேண்டும் எனச் சமயங்கள் கூறுகின்றன. பக்தன் கடைப்பிடிக்கும் பக்தி நெறியானது பக்தியின் பரிபூரண நிலை என்றும் கூறப்படுகிறது. பக்தியின் நின்று உதிக்கும் அவயம் அல்லது எதற்கும் அஞ்சாமை என்னும் பரிபூரண நிலை அவனுக்கு வந்தடைகிறது. அப்பெரு நிலையை அடைந்துள்ள பக்தனின் அன்பு சிறுமை எதிலும் கட்டுண்டு போவதில்லை. அனைத்தையும் தன்னகத்தே அடக்கும் பேரன்புக்கு உறைவிடமாக அவ் அன்பன் இயங்குகின்றான். இதனையே சமயங்கள் இறை அன்பு பற்றிக் கூறுகின்றன.

இத்தகைய பேரன்பு நிலையை அடைவதற்கான நெறிகள் பலவாகும். அவைகளிற் பல நெடுந்தூரமானவை என்று கூறலாம். பக்தி மார்க்கங்களிலே உயிர்கள் அனைத்தும் பேரன்புடன் கடவுளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. ஒரு பக்தரிடம் இருக்கும் அன்பிலும் பார்க்க மற்றொரு பக்தனிடம் இருக்கும் அன்பு பன்மடங்கு மேலானதாக இருக்கலாம். அன்புநெறியில் மேல்நோக்கிப் போய்க்கொண்டிருப்பவர்களுக்கு ஒவ்வொரு படித் தரத்திலும் வெற்றியே வந்து வாய்க்கிறது எனலாம். வெற்றிகளும் தோல்விகளும் எண்ணில் அடங்காதவை களாக மாறி மாறி அமைந்து கொண்டே இருக்கின்றன. பிறந்தது முதல் சாகும் வரையில் எத்தனை பொருட்கள், எத்தனை உயிர்கள், எத்தனை கோட்பாடுகள் மாறி மாறி ஒருவனது அன்புக்கு இலக்காக இருந்து வருகின்றன. அவை யாவும் அன்பு நெறியில் செல்லுகின்ற வர்களுக்கு அந்தந்த படித்தரத்தில் பயன்பட்டு வந்திருக்கின்றன.

நம் அனைவருக்கும் தெரிந்துள்ள ஒன்றை மாதிரியாக வைத்துக் கொண்டு அன்புக் கடவுளை அறிந்து கொள்ள முயலலாம் என சமயங்கள் கூறுகின்றன. அன்பு நெறியில் அல்லாது வேறு நெறிகளிலே கடவுளை நோக்கிச் செல்லுகிறவர்கள் அப்பரம்பொருளை ஒரு பெரிய நியாயாதிபதியாக நினைப்பதுண்டு என சமயங்கள் கூறுகின்றன. அத்தகைய நியாயாதிபதிக் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதற்கு சமயங்கள் சான்றுகளை எடுத்துச் சொல்லுகின்றன. இவ்வாறு சமயங்கள் அன்பு நெறியில் சென்று அன்பு என்னும் குறியை எட்டியுள்ள அன்பனுக்கு யாவும் அன்புக் கடவுள் சொரூபமாக உள்ளான்.

முழுப் பொருளாய் இருப்பவர் கடவுள். அவர் சொரூபத்தில் ஒரு சிறு பகுதியாக இருப்பது பிரபஞ்சம். கடவுளை நேசிக்கக் கற்றுக் கொண்டவன் பிரபஞ்சத்தை நேசிப்பவனாகின் றான். முழுமுதற் பொருளிடத்து அன்பு வைப்பவன் அதன் சிறு சிறு பகுதிகளிடத்தும் அன்பு வைப்பவன் ஆகின்றான். முழுமுதலாய் இருக்கும் பூரண பொருளே பக்தன் போற்றும் அன்புத் தெய்வம். அந்த அன்புத் தெய்வத்தின் பலதரப்பட்ட தோற்றங்களாக ஏனைய தெய்வங்கள் இயங்குகின்றன என சமயங்கள் கூறுகின்றன. எண்ணில் அடங்காத கொள்கைகளும், கோட்பாடு களும், சமய நூல்களும் தோன்றுவதற்கு முகாமையாகவும் இருப்பவர் கடவுள் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் கண் எழுந்திருக்கும் இறைவன் எல்லாம் வல்லவன். அணையா விளக்காக அவன் ஓயாது ஒளிர்ந்துகொண்டிருக்கிறான். அன்புத் தெய்வமாக அவன் பார்க்கும் இடமெங்கும் வீற்றிருந்து கொண்டு தோன்றியுள்ள அனைத்தையும் அன்பு சொரூபமாகவே அவன் விளங்கிக் கொண்டிருக்கின்றான். உள்ளத்தின் உள்ளே எழுந்தருளி இருக்கும் பேரன்பு பொருளை அறிந்து கொண்டவன் உள்ளும், புறமும் அந்த அன்புத் தெய்வமே காட்சி கொடுத்துக் கொண்டிருப்பதை காண்கிறான். இவ்வாறு சமயங்கள் தெய்வ அன்பு பற்றி எடுத்துக் கூறுகின்றன.

இந்து சமயத்தில் அன்பு தொடர்பான கருத்துக்கள்

"சைவம் சிவனுடன் சம்பந்தமானது" என்று திருமூலர் இலக்கணம் கூறுகின்றார். சிவனுடன் ஒன்றாய் இருப்பதாகிய ஒரு நிலையை எடுத்துக்கூறும் சமய நெறியே "சைவம்" என்று அவர் குறிப்பிடுகின்றார். சைவ சமயத்தில் அன்பு பற்றிய கருத்துக்களைத் திருமூலரின் திருமந்திரம் மூலம் அறிய முடிகின்றது.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே.

(திருமந்திரம், அன்புடைமை-1)

அன்பே சிவமாய் அமர்ந்திருத்தல் ஒரு நிலை அனுபவம். அதற்கான முறை அன்பே சிவம் என்பதை அறிதல். "அறிதல்" என்பது முறையாகவும் அமர்ந்திருத்தல் என்பது அடையும் நிலையாகவும் கூறப்பட்டிருக்கின்றன. அறியப்படும் ஒன்றே இருத்தலுக்கும் உரியதாய் இருக்கின்றது. அதுதான் அன்பே சிவம் என்பது. இதை அறிதலையும் பின் இருத்தலையும் விளக்குகிறது இப்பாடல் ஆகும். அன்பு என்னும் சொல்லுக்கு ஒரு பொருள் உண்டு. அன்புக்கு "சிவம்" என்ற பொருளையும் சொல்லலாம் என்பது திருமூலரின் திருமந்திரம் சொல்கின்றது.

சைவ சமய நாயன்மார்கள் வரலாற்றைக் கூறும் பெரியபுராண நூலில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

"கூடும் அன்பினில் கும்படலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

பெரியபுராணம்- 143

என்று சிவனடியார்களை அறிமுகப்படுத்துகின்றார் சேக்கிழார். அன்பு கூடிய அவர்கள் பரம்பொருளுடன் கூடும் "வீடு" என்னும் நிலை வாழ்வை நயமான வாழ்வு என்று கொள்ளவில்லை. கூடும் அன்பில் இறைவனை கும்பிடுகிறார்கள் என்பது இதன் கருத்தாகும்.

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் இடைவிடாமல் அன்பைக் கைக்கொள்ளும் நிலையைப் பேசுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியா ரேனும் - சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு"

(அற்புதத் திருவந்தாதி-2)

எம்முடைய துன்பங்களை நீக்கவில்லை என்றாலும், எங்கள்மீது இரக்கப்படவில்லை என்றாலும், நாங்கள் செல்லவேண்டிய வழியைக் காட்டாதவர் என்றாலும் சுடர் உருவமாக நடமாடும் எம் கடவுள்மீது என் அன்பு இடைவிடாமல் செயற்படும்! எந் நெஞ்சமும் அவருக்குரியது! என்று கூறுகிறார்.

அன்பு வேறு, பேரன்பு வேறு என்னுமாறு மனிதப் பிறவியின் வாழ்வு அமைகிறது. அன்பை நிலைநிறுத்தும் முயற்சியான பிறவித் தன்மையில்தான் அவ்வேறுபாட்டு நிலை உணரப்படும். ஆனால் பிறப்பில் அன்பு விளங்கத் தொடங்கியபோது அன்பேதான் பெருகுவ தாகிறது என்பது தெரியவரும். இதை உணர்த்தும் அப்பரடி வாக்கு.

"என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே"

என்று குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் அன்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே

அன்பு கொண்ட எண்ணத்தில் செயற்படுபவர் பரம்பொருளால் இன்பம் பெறுபவரே. இடையிலுள்ள வரலாறாகத் தெரிவது துன்பம் அடைகிறார்கள் என்பதாக. ஆனால் அது தொண்டுதான் என்று அதன் வரையறையை விளக்கினார் திருஞானசம்பந்தர்.

சைவசித்தாந்தத்தில் சிவப் பரம்பொருளானது "அயராத அன்பு" செய்துகொண்டிருக்கும் தன்மையைப் புலப்படுத்துகின்றது. ஆன்மா கண்ணுக்குப் பொருளைக் காட்டுவது போல் ஆன்மாவைக் கண்டு காட்டுகிறான் இறைவன் என்பதும் அப்படி செய்கிற அவன் அயர்வில்லாமல் அன்பு செய்பவனாக இருக்கிறான் என்பதும் கூறப்பட்டன.

இவ்வாறாக சைவசமயம் தொடர்பான நூல்களாக சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமூலரின் திருமந்திரம் சேக்கிழார் சுவாமிகளின் பெரியபுராணம், காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிய தேவார திருப்பதிகங்களிலும் அன்பு பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

## ஆன்மீக சிந்தனைகள்

இறைவனின் திருநாமத்தை ஜபம் செய்யும்போது, இறைவனை மட்டுமே சிந்தியுங்கள். எந்த இறைவனது திருநாமத்தை ஜபம் செய்கிறீர்களோ அந்த இறைவனை மட்டுமே அப்போது நினையுங்கள். இல்லாவிட்டால் உங்கள் செயல் பொருளற்றதாகிவிடும். நேரத்தை வீணாக்கியதாகவே ஆகும். எனவே முழு மனத்துடன் ஜபம் செய்வதில் ஈடுபடுங்கள்.


*உணர்ச்சிகளுக்கு அடிமையானவனே அடிமைகளில் மட்டமானவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



–திரு இரா. செல்வவடிவேல்

## சொர்க்கம், மோட்சம் அடைதல்

இதற்கு முன்பு நித்திய சிரார்த்தம் செய்வதால் இறந்தவர் அடையக்கூடிய நற்பலன்களை பகவான் கூறினார். அந்த நித்திய சிரார்த்தத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளை விளக்குகிறார்.

இறந்தவருக்கு ஓராண்டு காலம் வரையில் நித்திய சிரார்த்தம் செய்வது நல்லது. நாள்தோறும் ஒரு சான்றோருக்கு உணவளித்து உபசரிக்க வேண்டும். பின்பு உணவையும் நீரையும் குடத்தில் நிறைத்து அவருக்கு தானமாகக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நாள்தோறும் செய்வதால் இறந்து போன உயிர் மகிழ்ச்சியுறும். அது மட்டுமன்றி எமலோகத்துக்கு அழைத்துச் செல்லும் எமதூதர்களும் திருப்தி அடைந்து அந்த உயிரைத் துன்புறுத்த மாட்டார்கள். அதற்கு மாறாக நன்மை செய்வர்.

ஒருவர் இறந்த பன்னிரண்டாம் நாள் அவரைக் குறித்து சங்கற்ப பூர்வமாய் பன்னிரண்டு குடங்களைத் தானம் செய்வது நல்லது. மிகவும் ஏழையாக இருந்தால் மகாவிஷ்ணுவைக் குறித்து ஒரு பெரிய குடத்தையும் சித்திரகுப்தனைக் குறித்து இன்னொரு குடத்தையும் தானம் செய்தால் போதுமானது.

தொடர்ந்து மகாவிஷ்ணு எந்தெந்த இடத்தில் இறந்தால் மோட்சமும் சொர்க்கமும் கிடைக்கும்? அதற்கு எத்தகைய கர்மங்களைப் புரியவேண்டும் என்பதைப் பற்றி விளக்கமளிக்கிறார்.

*ஒருவன் வாழ்வதற்காக உண்ணவேண்டும்; உண்பதற்காக வாழக்கூடாது.* 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சம் என்பது வேறு சொர்க்கம் என்பது வேறாகும். பிறவியிலிருந்து விடுதலை பெறுவது மோட்சம் ஆகும். இதுவே வீடு பேறடைதல் எனப்படுகிறது. சொர்க்கம் என்பது தேவருலகை அடைந்து இன்பமாக இருப்பதாகும்.

அயோத்தி, மதுரை, மாயா, காசி, அவுந்திகா, துவாரகை ஆகிய புனித தலங்களில் ஒன்றில் இருக்கும்போது உயிர் விடுபவர் நிரந்தர இன்ப வீடாகிய தேவருலகை அடைவர். (இதன் பொருள் புண்ணிய தலங்களில் இருக்கும் பொழுது உயிர் விடுதல் எனக் கருதப்படல் வேண்டும்)

சந்நியாசியும், இறைபக்தரும், இறைவனின் நாமங்களை உச்சரித்தபடி இறந்தவரும் பேரின்ப வீட்டை அடைவர்.

திருத்துழாய் என்னும் துளசியைப் பயிரிட்டவரும், திரு நந்நவனங்களைப் பராமரித் தவர்களும் சகல பாவங்களும் நீங்கப் பெற்றவராவார். அவர் நல்லுலகை அடைவர்.

பசு, குழந்தை, சான்றோர் ஆகியோருக்கு ஆபத்து நேரிட்ட காலத்திலும் தன்னுயிரை யும் பொருட்படுத்தாது துணிந்து அவர்களில் எவரையேனும் காப்பாற்றுவாரேயானால் அத்தகையவர் சொர்க்க லோகத்தை அடைவர்.

வேத சாஸ்திரங்களை அறிந்தவரும், கன்னிகை, பூமி, வீடு, பசு, ஆடை, யானை ஆகியவற்றைத் தானம் புரிந்தவர்களும் சொர்க்கம் அடைவர்.

கிணறு, குளம், படிக்கட்டுக்கள், கோயில் முதலானவற்றை புதுப்பித்தவர்கள் அவற்றைக் கட்டியவர் அடைந்த புண்ணியத்தைவிட அதிகமான புண்ணியம் பெற்று விண்ணுலகை அடைவர்.

தர்ப்பைப் புல்லால் வீடு கட்டித் தானம் செய்தவரும் விருஷோற் சர்க்கம் செய்தவரும் சொர்க்கம் அடைவர்.

இனி பகவான் அகால மரணமடைபவரைப் பற்றி விளக்குகிறார்.

ஒருவர் முதுமையடைந்து இயல்பான முறையில் மரணமடைவதே சிறந்தது. ஒரு சிலர் கழுத்தில் சுருக்கிட்டும், விடம் அருந்தியும், தீயில் வெந்தும், வைரம் போன்ற விடத்தன்மையுள்ளதைப் பொடி செய்து உண்டும். நீர் நிலைகளில் விழுந்தும், புகையிரதத்தில் அடிபட்டும் இறந்து போகின்றனர்.

இன்னும் சிலர் பறவைகளின் அலகினால் குத்தப்பட்டும் எருதுகள் முட்டியேனும் பாம்பு மற்றும் விலங்குகள் கடித்தேனும் இறக்க நேரிடுகிறது.

இன்னும் சிலர் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு தேகத்தில் புழு உண்டாகி இறந்துபோவதுமுண்டு.

வேறு சிலர் கொடியவர்களால் தாக்கப்பட்டோ, மரம் முறிந்து விழுந்தோ, இடி தாக்கியோ மரணம் ஏற்படுவதுண்டு. இது போன்று மரணமடைந்தவர் எவரும் நற்கதி அடைய மாட்டார்கள். நரகம் அடைவர். அவ்வாறு இறந்து போனவரின் குடும்பத்தினருக்கு தீட்டு என்பது இல்லை. அவர்களுக்காக உடனடியாக சடங்குகளைச் செய்ய வேண்டிய தில்லை.

துர்மரணம் அடைந்தவர் அந்தணராக இருப்பின் ஆறுமாதங்களுக்குப் பின்பும் சத்திரியராக இருப்பின் இரண்டு மாதங்களுக்குப் பின்பும் வைசியராக இருப்பின் பதினைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களுக்குப் பின்பும் சூத்திரர்களாக இருப்பின் இறந்தவுடனேயும் அவர்களுக்கான கர்மங் களைச் செய்ய வேண்டும்.

அவ்வாறு மரணமடைந்தவருக்கு புனித நதிக்கரையிலாவது நைமிசாரண்யத்திலாவது, புஷ்கர ஷேத்திரத்திலாவது அரசமர நிழலிலாவது, மாட்டுக் கொட்டிலிலாவது, இல்லத் திலாவது நாராயணபலி செய்தல் அவசியம்.

வேத மந்திரங்களை உச்சரித்து இறைவனை வணங்கி ஆராதனை செய்ய வேண்டும். தெற்கு முகமாக இருந்துகொண்டு "சங்கு சக்கர பீதாம்பரம் தரித்த பகவானே! நீரே நித்தியராய் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்தவராய் இருக்கிறீர்! இறைவனே! மாண்டு போனவருக்குத் தாங்கள்தான் கருணையுடன் நற்கதி அளிக்க வேண்டும்" என்று மனமார வேண்டிக் கொள்ள வேண்டும்.

பின் பக்தி சிரத்தையுடன் அந்தணர்களுக்கு உணவளித்து தானியம் தானம் கொடுத்து பிண்ட தர்ப்பணம் முதலானவற்றைச் செய்தல் வேண்டும்.

அதற்கு அடுத்த நாள் சிவம், ஸ்ரீவிஷ்ணு, பிரம்மா, எமன் ஆகியோரின் உருவங்களைச் செய்து மேற்கில் ஸ்ரீ விஷ்ணு, கிழக்கில் பிரம்மன், வடக்கில் சிவன், தெற்கில் எமன் ஆகியவர்களின் உருவங்களையும் மத்தியில் இறந்தவருக்குரிய பிரதிமையை வைத்து வழிபாடு செய்து ஐந்து கும்பங்கள் வைத்து அவற்றில் நவரத்தினங்களிட்டு பூணூல் சுற்றி அலங்கரித்து மேற்குறிப்பிட்ட ஐவரையும் குறித்து சிரார்த்தம் செய்ய வேண்டும்.

ரிக் வேதம் ஓதியவருக்கு பயிரோடு கூடிய பயிர் விளைந்துள்ள நிலத்தை பூதான மாகவும் யசுர்வேதம் ஓதியவருக்கு கன்றுடன் கூடிய பசுவையும் சாமவேதம் ஓதியவருக்கு சம்பா நெல்லும் தானமாகக் கொடுக்க வேண்டும்.

முந்நூற்று அறுபது பலாசு இலைகளின் காம்புகளினால் இறந்து போனவரின் உடலைப் போன்று பிரதிமை ஒன்றைச் செய்ய வேண்டும். அதற்கு தேங்காய், வாழைப்பழம், தாமரைப்பூ, தாமரைத் தண்டு, எள் ஆகியவற்றை வைத்தும் சந்தன மலர்களால் அலங்காரம் செய்தும் சாத்திர முறைப்படி சடங்குகளைச் செய்ய வேண்டும். இவ்விதமாகச் செய்யப்படும் சடங்குகளால் துர்மரணமடைந்தவர் நற்கதி அடைவர். இவ்வாறு சடங்குகள் செய்பவருக்கு பத்து நாட்களும் மற்ற தாயாதியருக்கு மூன்று நாட்களும் தீட்டு உண்டு.

அடுத்து ஒருவருக்கு ஏற்படும் இன்ப துன்பத்திற்கான காரணங்களை மகாவிஷ்ணு விளக்குகின்றார்.

ஒருவர் இருக்கும் போதும் இறந்த பின்பும் இன்ப துன்பம் ஏற்படுவதற்கு அவர் செய்த நல்வினை, தீவினையே காரணமாகும்.

ஒரு பிறவியால் ஒரு உயிரால்- ஆன்மாவால் செய்யப்பட்ட கருமம் மறுபிறவியில் அவரைத் தொடர்ந்து சென்றடைகிறது. அது எவ்வாறு என்று பரந்தாமன். ஒரு சான்றுடன் கூறுகிறார்.

கூட்டமாக மேய்ந்து வரும் பசுக்களில் ஒரு கன்றானது தன்னை ஈன்ற பசுவை எவ்வாறு இனம்கண்டு சேருகின்றதோ அவ்வாறே ஒருவர் செய்த கருமமும் மறு பிறவியில் அவரைச் சென்றடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிதானம் செய்வது எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது, உத்தமமானது என்றாலும் ஒருவர் உண்மை பேசுவதைவிட உயர்ந்த புண்ணியம் வேறொன்றுமில்லை. பொய் பேசுதல், பொய்ச் சாட்சி கூறுதல், பொய்ப்பத்திரம் எழுதுதல் போன்ற காரியங்களை விட பாவமானது வேறில்லை.

பசுதானம், சொர்ணதானம், பூமி தானம் ஆகிய மூன்றையும் தானம் செய்வோர் மிகவும் புண்ணியவான்கள் ஆவர். அவர்கள் ஸ்ரீவிஷ்ணு உலகம், சூரிய உலகம் போன்ற உலகங்களை அடைவர். ஒரு பசுவின் தோலின் அளவு பூதானம் செய்தாலே அவர்கள் பெரும் பாவத்திலிருந்து நீங்குவார். ஒருமுறை பூதானம் செய்துவிட்டுப் பின்பு மனம்மாறி அந்தப் பூமியை தாமே பெற விரும்பினாலும் அதைத் தானம் பெற்றவர் அதன் பயனை அடைய முடியாமல் கெடுத்தாலும் அல்லது அவ்வாறு தானம் கொடுத்த நிலத்தின்மீது ஒருவர் வழக்குத் தொடுத்தாலும் அது பாவமாகக் கருதப்படுகிறது. அவ்வாறு செய்பவர் நரகத்தையே அடைவர். தானம் கொடுத்ததைத் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்பவர் கூட நரகத்தை அடைய நேரும்.

ஒருவர் செய்யும் தொழிலைக் கெடுத்தவர் ஆயினும் பசுக்களைக் கொன்ற பாவத்தை அடைவர். ஒருவர் நூறு பசுக்களை தானம் செய்வதைவிட ஒரு பசுவைப் பிறரிடமிருந்து திருடாமலும் ஒரு பசுவை அடித்து துன்புறுத்தாமலும் இருப்பது நல்லதாகும். ஒருவர் ஒரு பசுவைக் கொன்று விட்டு அதற்காக நூறு பசுக்களைத் தானம் செய்தாலும்கூட ஒரு பசுவைக் கொன்ற பாவமே மேலோங்கியிருக்கும்.

ஒருவர் நல்லொழுக்கமுள்ளவராய் வேத சாஸ்திரக் கல்வி கற்ற சான்றோர்களை மதித்து வணங்கி அவருக்கு எந்தவித கெடுதியும் செய்யாமல் இருப்பாரேயானால் அவர் ஓர் அசுவமேதயாகம் செய்ததை விட அதிக பயனைப் பெறுவர்.

ஒருவருக்கு தானமாகக் கொடுத்ததை மீண்டும் அபகரிக்கக் கூடாது. அப்படிச் செய்பவர் நூற்றுப்பதினாயிரம் ஆண்டுகள் மலக்கிருமிகளாகப் பிறந்து உழல நேரும்.

பேராசை மிகுதியால் ஒருவரிடம் கபடமாக நட்புகொண்டு அவருக்குரிய பொருட்களை அபகரிப்பவர் நீண்ட காலம் நரகத்தில் உழல நேரும்.

எக்காரணம் கொண்டும் சான்றோர்களின் பொருள்களை அபகரிக்கக் கூடாது. அதைப் போன்று தெய்வத்தின் பொருட்களையும் அந்தணர்களின் பொருட்களையும் அபகரிக்கக் கூடாது. அப்படிச் செய்ய நேரின் அவரது குலம் நாசமுறும்.

ஒருவர் தானம் கொடுக்கும்போது அந்தத் தானம் பெறுபவர் நற்பண்புகள் கொண்டவராக இருக்க வேண்டும். சங்கராந்தி புண்ணியகாலத்தில் தான தருமங்களைச் செய்தால் அவற்றை சூரிய பகவான் அளவின்றி விருத்தி செய்வான்.

ஒருவர் அளிக்கும் தானத்தைப் பெறுவதில் எந்தத் தோஷமுமில்லை. அவ்வாறு பெற்றதினால் தோஷம் ஏற்பட்டிருக்குமானால் ஆற்றில் நீராடுவதாலும் ஜெபங்களாலும் நிவர்த்தியாகும். ஆனால் ஓதுவித்தலிலும் யாகம் செய்வித்தலிலும் ஏற்படும் பாவம் நிவர்த்தியாகாது.

அநித்தியமான மானிடம் ஒவ்வொருவரும் தம் வாழ்நாளிலேயே தான தருமங்களைச் செய்து வருவது சிறப்பானது. பெரியோர்களை வேத சாத்திரம் அறிந்த சான்றோர்களை மதித்து நடத்தல் வேண்டும்.

*நிலையான உறுதிதான் மற்ற பண்புகளுக்கெல்லாம் துணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் கூறுவது, பிறர் பொருள்களை அபகரிப்பது போன்றன தீயகாரியங்களாகும். அது போன்றகாரியங்களை மனத்தாலும் எண்ணக்கூடாது. அது பாவச் செயலாகும். அதிலும் குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஒருவர் செய்யும் பாவம் அவரையே சேரும். நான்கு வயதுக்கு மேல் பன்னிரண்டு வயது வரையிலுள்ளவர்கள் செய்யும் பாவங்கள் அவர்களைச் சேராது. அவர்களின் பெற்றோரையே சேரும். அவர்களுக்குத் தாய் தந்தையர் இல்லையெனில் அவர்களைப் பராமரிப்பவர்களைச் சேரும். அத்தகைய பாவங்களுக்கு அவர்கள் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

அதனால் குழந்தைகளுககு எச் செயலாலும் பாவம் உண்டாவதில்லை, அரசச் சட்டமும் அவர்களைத் தண்டிக்கக் கூடாது என்று பகவான் கூறுகிறார்.

கடவுள் இல்லை என்று கூறுபவர் மகாபாவியாவார். அத்தகையவர் துர் மரணத்துக்குள்ளாயின் அவருக்கு உத்தர கிரியை செய்ய வேண்டியதில்லை. இருந்தாலும் அவர் இறந்து ஒரு வருடம் முடியும் சமயத்தில் அவர் மகன் அவரைக் குறித்து சுக்கில பட்ச ஏகாதசியில் ஸ்ரீ விஷ்ணு, எமன் போன்றவர்களை ஆராதித்து பத்துப் பிண்டங்களைப் போட்டு முறைப்படி கிரியைகள் செய்து தான தருமங்கள் புரிய வேண்டும்.

ஒரு புத்திரர் இறந்துபோன தம் தாய் தந்தையர்களைக் குறித்து சிரார்த்தம் செய்ய வேண்டும். தந்தை தன் மகனுக்கும் தமையன் தன் தம்பிக்கும் சிரார்த்தம் செய்யும் நிலை நேரிடின் தன் தலைமுறையில் உள்ளவரைக் குறிக்கக் கூடாது. இறந்தவரைக் குறித்து மட்டும் செய்ய வேண்டும்.

சிரார்த்த நாளில் தீட்டு போன்றன ஏற்பட்டால் அவை நீங்கும் தினத்தில் சிரார்த்தம் செய்யலாம்.

தாய் தந்தையருக்கு சிறிய பாலகன் சிரார்த்தம் செய்ய நேரிட்டால் சங்கற்ப விதானத்தோடு செய்ய வேண்டும்.

ஒரே காலத்தில் பல்வேறு தேசத்தில் பலர் இறந்தார்கள் என்று கேள்வியுற்றால் அவர்களில் முதலில் யார் இறந்ததாகச் செய்தி வந்ததோ அவருக்கே முன்னதாக சிரார்த்தம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு பிறகு கிரியைகளைச் செய்ய வேண்டும்.

ஒருவர் இறந்த நாள் தெரிந்து மாதம் தெரியாவிட்டால் ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி ஆகிய மாதங்களில் கிருஷ்ண பட்சத்தில் அட்டமி அல்லது அமாவாசை திதியில் சிரார்த்தம் செய்யலாம். வெளியூர்களில் இருந்து இறந்த ஒருவரின் நாள் மாதம் தெரியாவிட்டால் அவர் வெளியூருக்குப் புறப்பட்ட திதி அறிந்து அன்று சிரார்த்தம் செய்யலாம்.

தாய் தந்தை திதியை ஒருவர் மறக்க நேர்ந்தால் அட்டமி, ஏகாதசி, அமாவாசை ஆகிய ஒன்றில் நீத்தார் கடன் சிரார்த்தம் செய்யலாம். எக் காரணம் கொண்டும் செய்யாமல் விட்டுவிடக்கூடாது. அவ்வாறு விடுகிறவர் சண்டாளன் ஆவார்.

ஒருவர் இறக்கும் காலம் வரையில் நாள்தோறும் நித்திய சிரார்த்தம் செய்வாராகில் அவருக்கு பெருத்த நன்மை உண்டாகும். இவ்வாறு செய்வது இறந்தவரைக் குறித்தது அல்ல. உயிரோடு இருப்பவர் தம் நலனுக்காக செய்யக்கூடிய நித்திய சிரார்த்தத்துக்கு எந்த விதியுமில்லை.

தினந்தோறும் ஒரு சான்றோருக்கு அன்னமிட்டு உபசரித்தாலே போதுமானது என்று விஷ்ணு பகவான் தாம் வாழ்ந்திருக்கும் காலத்தில் செய்யத்தக்க சிரார்த்தத்தைப் பற்றி கூறுகிறார்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்ட குறைகளையும் விட்ட குறைகளையும் நீக்குபவன் இறைவன் ஒருவனே

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

ஆதியும் அந்தமுமில்லா இறைவன் உலகங்களையும் உயிரினங்களையும் படைக்கின்றான். உயிரினங்கள் பிறவிகள் தோறும் தொட்ட குறைகளையும், விட்ட குறைகளையும் அறிந்து நீக்க வல்லவன் இறைவன். உலகம் உய்யும் பொருட்டு இறைவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றான். எனவே இறைவன் அருளாலே உலகம் இயங்குகின்றதென்று கூறினால் அது மிகையாகாது.

இறைவன் ஒருவன். அவன் என்றும் உள்ளவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன், எல்லாம் வல்லவன். எனவே சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை; அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை. பரம்பொருளாகிய சிவன் தான் படைத்த உயிர்களை கருணையினால் காத்து வருகின்றான். உயிரினங்கள் உயிருடன் வாழ்வதற்கு காற்றைப் படைத்தான். நீரையும் கொடுத்தான், தீயையும் வழங்கினான், ஆகாயத்தையும் ஆக்கினான். ஓரறிவு முதல் ஆறறிவுவரையுள்ள உயிரினங்களைப் படைத்த சிவன் எல்லா உயிர்களும் இன்பமாக வாழ ஏற்ற இயற்கை வளங்களையும் பூமியில் படைத்துள்ளான். காட்டில் வாழும் உயிரினங்களுக்கு காட்டு வனங்களையும், வீட்டில் வாழும் உயிரினங்களுக்கு அதற்கு ஏற்ற சூழலையும் அமைத்துக் கொடுத்துள்ளான். எல்லா உயிரினங்களும் உண்ண உணவு இல்லை என்று சொல்லாதிருக்க வளங்களை ஆக்கியுள்ளான். பாரதியார் கூறியது போல் “உலகில் உண்ண உணவு இல்லையேல் இந்த ஜகத்தையே அழித்திடுவேன்” என்ற இறை சக்தி உள்ளது. இறைவனின் பெரும் கருணையினால் தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்கு தாயாகச் சென்றான். பிரசவ வேதனையால் வாடிய செட்டிச்சி அம்மையாரின் மகளுக்கு தாய்போல் சென்று பராமரித்தான். கல்லினுட் தேரைக்கும் கருப்பை அண்டத் துயிர்க்கும். உணவு அளித்து காக்கும் புனிதன் அல்லவா அவன். எனவே அவனின் அருட் கொடையைப் பேசவும் முடியுமா?

இறைவன் உயிரினங்களை வினை கழையவே பூமிக்கு அனுப்பினான். பிறவிகள் தோறும் தொட்டகுறை, விட்ட குறை நீக்க வல்லவன் இறைவன் என்ற உண்மையை அறியாத மாந்தர் பலர் உளர். மலங்களினால் பீடிக்கப்பட்ட மனிதர்கள் இறைவன் தன்மையை அறியாது சிற்றின்ப வாழ்க்கையில் திளைத்து மூடராய் வாழ்கின்றார்கள். மலங்களால் பீடிக்கப்பட்ட மாந்தர் நான், எனது என்ற அகந்தையும் மமதையும் கொண்டு வாழ்கின்றனர். தொட்ட குறை, விட்டகுறையினால் நாயன்மார்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் அல்லற்பட்டதை புராணங்கள் எடுத்து இயம்புகின்றன. காரைக்கால் அம்மையாரும் இதற்கு விலக்கானவரல்லர். கணவனை இழந்து பேய் வடிவம் தரும்படி இறைவனை வேண்டி, விநாயகன் அருளால் உச்சந் தலையால் நடந்து கைலாயம் சென்றார். இப்படியே தொட்ட குறை விட்டகுறை வினையால் துன்பம் அனுபவித்தவர்கள் ஏராளம் தாராளம். எனவே இவற்றை நீக்க வல்லவன் இறைவன் என்பது உண்மையில் உண்மை.

கலியுகத்தில் தொட்டகுறை விட்ட குறை வினையால் வருந்துகின்ற மானுடர்கள் ஏராளம். இக்குறைகளை நீக்கத் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் இருக்கின்றான்.

*கவலைப்படுவதன்மூலம் வாழ்வில் உயரமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆலய வீதியில் உங்கள் பாதங்கள் பட வினை பறந்தோடும். ஆற்றங்கரையான் ஆற்றில் மூழ்கியெழ நோய்கள் அகலும், ஞானம் உண்டாகும். சந்நிதியான் எந்நிதியும் தருவான். கண்ணீர் சிந்த வழிபடுங்கள் கவலைகள் அகன்றிடும். பெருவாழ்வு வாழ்வீர்கள். "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்று கூறும் சைவ சமயத்தில் தொட்டகுறை விட்டகுறை நீங்கி பேரின்ப வாழ்வு பெறுவீர்கள் என்பது திண்ணம். அடியார்க்கு எளியன் முருகனை,

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்று போற்றி வணங்குங்கள்.

## பாடிக் கொண்டேயிருப்பேன்

பாட்டுடைத் தலைவனை வெல்வில் முருகையனை
பாடும்படி எனைப் பணித்த பன்னிருகை இறைவனை
தேனினுமினிய செந்தமிழ்த் தெய்வத்தை
அநுதினம் பாடிக் கொண்டேயிருப்பேன்.

தஞ்சமடைந்தவரின் இனிய தயாபரனை
சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி வேலனை
நெஞ்சமதில் நிறைந்த நீலவண்ணன் மருகனை
அஞ்சலென அருள்பவனை அன்போடு பாடிக் கொண்டேயிருப்பேன்.

அஞ்செழுத்தான் பெற்ற அருந்தவச் செல்வத்தை
செஞ்சுடர் வேல் வேந்தனைச் சேந்தனைச் செவ்வேளை
செந்தமிழ்க் காவலனை செந்தூரின் சுந்தரனை
சிந்தை கனிந்துருகப் பாடிக் கொண்டேயிருப்பேன்.

ராஜாதி ராஜனை சண்முக ராஜனை
குங்கும வர்ணனைக் குழந்தை வடிவேலனை
சங்கரனார் பெற்ற ஆறு முகப் பூங்கொத்தை
என் ஆயுள்உள் எவரை பாடிக் கொண்டேயிருப்பேன்.

-திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! அந்த கோமாரி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஏறக்குறைய 180 பிள்ளைகள் எங்களுக்காக அந்த கோமாரி மகா வித்தியாலய மண்டபத்தில் காத்திருந்தனர். இந்த 180 பிள்ளைகளுள் சங்கமன், கண்டி, ஊறணி எனும் அயற் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் அறநெறிப் பாடசாலைக்குரிய சீருடையோ அல்லது வேறெந்த வசதிகளோ அற்றிருந்ததை உணரமுடிந்தது. இவர்களுடன் பதின்னான்கு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் வந்திருந்தனர். மிகவும் பௌதீக வளங்கள், கல்வி வளங்கள் அற்ற வறுமைச் சூழல் இவர்களில் பலரை மதமாற்றத்திற்குள்ளாக்கி வருகின்ற தன்மையையும் இவர்களது ஆசிரியரின் பேச்சிலிருந்து அறிய முடிந்தது.



மதமாற்றம் மிகத் தீவிரமாக நடைபெறுகின்றது என்ற செய்தியையும் அறிய முடிகின்றது. இவர்களது வழிபாட்டுத் தலமான முருகன் கோயில் சுனாமியின்பொழுது பாதிக்கப்பட்டு புனராவர்த்தன கும்பாபிடேகத்திற்காக பல வருடங்கள் காத்துக் கொண்டிருப்ப தாகவும் அதனைக் கும்பாபிடேகம் செய்து கும்பிட வைக்க வசதிகளற்று இருப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். தமக்குரிய ஓர் கட்டிடம் இல்லாதிருந்த பொழுதிலும் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை ஒழுங்காக இயங்குவதாகவும் குறிப்பிட்டார். எனவே தங்களுக்கு முதலில் சீருடைகள் தந்துதவுமாறு கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர்.

எங்களுடன் வந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை வழங்கியதுடன் ஆச்சிரம சுவாமிகள், "உண்மையில் நீங்கள் இந்தப் பிள்ளைகளை இப்படியான பல இடைஞ்சலான சூழலின் மத்தியிலும் சைவத்தை ஊட்டவேண்டும் மதமாற்றத்தைத் தடுக்கவேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுவதைப் பாராட்டியே ஆகவேண்டும். நாமும் சந்நிதியானின் அருளினால் பல்வேறு வகையான உதவிகளைச் செய்துகொண்டுதானிருக்கிறோம். ஆனால் இம்முறை குடாநாடு கடந்தும் தன் பணிகளைச் செய்ய முருகன் சித்தம் கொண்டுள்ளார் போலும். ஆனால் எம்மால் முழு உதவிகளையும் செய்ய முடியாது விட்டாலும் அங்கே பொலநறுவைப் பிள்ளைகளையும் பார்த்தோம், உங்களையும் பார்க்கிறோம். மிகவும் வேதனையாகவே இருக்கிறது. எனவே அவர்களுக்கும் சிறு உதவி செய்வதாகக் கூறிவந்துள்ளோம். எது எப்படி இருந்தாலும் சந்நிதி வேலனின் துணையினால் உங்கள் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சீருடைத் துணிகள் இன்று 17.01.2015 வருகின்ற சித்திரை வருடப்பிறப்பிற்குள் தருவோம்" என்றபொழுது பிள்ளைகளும் ஆசிரியர்களும் அவர்களுடன் வந்திருந்த பெற்றோர்களும் கரகோஷம் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அதை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை.

உங்கள் ஆலயம் எங்கே இருக்கிறது என்று கேட்டபொழுது மிக அருகில்தான் உள்ளது. போகும்போது நீங்கள் பார்த்துச் செல்லலாம் என்றார்கள். அவர்களது நன்றி உரையுடன் கூட்டம் இனிது முடிய அவர்களது அன்பான உபசரிப்பின் பின்பு கோயிலைப் பார்க்கச் சென்றோம். அங்கே..... உண்மையில் ஏரிக்கரையில் மிக அற்புதமான வெள்ளை வெளேரென்ற மணற்தரையுடன் பெருமரங்கள் சூழ்ந்த அமைவிடம் அற்புதமாக அமைந்த ஓர் முருகன் ஆலயம். ஏறக்குறைய 90வீதமான வேலைகள் முடிவடைந்து இருந்தன. மூலஸ்தானம் பண்டிகை, பரிவாரங்கள் பெரிதாக இல்லை. விநாயகரின் வேலைகள் முடிந்து இருந்தன. விக்கிரகங்களைக்கூட ஒரு சிலர் அன்பளிப்பதாக உறுதியளித்துள்ளார்களாம். ஆனால் கும்பாபிடேகச் செலவு ஆலயம் அமைத்ததிலும் பார்க்கப் பெருந்தொகையாக இப்போது இருப்பதால் ஏங்கி இருக்கிறார்கள்.

1. ஆம் அப்பகுதியிலே தகுந்த நித்திய, நைமித்திய பூசைக்குரிய அர்ச்சகர்கள் இல்லை.
2. கும்பாபிடேகம் செய்ய அந்தணச் சிவாச்சாரியார்கள் இல்லை.
3. அவர்களையும் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துவந்து உணவு, உறையுள், ஊதியம், தட்சனைச் செலவு.... இதனால் பலவருடங்கள் ஆகியும் அப்படியே பூசையோ, பூசிப்போ இன்றி இருக்கின்ற தன்மையை அறிய முடிந்தது, பார்க்க முடிந்தது. அதுமட்டுமல்ல இப்போ சில இடங்களில் வெடிப்புக்களும் வந்து விட்டன. அவற்றையும் சீர்செய்தே கும்பாபிடேகம் செய்ய வேண்டும்.

அதற்கு ஓர் தீர்வாக எம்முடன் வந்த சைவ மகாசபையினர் தற்பொழுது தமிழ் முறைப்படியான பூசைக் கிரியைகளைச் செய்ய பல பூசகர்களை உருவாக்கி வருவதாகவும், இப்படியான ஏழ்மைநிலையுடைய இடங்களில் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வதற்குரிய குருமார்களைப் பயிற்றுவித்து உதவி வருவதாகவும், தமிழில் சிவதீட்சை கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை சைவத்தில் வாழவைக்க உதவுவதாகவும் விளக்கி நீங்கள் விரும்பினால் எமது பயிற்றப்பட்ட குருமார்களைக் கொண்டு மிகக் குறைந்த செலவில் கும்பாபிடேகத்தை நடத்தித் தருவதாகவும் ஒரு தீர்வை முன் வைத்தனர். இவற்றை ஞானச்சுடர் தருவதன் நோக்கம் கருணையுள்ளம் கொண்டோரே காணுங்கள், கருதுங்கள், கசிந்து உதவுங்கள் என்பது முருகனின் சங்கல்பம். அதற்காகவே!

அதனைத் தொடர்ந்து எமது பயணம் 12.30 மணிக்கு திருக்கோயிலூடாகச் செல்கிறது. அக்கரைப்பற்றில் சிறிது நேரம் தெருவோரம் தங்கி நிற்கிறோம். நாம் தங்கி நின்ற இடம் ஒரு விகாரைக்கு அருகில் பெருந் தெருவோரம். இதன் அழகு என்னவென்றால் இதற்கு எதிர்த்தாற்போல் ஒரு பெரும் சைவ அம்மன் ஆலயம், அதன் எல்லையில் பெருந்தெருவுக்கு ஏறும் ஓர் குறுக்குத்தெரு. சைவ ஆலயத்திலிருந்து எதிர்த்தாற்போல் குறுக்குத் தெருவோரமும் பெருந்தெருவோரமுமாக ஓர் இஸ்லாமிய பள்ளிவாசல். மூன்று தெய்வீகத் திருத்தலங்களும் அருகருகே அமைந்து சமய விழுமியத்தை ஒற்றுமையைப் பேணும் மக்களைக் கொண்ட ஓர் இடப் பொலிவை எமக்குக் காட்டி நிற்கின்றது. ஏறக்குறைய எல்லாத் தலங்களும் நடுத்தர அளவில் அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஏறக்குறைய 2.00 மணியளவில் தம்பிலுவில் மானாக்கன் கண்டிப் பிள்ளையாரை அடைந்தோம். அங்கே...

(தொடரும்...

## 60ஆவது அகவையில்.......

**(18.06.2015)**



சந்நிதியான் ஆச்சிரம பேரவையோடு மிக நீண்டகாலமாக தொடர்பு கொண்டவரும், ஆச்சிரம செயற்பாடுகளுக்கு முன்நின்று ஒத்துழைப்பவரும், பேரவையால் ஆற்றப்படும் விஷேட நிகழ்வுகளுக்கு சொற்பொழிவினை வழங்கி வருபவரும், சமூக சேவையாளருமாகிய செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள் தமது அறுபதாவது அகவையில் காலடி வைப்பதையிட்டு நாம் அவரை நீடூழி வாழ வாழ்த்துவதோடு, சந்நிதி வேற்பெருமானின் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

*-ஆச்சிரம சமூகம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ மரபில் மூத்தவராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள்

– திரு ச. லலீசன் அவர்கள் –

திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் கலாபூஷணம் சி. சிதம்பரநாதக் குருக்கள் 24.05.2015 அதிகாலை 5 மணியளவில் யாழ். போதனா மருத்துவமனையில் காலமாகிவிட்டார். 18.12.1935 இல் பிறந்த இவருக்கு இறக்கும்போது வயது 80. இவ்வாண்டு பீமரத சாந்தி மற்றும் அமுதவிழா என அவருக்கு விழா எடுத்து அழகுபார்க்கவேண்டும் என அவருடைய அன்பர்கள் ஆர்வப்பட்டிருந்தனர். ஆகையால் விதியின் வலியை யாரறிவார்?



## பிறப்பு

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துக் காளி அன்னை மேல் மந்திரஞ் சொல்லி பூசிக்கும் குருமூர்த்தமாகத் திகழ்ந் தவர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள். இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள திருவிதாங்கூர் இவரது பிறப்பிடம். சிதம்பரஐயருக்கும் ஜானகி அம்மாளுக்கும் 18.12.1935இல் மகனாகப் பிறந்த இவர் சிறுவயதிலேயே திருக்கணித பஞ்சாங் கக் கணிதர் சி. சுப்பிரமணியக் குருக்களால் இங்கு அழைத்து வரப் பெற்றார்.

## கல்வி

இளமைக் கல்வியை கல்வயல் சண்முகானந்த வித்தியாலயத்திலும் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். கற்கும் காலங்களில் கணிதத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டார். அந்தண மரபுக்கிணங்க 12.06.1948இல் இவரது உபநயனம் (பூணூல் சடங்கு) இடம்பெற்றது.

## இல்லறம்

வளரும் பயிரை முளையிலேயே தெரியுமன்றோ? குருக்கள் அவர்களின் திறமையை யும் ஆற்றலையும் கண்டுணர்ந்த காளிகோவிலின் பிரதம குருவாகிய பொன்னுஸ்வாமிக் குருக்கள் தனது மகளான இராஜேஸ்வரி அம்மாவை 18.05.1956இல் திருமணம் செய்து கொடுத்தார். தொடர்ந்து 18.04.1962இல் ஆச்சார்ய அபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) செய்து வைத்தார். சரசாலைக் காளி கோவிலின் பூசைப் பொறுப்புக்களையும் வழங்கினார். 1962 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் மெய்தீண்டிப் பக்தி பூர்வமாகப் பூசைப் பணிகளை ஆரம்பித்தார்.

குருக்கள் தம்பதியர் இல்லற வாழ்வை ஓம்பி ஆறு ஆண் குழந்தைகளையும் இரு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். இவர்களுள் ஜெகதீஸ்வரசர்மா கொழும்பு திருக்கணித நிலைய அதிபராகவும், சண்முகானந்தசர்மா சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராகவும் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் ஸ்ரீதரசர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிலும் கிருபாகரக்குருக்கள் குருத்துவப் பணிகளையும் வாகீஸ்வரசர்மா கணனித்தொழினுட்பவியலாளராகவும் குமரேஸ்வரசர்மா குருத்துவப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். மகள் மனோகரி சபாநாதசர்மா ஜேர்மனியில் வசிக்கின்றார். சியாமளா என்றொரு மகள் இளவயதில் அமரராகிவிட்டார்.

## குருத்துவம்

குருக்கள் அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே பஞ்சாங்க கணிதமும் பயின்று வந்தார். 19.08.1970இல் திருக்கணித பஞ்சாங்கக் கணிதராக விளங்கிய சி. சுப்பிரமணிய ஐயர் சிவபதமடையவே அந்தப் பொறுப்பு சிதம்பரநாதக் குருக்களிடம் சேர்ந்தது. இறக்கும் காலம் வரை கணனியை இயக்கிப் பஞ்சாங்கக் கணிப்புக்களை மேற்கொள்ளும் இளைஞனாகவே குருக்களை நான் தரிசித்தேன்.

விவாகம், புதுமனைப் பிரவேசம் முதலிய மங்கலகாரியங்களையும் அந்தியேட்டி முதலிய கருமங்களையும் குருக்கள் மூலம் நிறைவேற்றுவதில் தென்மராட்சி மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். அவரது காலத்தில் பதினான்கு மஹா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றிய பேற்றினைக் கொண்டுள்ளார்.

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி ((1985, 1999, 2013) மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் (1984, 1998, 2010) சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் (1969, 1987) கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் (1988), புலோலி ஆலடிப் பிள்ளையார் (1991) குமரபுரம் முருகன் கோவில் (1993) கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் (1997) வவுனியா சிந்தாமணி விநாயகர் (1989) வட்டக்கச்சி முருகன் (1996) ஆகிய ஆலயங்களிலே பிரதிஷ்டா பிரதம குருவாகச் செயற்பட்டு மஹா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றினார்.

மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோவில், கைதடி கயற்றிசிட்டி கந்தசுவாமி கோவில், உசன் கந்தசுவாமி கோவில் ஆகிய ஆலயங்களின் மகோற்சவ குருவாகச் செயற்பட்டுள்ளார். இன்றும் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார், சரசாலை ஸ்ரீ வீரமாகாளி கல்வயல் ஆயிலடி விநாயகர் ஆகிய ஆலயங்களின் பிரதம மஹோற்சவ குருவாக மிக நீண்டகாலமாகச் செயற்படுகின்றார்.

## திருப்பணிகள் நிறைவேற

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தைத் தனது சொந்தக் கோவிலாகக் கருதிப் பணிகளை மேற்கொண்டார். இவரது காலத்தில் ஆலயத் திருப்பணிகள் உயர்நிலை பெற்றன. அம்பிகையை நாடும் அடியவர் திருக்கூட்டமும் பெருகியது. பிள்ளையார் கோவில், வசந்த மண்டபம் வைரவர் கோவில், யாகசாலை, மடைப்பள்ளி, களஞ்சியம், ஆலயச் சுற்றுக் கொட்டகை, நிலவேலை, தண்ணீர் வசதி, மின்சார வசதி, குருக்கள் வசிப்பிடம், கோபுரம், வில்மண்டபம் எனப் பல திருப்பணிகள் நிறைவேற உபயகாரரைத் தேர்ந்தும் ஆலோசனைகள் நல்கியும் உதவினார். திருப்பணி வேலைகளில் தானும் பங்கேற்றார்.

## நூல்கள் ஆக்கம்

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மூன்று மொழிகளில் ஆளுமை கொண்டவராதலால் பல நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளார். இதற்கு வசதியாக திருக்கணித பதிப்பகத்தையும் நிறுவினார். ஸ்நபன மஞ்சரி என்ற சமஸ்கிருத நூலையும் சோதிடம் கற்போம், திருமணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தம் என்ற தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தைப் புலம்பெயர் தேசங்களுக்கு ஏற்ற நேரக் கணிப்பில் வெளியிடுகின்றார். சோதிட மலர் என்ற மாத சஞ்சிகையையும் வெளியிட்டார்.

## வேதாகம சோதிட அறிவு மக்கள் மத்தியில் பரவவேண்டும் என்ற வேட்கை

தான் அறிந்த சோதிட நுட்பங்களை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இதற்கென வீட்டில் அவ்வப்போது இலவச சோதிட வகுப்புக்களை நடத்தினார். அவரது கிரியைகளின்போது சமஸ்கிருத மந்திரங்களை அறுத்து உறுத்துக் கூறுவார். இந்த மந்திரம் எதற்காகக் கூறப்படுகின்றது. கிரியையின் பலன் என்ன என்பதை அடியவர்களுக்குச் சொல்லியவண்ணம் இருப்பார். தமிழகத்தில் சாதாரண மக்களும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் செய்கின்றனர். காளி கோவிலிலும் இந்நிலைமை ஏற்பட வேண்டும் என முயன்றார். 1990ஆம் ஆண்டில் மேற்கொண்ட இம்முயற்சியில் கணிசமான அளவு வெற்றியும் கிட்டியது. நான் உட்படப் பலர் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஜெபம் மேற்கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றோம்.

## கௌரவப் பட்டங்கள்

குருக்கள் அவர்களின் ஆளுமைத்திறத்தைக் கண்டு நயந்தவர்கள் கௌரவ பட்டங்கள் வழங்கி அவரைக் கௌரவித்துள்ளனர். மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலின் சார்பில் வேதாகம சோதிட பூஷணம் என்ற பட்டம் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களால் வழங்கப்பட்டது. இதே போல் சிவாச்சார்ய திலகம் என்ற பட்டம் சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் சார்பில் பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயரால் வழங்கப்பட்டது. வட்டக்கச்சி முருகன் கோவிலால் சிவாகம பூஷணம் என்ற பட்டமும் லண்டன் சைவத்திருக்கோவில் ஒன்றியத்தால் வேதாகம வித்தகர் என்ற பட்டமும் வழங்கப்பட்டன. இலங்கை அரசு சோதிடத் துறை சார்ந்து கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் குருக்கள் மீது நிறைந்த மதிப்பு வைத்திருந்தார். அவரது சோதிடக் கணிப்புக்களின் நம்பகத்தன்மையால் ஈர்க்கப்பட்ட அவர் துர்க்கை அம்மன் கோவில் செயற்பாடுகளை திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் முன்னெடுத்தார்.

குருக்களின் சோதிட அறிவு குறித்து என்னுடன் ஒரு சந்தர்ப்பத்தில் நயந்து பேசிய கலாநிதி ஆறு. திருமுருகன் 1992 இல் தனது சாதகத்தைச் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் குருக்களிடம் திருமுருகனின் சாதகம் என அறியாதவாறு காட்டியதாகவும், அப்போது இச்சாதகம் மிகவும் அருமை வாய்ந்தது. இவர் ஆன்மீக மற்றும் சமூகப் பணிகளில் உச்ச நிலை அடையக்கூடியவர் என்று அன்றே குருக்கள் உரைத்தார் எனவும் என்னிடம் குறிப்பிட்டார். குருக்களின் பணிகளை விதந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலும் சில ஆண்டுகளுக்கு முன்னர் குருக்களைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

என்ற வள்ளுவத்தைப் பொருத்திப் பார்க்கத் தக்க வகையில் வாழ்ந்த சிதம்பரநாதக் குருக்கள் தென்மராட்சியின் ஆன்மீகம்சார்ந்த நெறிகளில் இரண்டறக் கலந்தவர். அவரது நாமம் என்றும் இம்மண்ணில் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 22. அக இருளாய் நிற்பது

இருளான தன்றி இலது எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

**பொருள்:**

உலகத்தில் உள்ள பல வகைப்பட்ட பொருள்களையும் அவைகளுடைய தன்மை தோன்றாதபடியும், அவை யாவும் தானேயாய்த் தோன்றும்படியும், மறைத்து நிற்கும் பொருள் இருளையன்றி வேறில்லை.

இந்தப் புற இருளைப்போலப் பதி, பசு, பாசம் ஆகிய அறியத்தக்க பலவகைப் பொருள்களையும் அவைகளுடைய தன்மை தோன்றாதபடி மறைத்து நிற்பது ஆணவ மலம் ஆகிய அகவிருளாகும்.

**சொற்பொருள்:**

எவையும்- காணத்தக்க உலகப் பொருள் யாவும், ஏகப் பொருளாகி- தானேயாய்த் தோன்றி (அ∴தாவது, அப்பொருள்களின் தன்மை தோன்றாத படியும், அவை யாவும் இருளாகிய தானேயாய்த் தோன்றும்படியும் செய்து) நிற்கும் பொருள்- அவற்றுள் ஒன்றையும் காணவொட்டாது கண்ணை மறைத்து நிற்கும் பொருள், இருளானது அன்றி இலது- இருள் எனப்படுகிற அவ்வொன்றையன்றிப் பிறிதில்லை. (இ∴து உவமை. இந்தப் புற இருளைப் போல, மேலே சொன்னதுன்றும் பவத்துயர் முதலிய அறியத்தக்க பொருள்களுள் ஒன்றையும் அறியவொட்டாது உயிரறிவை மறைத்து நிற்பது ஆணவ மலமாகிய அக இருளாகும் என்னும் கருத்தை இங்கு வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்)

**விளக்கம்:**

இரவு நேரத்தில் படித்துக் கொண்டிருக்கிறோம். திடீரென்று விளக்குகள் அணைகின்றன. எங்கும் ஒரேயிருள். பக்கத்தில் உள்ள பொருள்கூடத் தெரியவில்லை. மெழுகுவர்த்தியைத் தேடலாம் என்று எழுகிறோம். சில அடி தூரம் நடந்திருப்போம். அங்குள்ள சுவரில் தெரியாமல் முட்டிக் கொள்கிறோம். வழியில் ஒரு நாற்காலி கிடக்கிறது. அது நமக்குத் தெரியவில்லை. அது நம் காலை இடறிக் காயப்படுத்துகிறது. அதையும் தாண்டிச் செல்லும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே கிடந்த கயிற்றின்மீது காலை வைக்கிறோம். என்னவோ, ஏதோ என்ற பதைப்புடன் தாவிக் குதிக்கிறோம். நல்லவேளையாக அப்பொழுது விளக்குகள் எரியத் தொடங்குகின்றன. அந்த விளக்கொளியில் கீழே கிடந்தது கயிறுதான் என்பதைத் தெரிந்து கொண்டு ஆறுதல் அடைகிறோம்.

இந்த நிகழ்ச்சியில், சுவர் சுவராகத் தோன்றவில்லை. நாற்காலி நாற்காலியாகத் தோன்றவில்லை. கயிறு கயிறாகத் தோன்றவில்லை. எல்லாம் இருளாகத் தோன்றுகின்றன. இருள் அவற்றின் தன்மையை மறைத்து, எவையும் தானேயாய்த் தோன்றும்படி நிற்கிறது.

இந்தப் புற இருளைப்போல இறை, உயிர், உலகம் ஆகியவற்றின் தன்மையைத் தெரியவொட்டாதபடி உயிரறிவை மறைத்து நிற்கின்ற அகவிருள் உண்டு. அதுவே ஆணவம் எனப்படுகிறது. அது பிறவித் துன்பத்தை மறைத்து அதை இன்பமாகக் காட்டி அதன்மீது ஆசை கொள்ளும்படி செய்யும். அழியாத வீட்டின்பத்தை மறைத்து அதைப் பெறுதற்குரிய வழியிற் செல்லவிடாது தடுக்கும். இறைவனைப் பற்றிய எண்ணம் எழாதபடி மறைத்து அகந்தையை உண்டாக்கி மயக்கும்.

இந்த ஆணவத்தின் செயற்பாட்டினைச் சூரபன்மனின் நடத்தையில் நன்கு காணலாம். போர்க்களத்தில் சூரபன்மன் முருகப் பெருமானது பேருருவக் காட்சியினைக் கண்டு நல்லுணர்வு பெற்றான். இவர்தான் யாவர்க்கும் தலைவர் என்று தெளிந்தான். இவரை வலம் வரவேண்டும்; கைகுவித்து வணங்க வேண்டும்; இவருக்கு அடிமையாய் வாழவேண்டும் என்றெல்லாம் எண்ணினான். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. மாண் பிறந்த மானம் அவனைத் தடுத்துவிட்டது. அதுவும் ஆணவத்தின் வெளிப்பாடுதான். அகந்தை பழையபடி தலையெடுத்தது. "என்னைப் போன்ற வீரன் யார் இருக்க முடியும்? முருகப் பெருமானுக்கு நேர் நின்று போர் செய்தேன் என்ற புகழ் எனக்கு எப்போதும் இருக்கும். இந்த உடம்பு நில்லாது. இதுபோனால் போகட்டும்" என்று சொல்லிப் போர் செய்யப் புறப்பட்டான். நன்மை தராது எனத் தெரிந்த பின்பும், முன் தொடங்கிய செயலை விடாமல் செய்து முடிக்கப் புறப்பட்ட சூரபன்மன் ஆணவத்திற்கு நல்ல எடுத்துக்காட்டு.

முந்திய செய்யுளில் ஆணவம் என்றொரு பொருள் உண்டு என்று கூறி அதன் உண்மையைச் சுட்டினார் ஆசிரியர். இச் செய்யுளில் அஃது இருள் போன்றது என்று கூறி அதன் இயல்பைச் சுட்டினார்.

### 23. அக இருள் புற இருளினும் கொடியது

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது.

**பொருள்:**

புற இருள் ஒரு பொருளையும் காண ஒட்டாதபடி நமது கண்ணை மறைத்துவிடும். ஆயினும் தன்னைக் காட்டி நிற்கும். அஃதாவது, தான் ஒரு பொருள் உண்டு என்பதை நாம் உணர நிற்கும்.

அக இருளாகிய இந்த ஆணவ மலம் இறைவன், உயிர் முதலிய பிற பொருள்களையும் அறிய வொட்டாது; தன்னையும் காட்டிக் கொள்ளாது. இவ்வாறு பிறபொருள், தான் என்ற இரண்டையும் நாம் அறியமுடியாத வகையில் நமது அறிவை மறைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற் பொருள்:**

இருள்- புற இருள், ஒரு பொருளும் காட்டாது- உலகப் பொருள்களுள் ஒன்றையும் காண ஒட்டாது கண்ணை மறைத்து நிற்கும். (ஆயினும்) உருவம் காட்டும்- தனது இருப்பை நாம் உணர நிற்கும். (ஆனால்) இது- அக இருளாகிய இந்த ஆணவ மலமோ, இரு பொருளும் காட்டாது- பிற பொருள், தான் என்னும் இரு பொருள்களையும் நாம் அறிய முடியாத வகையில் நமது அறிவை மறைத்து நிற்கும்.

**விளக்கம்:**

கண் வேறாகவும், உயிராகிய நாம் வேறாகவும் இருக்கிறோம். புற இருள் வந்து கண்ணை மறைக்கும்போது பொருள்களைக் காணும் காட்சி தடைப்படுகிறது. கண் வழியாகப் பார்த்தறிகின்ற நாம் கண்ணுக்கு வேறாக இருப்பதனாலே கண் செயற்படாதபோது அதை வைத்துக் கண்ணை மறைக்கின்ற இருள் வந்துற்றது என்பதை அறிந்து கொள்கிறோம். அவ்விருளுக்கு மாற்றுப் பொருள்களாகிய விளக்கு முதலியவற்றின் உதவியை நாடி அவ்விருளை அகற்ற முயல்கிறோம். புறவிருளை உணர முடிவதனாலேயே அதனை நீக்குகிற முயற்சியும் எழுகிறது. இது பற்றியே “இருள் உருவம் காட்டும்” என்றார் ஆசிரியர். உருவம் என்பதற்கு இருப்பு என்பது பொருள்.

புறவிருள் உயிருக்கு வேறாகிய கண்ணைத்தான் மறைக்கிறது. அக இருளாகிய ஆணவமோ உயிரறிவை மறைத்து அதற்கு அறியாமையை உண்டாக்குகிறது. உயிர் தனது அறிவிலுள்ள மறைப்பினைச் சிறிதும் உணரமுடிவதில்லை. அம் மறைப்பினால் உண்டாகும் அறியாமையையும் தெரிந்து கொள்வதில்லை; மாறாக அவ்வறியாமையையே அறிவு என்று நம்பி விடுகிறது! தேர்வறையில் எழுதும் மாணவர்கள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டு ஆவர். அவர்கள் சில கேள்விகளுக்குத் தவறாகவே விடையெழுதிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அது அவர்களுக்குத் தெரிவதில்லை. தாம் எழுதுவது சரியான விடையே என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் அறியாமையில் இருந்த போதிலும் அதுவே அவர்களுக்கு அறிவாகத் தோன்றுகிறது! அதனாலேயே அப்படி நினைக்கிறார்கள்.

நம்மிடத்தில் அறியாமை இருப்பது தெரிந்தால் அல்லவா அதற்கான காரணம் யாது என ஆராய்ந்து அதனை நீக்கிக் கொள்ள முயல்வோம்? அறியாமையே அறிவுபோலத் தோன்றும்போது அறியாமை பற்றிய ஆராய்ச்சி எப்படி உண்டாகும்? அதனை நீக்குகிற முயற்சியும் எப்படி உண்டாகும்? இவ்வாறு உயிர் தன்னறிவை ஒன்று மறைத்து நிற்கிறது என்பதை எவ்வகையிலும் உணரமுடியாமற் போகிறது.

உயிரறிவை மறைத்து ஆணவம் செய்கின்ற காரியங்கள் தாம் எத்தனை! எத்தனை! சிலவற்றை இங்கே காட்டுவோம்.

சிலர் யார் என்ன அறிவுரை கூறினாலும் தான் பிடித்த தவறான போக்கை விடுவதில்லை. இன்னும் சிலர் மற்றவரின் கருத்து என்னவென்று தெரிந்துகொள்ளத் துளியும் விரும்பமாட்டார்கள்; தங்கள் கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று பாடுபடுவார்கள்; ஒப்புக்கொள்ளாதவரை விட மாட்டார்கள்!

*அமைதி நிறைந்த மனதிற்கு எல்லா இடமும் கோயிலே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் எதிரில் இருப்பவரின் கருத்துத் தவறு என்று காட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்; அவரை எப்படியாவது மட்டம்தட்ட வேண்டும், அவமானப்படுத்த வேண்டும் என்பதிலேயே குறியாக இருப்பார்கள். மற்றும் சிலர் பிறரிடம் தகுதியிருந்தாலும் அதை மதிக்க மாட்டார்கள்; தம்மிடம் தகுதியில்லாத போதிலும் தம்மையே பெரிதாக மதித்து மகிழ்வார்கள்.

இவர்கள் இப்படி நடந்துகொள்ளும்போது இவ்வியல்பு தம்மிடம் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. இப்படி நடந்துகொள்ளும் போக்கிற்குக் காரணமாயிருப்பது தம்மிடமுள்ள ஆணவமலம் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள். ஆணவமலம் தன்னைக் காட்டாமல் எண்ணிறந்த வகைகளிற் செயற்படும் என்பதை, மாந்தர் இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் விதங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஆணவ மலத்தின் இயல்பை உமாபதி சிவம்போல எடுத்துக் காட்டியவர்கள் வேறு யாருமில்லை. உலகில் இருளைவிட இருண்ட பொருள் உண்டா? உண்டு. உயிர்களிடத்தில் அஞ்ஞானமாகிய மயக்கத்தைச் செய்கின்ற ஆணவமலம் அப்படிப்பட்ட பொருள். அதன் முன்னால் உலகத்து இருளும் ஒளி என்று சொல்லும்படி ஆகிவிடும் என்றால் அந்த ஆணவ மலம் எவ்வளவு இருண்டதாக இருக்கவேண்டும்! இக் கருத்துப்பட "இருள் ஒளிர இருண்ட மோகமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்" என்று சிவப்பிரகாசத்தில் (செ.20) கூறினார் ஆசிரியர்.

மேலும் ஆணவமலம் தானொரு பொருள் இல்லை என்னும்படி உயிரில் பொருந்தியிருக்கும் எனவும், ஆணவம் உளது என்பதைத் திருவருள் துணையால் அறியலாமே யன்றி வேறு எவ்வகையாலும் அறிதல் இயலாது எனவும் அந்நூலிற் கூறியுள்ளமை (செ.36) அறியற்பாலது.

இப்படி ஆணவம் தன்னைக் காட்டாததோடு, "துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப் பொருளும்" ஆகிய பிற பொருள்களையும் உணரவிடாமற் செய்யும். இதுபற்றியே "இரு பொருளும் காட்டாது இது" என்றார் ஆசிரியர்.

முந்திய செய்யுளில் ஆணவம் இருள் போன்றது என்று குறிப்பிட்டார். இச்செய்யுளில் அஃது இருளினும் வலியது என்று கூறி அதன் கொடுமை மிகுதியை உணர்த்தினார்.

(தொடரும்...

## ஆன்மீக சிந்தனை

தெய்வ பக்தி என்னும் அகவாழ்வும், மற்றவர்களுக்குத் தொண்டு செய்வது என்னும் புறவாழ்வும் இணைந்ததே பூரண வாழ்க்கையாகும். இத்தகைய பூரண வாழ்க்கையை நாம் வாழ்ந்து பார்க்க வேண்டும். பிறரை வாழ்வித்து பார்க்க வேண்டும். எவர் ஒருவரது வாழ்க்கையில் தொண்டு இடம்பெறவில்லையோ அவரது வாழ்க்கை குறைவுடைய வாழ்க்கை ஆகும். முழுமைபெறாத வாழ்க்கை என்பதுதான் உண்மை. பிறருக்கு தொண்டு செய்வதற்குச் சில தகுதிகள் தேவை. அவற்றில் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய இரண்டையும் முக்கியமாகச் சொல்லவேண்டும்.

மக்களுக்குத் தொண்டு செய்யத் தெரிந்தவர்தான் இறைவனிடம் பக்திசெலுத்தத் தெரிந்தவனாக இருப்பான். பின் தியான வாழ்க்கையில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஞானச்சுடர்’ மூலம் ஞானம் பெற்றோம்

– திரு பா. சுதாகரன் அவர்கள் –

2011ஆம் வருடம் தென்கிழக்குப் பல்கலையில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கையில் அடுத்து வந்த ஆறுமாதத்திற்குள் மட்டுநகர் தேசிய கல்விக் கல்லூரியில் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. உடனே பல்கலை கல்வி வாய்ப்பினை விட்டு தேசிய கல்விக் கல்லூரியில் நுழைந்தபோது என்றுமில்லாதவாறு யாழ்ப்பாண நண்பர்களோடு கூடிக் குலாவி நட்புப் பரிமாற்றம் கொண்டவேளை யாழ்ப்பாணத்தை நோக்கி பயணம் மேற்கொண்டு அங்கு மல்லாகத்திலுள்ள எனது சிரேஷ்ட பயிலுனர் அரவிந்தன் மனையிலே கண்டுபிடித்த “அரும்பெரும் பொக்கிஷமே” இந்த “ஞானச்சுடர்”. எனக்கு தரம் 04இல் இருந்தே எதனைக் கண்டாலும் உடனடியாக வாசிக்க வேண்டும் என்ற பேரவா இயல்பாகவே இருந்தது. இது பாலன் என்னும் பரமேஸ்வரன் செய்த பேறோ என்னவோ! உடனடியாக கையிலிருந்த தொலைபேசியில், மல்லாகம் வைரவர் ஆலய சந்நிதிக்கு முன்னிலையிலேயே தொடர்பு ஏற்படுத்தி எமது அன்னையின் அருளால் இயங்கும் “அன்னை ஸ்ரீ சாரதாதேவி” அறநெறிப் பாடசாலைக்கும் தங்களால் வெளியிடப்படும் நூல் தேவை என கேட்க மறுப்பு எதுவுமின்றி எனது வேண்டுகோள் நிறைவேற்றம் பெற்றதனை எண்ணி நெஞ்சம் நிறைவு பெறுகின்றேன்.

குறித்த ஓரிரண்டு நாட்களுக்கிடையில் ஆத்மீகத்தின்பால் மேலும் என்னை வலுப்படுத்த எண்ணிய “ஞானச்சுடர்” கையில் கிடைத்ததும் எந்நிதியும் தரும் செல்வச் சந்நிதியானுடைய திருநீற்றை குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் கொடுத்து ஒரு நிமிடம் வீட்டிலிருந்தே அழகன் முருகனை வணங்கினோம். பின்பு ஒவ்வொரு பகுதியாக வாசித்து வாசித்து ஓரிரண்டு நாட்களுக்கிடையில் புத்தகத்தை நிறைவு செய்த நான் அத்துடன் நின்றுவிடவில்லை. எமது மண்ணிலே சமய, சமூகப் பணி புரியும் சிவதொண்டர் அணியினருக்கு இப் புத்தக உள்ளடக்கம் பற்றி விபரித்ததுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அவர்களது சேவையின் தேவையை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு எடுத்துக்காட்டி அவர்களும் “ஞானச்சுடர்” மூலம் ஞானம்பெற வைத்ததில் வைத்துக் கொண்டிருப்பதில் மன நிறைவு.

அதிலும் இவ் எண்ணப்பரிமாற்றத்தினை நான் எடுத்துரைக்க வேண்டும் என்பதில் என்னைத் தூண்டியது “200ஆவது” ஆவணிமாத இதழ் மிகமிக அருமை ஐயா. ஆழ்கடலில் முத்துத் தேடிய எனக்கு கிடைத்த ரத்தினக்கல் என்று கூறினாலும் மிகையில்லை. பொறுமையின் சிறப்பை எடுத்துக் காட்டிய வள்ளுவரது அமுதக் குறளோடும் “என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்” எனும் குருநாதனாம் யோகர் சுவாமியின் முத்தி நல்கும் மூல ஸ்தோத்திரத்துடன் அட்டையின் உட்புறம் உலாவர, பேரவைப் போஷகர் மற்றும், சைவப்புலவர் ஆகியோரது வாழ்த்துச் செய்தியையும் 1993ஆம் வருடம் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உருவாக்கம் பற்றி குறிப்பிட்ட அதேவேளை 1998ஆம் வருட முதலாவது ஞானச்சுடரை அப்படியே பிரசுரித்திருப்பதுதான் எனது மகிழ்வின் உச்ச எல்லைக்குக் காரணம்.

நீங்கள் எந்த இடம்? நானா? நான் பொலநறுவை. பொய் கூறாதீர்கள் என மறுப்புக் கூறியவர்களே அதிகம். ஆனால் உண்மையில் பொலநறுவையில் 3 கிராமங்களில் தமிழர்கள் எனும் மிச்சங்களின் எச்சங்கள் இருப்பதனையும் அவர்கள்மூலம் தமிழ் மட்டுமல்ல சைவத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை கலாசார விழுமியங்கள் வளர்க்கப்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதனையும் உலகுக்கு பறைசாற்ற முன் எமது நாட்டுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எமது பணிக்கு வலுச்சேர்க்க சந்நிதியான் அனுப்பிய தனது தூதுவர்கள் எமக்குரிய வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள் என்பதனை முதலில் கூற விளைகின்றேன்.

எமது மாவட்டத்தில் மட்டுமல்ல ஈழத்திலும் சிறப்பாக இயங்குகிறது எனும் பெயர் பெற்ற எமது பாடசாலையை மையமாகக் கொண்டு சமூகப்பணி புரிகின்ற சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு நான் வரைந்த மடலின் உதவி இவ்வருடம் 1ஆம் திகதி கிடைத்ததுகூட சந்நிதி வேலவன் செய்த சாதனை என்று கூறலாம். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 18 மாணவர்களுக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பேனைகள் என்பன இவ்வருட திருவாசக விழாவில் வைத்து என் கையில் ஒப்படைக்கப்பட்டபோதுதான் எமது சிறார்களது கல்வித் தரத்தை இன்னும் உயர்த்த வேண்டும் என்பதில் அக்கறை எனக்கு மேலும் கூடியது. காரணம் 2004ஆம் வருடம் வரை நானும் தந்தையை இழந்தவன் என்ற வகையில் சிறுவர் இல்லத்தில் வளர்க்கப்பட்டவன் என்பதனால் என்னைப் போன்று பல சிறார்களை வளர்க்க வேண்டிய தேவை எனக்குள்ளது. பின்பு மனநிறைவோடு சந்நிதியான் திருவருளால் அன்னம் அருந்தி சுவாமியின் ஆசியோடு விடைபெற்று வந்தேன்.

## சித்திரையாள் சிரிக்கின்றாள்!

பங்குனி பெற்றெடுத்த
பைந்தமிழ்ச் சித்திரையாள்
செங்கனி வாய் மலர்ந்து
சிரிக்கின்றாள்! - அவள்
பொங்கும் அழகெல்லாம்
ஓர் உருவாய் அமைந்த
தங்க நிலவாக ஜொலிக்கின்றாள்!!

வசந்தம் வரவேற்க,
வையகமே உவக்க
வருகின்றாள் இங்கு
இன்ப உலா! - நல்
இசையில் குயில்களெல்லாம்
இங்கிதமாய் வாழ்த்த
இன்பங்கள் தருகின்றாள்
இளைய நிலா!!

அல்லல்கள் ஒழிந்திடவும்
அமைதி பிறந்திடவும்
நல்வழி காட்டி வந்தாள்
நமைத் தேடி! - உயர்
செல்வமெல்லாம் பெருக
சீர்கொண்டு வந்தவளின்
சிறப்பினைப் பாடிடுவோம்
நாம் கூடி!!

*-கி. குலசேகரன்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி செய்ய நினைக்கையிலே உறுத்துகிறதே முள்ளாய்

- திரு யூ.பீ. ஆனந்தம் அவர்கள் -

பரிதாபமாய்க் காசுகேட்டு இரந்தார் ஒருவர்
பசிக்குத்தானே என்று இருப்பதை இட்டேன்
சென்றார் அவர் கடைக்கு, பசிக்கு பணிஸ்
வேண்டப் போகிறார் என நினைத்தேன்.
ஆனால் அவர் வாங்கியதோ சிகரெட்

**உதவி செய்ய நினைக்கையிலே**
**உறுத்துகிறதே முள்ளாய்**
**ஆனாலும் உதவிடுவோம்**
**சாப்பாடாகக் கொடுத்து.**

"கட்டுரை எழுத புத்தகம் தாருங்கள்"
என்று வந்தார் தெரிந்தவர். கொடுத்தேன்
பல நாளாயிற்று. மாதமாயிற்று. அவர்வீடு
நான் தேடிச் சென்றுதான் மீளப்பெற்றேன்.

**உதவி செய்ய நினைக்கையிலே**
**உறுத்துகிறதே முள்ளாய்**
**ஆனாலும் உதவிடுவோம்**
**இருந்து குறிப்பெடுத்துச் செல் என்று.**

வீட்டுத் தேவைக்கென மூவாயிரம் கேட்டார்
முனைப்பாகத் திரும்பத் தந்தார்.
ஓரிருமாதம் செல்ல மீளவும் கடன் பெற்றார்,
ஆனால் தரும் எண்ணம் துரும்புமில்லை.
தூரத்தே கண்டுவிட்டால் பாதையை மாறிச்
செல்வார் வீடுவரை சென்று கேட்டால்
விரோதியாகி விடுகின்றேன்.

**உதவி செய்ய நினைக்கையிலே**
**உறுத்துகிறதே முள்ளாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் உதவிடுவோம்
சிறு தொகைப் பணம் தானமாக.

வழிகேட்டு நின்றவர்க்கு வழிகாட்டி
நிற்கையிலே வழிப்பறிதான் செய்கின்றார்
கைப்பையோ சங்கிலியோ
அவர் பறித்துச் செல்கின்றார்
உதவி செய்ய நினைக்கையிலே
உறுத்துகிறதே முள்ளாய்
ஆனாலும் உதவிடுவோம்
தூரத்தே நின்று சொல்லி.

உழைத்து நாம் படிக்கின்றோம் என்றார்
உதவிட, பொருள் வாங்கி நின்றேன்
சென்ற பின்தான் தேடினேன்
செல்பேசியைக் காணவில்லை.
உதவி செய்ய நினைக்கையிலே
உறுத்துகிறதே முள்ளாய்
ஆனாலும் உதவிடுவோம்
வெளியே வெயிலில் நில் என்று.

தூரத்திலிருந்து வருகின்றோம்
சொட்டும் மழை. நடுநிசி
படுக்க இடம் கேட்டார்
விடியலிலே சென்று விட்டார்
வீட்டிலுள்ள சில பொருள்களுடன்
உதவி செய்ய நினைக்கையிலே
உறுத்துகிறதே முள்ளாய்
ஆனாலும் உதவிடுவோம்
கொட்டிலிலோ திண்ணையிலோ இடம்கொடுத்து.

மரணித்த மனிதத்திற்காய்
மாற்று வழிதேடி உதவி செய்து
நாமும் நன்கு வாழ்ந்து
பிறருக்கும் உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேரிராஜபுரத்தில் கோவில் கொண்டு விளங்கும் கூத்தப் பெருமானும் நாயகியும்

– அபிராமி **சிவச்சந்திரன்** அவர்கள் –

"வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசும் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசனெனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் நமையாள்வான் நல்லம் நகரானே"

-திருஞானசம்பந்தர்-

பாரததேசம் எங்கணும் பரந்து அமைந்து விளங்கும் பற்பல சிவாலயங்களுள் வரலாற்றுச் சிறப்புக் கொண்ட கோணேரிராஜபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து பேரருள் சுரக்கின்ற மங்களாம்பிகை உடனுறை ஸ்ரீ உமாமகேஷ்வரப் பெருமானைக் கண்டு ஆராதிக்கும் ஒரு அரிய பேறு அண்மையில் எனக்குக் கிட்டியது. இத்தலத்தில் எமக்குக் கிடைக்கப்பெற்ற அனுபவங்களையும் இத்தலம் பற்றி அறியக் கிடைத்தவற்றையும் சிவநேயர்களுடன் பகிர்ந்துகொள்ளும் ஆவலுடன் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

கோணேரிராஜபுரத்தில் அமைந்துள்ள இச்சிவஸ்தலம் பண்டைய காலத்தில் திருநல்லம் என நாமங்கொண்டு விளங்கிற்று. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருநல்லம் மேவிய நாதன்மீது தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளனர். இவர்கள் பாடிய தேவாரங்கள் முழுவதும் கோயிலின் உட்பிரகாரத்துச் சுவர்களில் எழுதப்பெற்றுள்ளமையால் இக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களும் அங்கு இருந்துகொண்டு இப்பதிகங்களைப் பாடிப் பயன்பெற வாய்ப்பாக உள்ளது. சோழ இராச்சியத்தின் தென்காவேரிக் கரையில் அமைந்த கோவில்களில் இது முப்பத்துநான்காவது தேவாரத் தலமாகப் போற்றப்படுகின்றது. குத்தாலம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலமைந்த இக்கோவில் திருவிடைமருதூரிலிருந்து தெற்கே சுமார் பத்து கிலோமீற்றர் தூரத்தில் கும்பகோணத்தையும் காரைக்காலையும் இணைக்கும் பாதையில் அமைந்துள்ளது. இப்பாதையோரத்தில் அல்லாமல் ஊருக்குள் செல்லும் சிறு பாதைகளினூடாகச் சென்று இக்கோவிலை அடைய முடியும்.

ராஜராஜ சோழனின் பேத்தியும் கண்டராதித்தசோழனின் மனைவியுமான செம்பியன் மாதேவியினால் பத்தாம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. இக்கோவிலின் சிறப்பம்சங்களையும் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இங்கு மூலவராக லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள இறைவன் ஸ்ரீ உமாமகேஷ்வரர் எனும் நாமம் கொண்டுள்ளார். அவருடன் உடனுறை தேவியாம் ஸ்ரீ மங்களாம்பிகை, அங்கவள நாயகி, தேகசுந்தரி எனும் திருநாமங்களாலும் போற்றப்படுகிறார். இத்திருத்தலத்தில் மூலவராகிய ஸ்ரீ உமாமகேஷ்வரர் மேற்கு நோக்கியும் அம்மை அங்கவள நாயகி கிழக்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளமை இங்கு காணக்கிடைக்கும் ஒரு சிறப்பம்சமாகும். இத்திருத்தலம் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரங்களைக் கொண்டமைந்துள்ளது. அங்கவள நாயகித் தாயார் சந்நிதி, இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ளது. அதே பிரகாரத்திலே மூலவருக்கு வடகிழக்குத் திசையில் வணங்குவார் பிணி தீர்க்கும் வைத்தீஸ்வர சுவாமி சிவலிங்க வடிவில் காட்சி தரும் சந்நிதி அமைந்துள்ளது.

கோவிலின் உட்பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள பல மூர்த்திகளின் சந்நிதிகளுள் வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் சந்நிதியும் ஒன்றாகும். கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள், வில்வார்ச்சனை என்பன இடம்பெறும். நாம் இத்தலத்தைத் தரிசிக்கக் கிடைத்த தினம் கார்த்திகைக் கார்த்திகைத் திருநாள் என்பதனால் அங்கு நிகழ்ந்த வில்வார்ச்சனையைக் கண்டு அனுபவிக்கவும் நிவேதிக்கப்பட்ட வெண்சாதப் பிரசாதத்தைப் பெற்று அருந்தவும் பாக்கியம் பெற்றிருந்தோம்.

இக்கோவிலின் தனிச்சிறப்பே இங்கு எழுந்தருளி சேவை சாதிக்கும் பஞ்சலோகத் தாலான சுயம்பு நடராஜப்பெருமானும் சிவகாமி அம்மையுமே. இது தமிழ்நாட்டிலுள்ள மூன்று சிறப்பு வாய்ந்த சுயம்பு நடராஜர் சிலைகளுள் ஒன்றாகும். மற்றையவை முறையே கல்லாலமைந்த சுயம்பு நடராஜர் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும் மரகதத்தாலமைந்த சுயம்பு நடராஜர் உத்தரகோச மங்கையிலும் காணப்படுகின்றன.

கோணேரிராஜபுரத்து ஸ்ரீ நடராஜர் சுயம்பு வடிவம் ஒன்பது அடி உயரத்திற்கு உயர்ந்து நிற்கிறது. இச்சுயம்பு வடிவம் உருப்பெற்ற வரலாறு இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது.

அரசன் கண்டராதித்த சோழன் ஒரு பிரமாண்டமான கண்ணைக் கவரும் உயிரோட்ட மான நடராஜர் உருவத்தை உருவாக்கி இக்கோவிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று பேரவாக் கொண்டான். எனவே இப்பணியை அக்கிராமத்தில் வாழ்ந்து வந்த ஒரு கைதேர்ந்த ஸ்தபதியிடம் ஒப்படைத்தான். பரம சிவபக்தரான அந்த ஸ்தபதியும் அரசனின் கட்டளையை அகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு மிகவும் உற்சாகத்துடனும் பக்தி சிரத்தையுடனும் இந்த சிவப்பணியில் ஈடுபடலானார். உருக்கி நியமப்படி கலக்கப்பட்ட பஞ்சலோகத் திரவத்தை சிலை வார்க்கும் அச்சில் ஊற்றி ஓர் நடராஜர் சிலையைச் செய்து முடித்தார். ஆனால் அச்சிலை அரசன் தான் நினைத்தவாறு ஒரு முழு மனித அளவில் அமையாத காரணத்தால் அதனை அங்கீகரிக்கவில்லை. இவ்வாறாக ஸ்தபதியின் அடுத்தடுத்த மூன்று முயற்சிகளின் விளைவுகளும் அரசனால் நிராகரிக்கப்பட்டன. இறுதியாக அரசன் ஸ்தபதிக்கு ஒரு இறுதிக் காலக்கெடுவை குறித்து இக்காலக்கெடுவினுள் அரசன் எதிர்பார்த்த அம்சங்களுடன் கூடிய சிலையை உருவாக்கத் தவறினால் அவரது தலை துண்டிக்கப்படும் என எச்சரித்தான். அரசனின் இந்த ஆணையால் மனம் நொந்த ஸ்தபதி இறைவனை மிகவும் வருந்திப் பிரார்த் தித்தபடி தனக்கிட்ட பணியை மீண்டும் தொடரலானார். நாட்கள் வேகமாக உருண்டோடின. குறித்த கால எல்லையும் அண்மித்துக்கொண்டிருந்தது. இருப்பினும் அரசனின் விருப்பத்திற் கமைந்த நடராஜர் சிலை இன்னமும் உருவானபாடில்லை. மிகுந்த விரக்தியும் மனச்சோர்வுமுற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தபதி இறைவனைப் பிரார்த்தித்த வண்ணம் உருக்கிய பஞ்சலோகத்தை மீண்டும் அச்சில் வார்ப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையில்தான் இறைவன் அவ் அற்புதத்தை நிகழ்த்தத் திருவுளம் கொண்டார் போலும்.

அவ்வேளையில் ஒரு வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் அங்கே தோன்றி தமது தாகத்தைத் தீர்ப்பதற்கு தண்ணீர் தரும்படி இந்த ஸ்தபதியிடம் வேண்டினர். முன்னரே மனவேதனையுடனும் பதட்டத்துடனும் இருந்த ஸ்தபதி சினமடைந்து உருக்கிய பஞ்சலோகமே தன்னிடம் இருப்பதாகவும் வேண்டுமானால் அதைப் பருகும் படியும் கூறினார். ஆனால் அத்தம்பதியினரோ மிகவும் சந்தோஷமாக அவ்வுலோகத் திரவத்தை உடனே பருகிவிட்டனர். இதனைச் சற்றும் எதிர்பாராத ஸ்தபதி வாயடைத்துப்போய் செய்வதறியாது திகைத்து நின்றார். கண்ணிமைப்பதற்குள் ஸ்தபதி ஆச்சரியப்படும் வகையில் அத்தம்பதியினர் கண்ணைக் கவரும் அழகுடனும் தேஜசுடனும் கூடிய பிரமாண்டமான சிவகாமசுந்தரி அம்பாள் சமேத நடராஜர் சிலையாகக் காட்சியளித்தனர்.

அவ்வற்புதம் நிகழ்ந்த சற்று நேரத்தின் பின்னர் ஸ்தபதியின் வேலையைப் பார்வையிடு வதற்காக அங்கு வந்த அரசனும் அரசியும் அங்கே காணப்பட்ட சிலைகளைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர். அரசன் ஸ்தபதியிடம் இதனை எவ்வாறு உருவாக்க முடிந்ததென வினவவும் ஸ்தபதியும் இங்கு நிகழ்ந்த அற்புதத்தை பக்தியினால் நாத்தழுதழுக்க எடுத்து இயம்பினார். ஆனால் அரசனோ ஸ்தபதியின் கூற்றை நம்ப மறுத்தவனாக கோபத்துடன் தனது வாளை எடுத்தான். அவ்வாள் அந்த நடராஜரின் தூக்கிய திருவடியில் பட்டதும் அச்சிலையிலிருந்து இரத்தம் பெருகியது. வாளைத் தூக்கிய அரசன் உடனே தொழுநோய் வாய்ப்பட்டவன் ஆகினான். இதனால் தான் இழைத்த தவறை உணர்ந்து வருந்தினான் அரசன். கருணையுள்ளம் கொண்ட இறைவன் அரசனிடம், தான் இக்கோவிலில் வைத்தியநாத சுவாமியாக எழுந்தருளுவதாகவும் தன்னை அக்கோலத்தில் வழிபட்டால் அவன் தொழுநோய் குணமடையப் பெறுவான் எனவும் அறியத்தருளினார். அவ்வண்ணமே வைத்தியநாதரை வழிபட்டு அரசனும் சில காலத்தில் தொழுநோய் நீங்கப் பெற்றான். முன்னர் குறிப்பிட்டவாறு இரண்டாவது பிரகாரத்தில் சந்நிதி கொண்டிருக்கும் வைத்தியநாத ஸ்வாமியே அரசனின் தொழுநோய் தீர்த்தவராவார்.

அன்றுமுதல் இன்றுவரை பக்தர்கள் பலர் இவ் வைத்தியநாத சுவாமியை வழிபட்டுப் பல்வேறுபட்ட தீராத நோய்கள் நீங்கப்பெற்று வருகின்றனர். இச்சந்நிதியின் கோமுகித் தீர்த்தம் நோய் தீர்க்கும் மருந்தாகப் போற்றப்பட்டு அடியார்களால் அருந்தப்படுகிறது.

கோவிலின் கோபுரவாசல் வழியாக உட்பிரகாரத்திற்குள் நுழைந்தால் எமது இடதுபுறமாக மேல் விபரித்த சுயம்பு நடராஜர் அம்பாளுடன் சந்நிதி கொண்டுள்ளார்.

அர்ச்சகரின் வழிகாட்டல் மற்றும் உதவியுடன் அந்த அற்புதக் கூத்தனையும் நாயகியையும் மிக அருகாமையில் தரிசிக்கும் பெரும் பேறு கிட்டியது. அழகும் சாந்தமும் நிறைந்த திருமுகப் பொலிவுடன் அம்மையப்பர் காட்சிதருகின்றனர். அம்மையப்பரின் சிரசிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்புறமாயுள்ள தளத்தில் உருத்ராட்ச சபை அமைந்து அச்சந்நிதிக்கு மேலும் மெருகூட்டு கிறது. இதில் உருத்திராட்ச மாலைகள் பலவற்றாலான அலங்காரம் அமைந்து அதன் நடுவே உருத்திராட்சத்தினாலான சிவலிங்கமும் அமைந்து காணப்படுகிறது. உற்றுநோக்கியபோது நடராஜரின் மேலேயுள்ள கைகளில் தேமலும் கீழ் நோக்கிய கைகளில் அக்குளுக்குக் கிட்டவாக ஒரு பாலுண்ணி போன்ற காயும் அதே கையில் நுட்பமாகத் தெரியும். உரோமங்களும் தூக்கிய திருவடியில் பாதத்திற்குச் சற்று மேலே மேற்கூறியவாறு மன்னனின் வாளால் ஏற்படுத்தப்பட்ட தழும்பு நெடுக்கு முகமாகவும் அதைச் சூழ மேலும் சில காயத் தழும்புகளும் பாதங்களில் புலப்படும்படி கணுக்கால் எலும்பு மூட்டு அடர்ந்த சடாமுடியில் கங்கையும், ராகு கேதுவும் அபயகரத்தில் தெளிவான ரேகைகளும் காணப்படுகின்றன. அபிஷேகத்தின்போது ஊன்றிய திருவடியிலுள்ள உரோமங்கள் தெளிவாகப் புலப்படுவதாகவும் திருவுருவத்தில் சிரசில் அபிஷேகம் செய்யப்படும் பால் இடது கரம் வழியாக தூக்கிய திருவடிக்கு வந்து பாதத்திலிருந்து தரைக்கு வருவதாகவும் அர்ச்சகரிடமிருந்து அறிய முடிந்தது. திருவாதிரை நாள் அபிஷேகத்தின்போது சிறிய உரோமங்கள் பெருமானின் திருமேனியிலிருந்து உதிர்வதாகவும் கூறப்படுகிறது.

இச்சுயம்பு வடிவச் சிலைகள் என்றுமே வீதியுலா போன்றவற்றிற்காக வெளியே எடுத்துச் செல்லப்படுவதில்லை. அந்நியராட்சிக் காலங்களிலோ மற்றும் போர்க்காலங்களிலோ இவை வெளியே எடுத்துச் செல்லப்பட முடியாத வண்ணம் இச்சந்நிதியின் வாயில் திருவுருவச் சிலைகளின் உயர அகலங்களை விட அளவில் சிறியதாகக் கோப்பெருந்தேவியினால் அமைக்கப்பட்டதாகவும் கூறக்கேட்டோம்.

விசாலமான இரண்டாம் பிரகாரத்தின் பின்புறத்தே மரங்கள் சோலையாக அடர்ந்து அமைந்துள்ளன. இங்கு காணப்படும் வில்வம் மகாவில்வம் எனப்படும். இது ஒரு அற்புத வில்வமாகும். பொதுவாக வில்வ பத்திரத்தின் ஒரு நெட்டில் மூன்று இலைகள் இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் இந்த மகாவில்வத்தில் சில சமயங்களில் ஒரு நெட்டில் பதின் மூன்று இலைகள் வரை காணப்படுவதாகவும் அறியமுடிந்தது.

இக்கோவில் மிகவும் அமைதியான கிராமத்துச் சூழலில் அமைந்துள்ளது. கோவிலின் கோபுரவாசலுக்கு எதிரே பூமி தீர்த்தம் எனப் பெயர் பெற்ற அழகிய பெரிய தீர்த்தக்கேணி உள்ளது. அத்தோடு கோவிலின் மறுபுறத்தே பிரம்மதீர்த்தம் உள்ளதாக கோயில் பூசகரிட மிருந்து அறியமுடிந்தது.

வந்தாரை வரவேற்கும் பண்பும் இக்கோவிலில் நிறைந்திருப்பதற்குச் சான்றாக நாம் எல்லோரும் கோவில் அறங்காவலர்களினால் அன்னதானத்திற்கு விரும்பி அழைக்கப்பட்டோம். அமுதம் போன்ற அன்னாகாரத்தை அக்கிராம மக்களின் அன்பு கலந்த பரிமாறலுடன் அவர்களுடனே அமர்ந்து அன்னம் உண்டு மகிழ்ந்தமையையும் ஒரு மறக்க முடியாத அனுபவம் தான்.

பூர்வ ஜன்ம புண்ணியத்தினால் மட்டுமே இக்கோவிலைச் சென்றடைவதும் இறை வனைத் தரிசிப்பதும் கைகூடும் என்பது திருநாவுக்கரசு நாயனார் அருள்வாக்கு. இவ்வாக்கின் உண்மையை திருநல்லம் ஆலயத்தை தரிசித்தபோதே உணரமுடிந்தது.

-ஓம் நமசிவாய-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் 2015 வைகாசி மலர்

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

**05.06.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**விடயம்** :- **“இன்னிசை”**

**வழங்குபவர்** :- **நுண்கலைமாணி திருமதி வானதி மகிந்தன்** அவர்கள்

[ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி]

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**12.06.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**விடயம்** :- **“கலைநிகழ்வு”**

**வழங்குபவர்கள்** :- **யா/ தொண்டைமானாறு வீ.ம.வி மாணவர்கள்**

---

**19.06.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு** :- **“தேவி பாகவதம்” (தொடர்)**

**வழங்குபவர்** :- **திரு அ. குமாரவேல்** அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**26.06.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை** :- **பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி)** அவர்கள்

**மதிப்பீட்டுரை** :- **திரு க. நவரத்தினம்** அவர்கள்

[இளை. ஆசிரியர், நெல்லியடி]

## 210ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org